## 1

# நான்கு சுவிசேஷங்களின் விவரங்கள்

## மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்

*புதிய ஏற்பாட்டில் எழுத்தாளர்களின் பெயர்களினாலேயே வழங்கப் படும் முதல் நான்கு புத்தகங்களுடன் ஒரு படிப்பை நாம் தொடங்கு கின்றோம்:*

*மத்தேயு - ஒரு முன்னாள் ஆயக்காரர் மற்றும் இயேசுவின் அப்போஸ்தலர்.*

*மாற்கு - அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் வருகின்ற யோவான் மாற்கு, அப்போஸ்தலர்களின் காலத்தில் ஒரு இளம் பிரசங்கியார்.*

*லூக்கா - மருத்துவர். லூக்கா, ரோமாபுரிப் பயணம் உட்பட, பவுலின் சுவிசேஷப் பயணங்கள் பலவற்றில் அவருடன் இணைந்து சென்றவர்.*

*யோவான் - ஒரு முன்னாள் மீனவர் மற்றும் ''அன்பார்ந்த'' அப்போஸ்தலர்.*

*இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் நாம், மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷப் புத்தகங்களைத் தனித்தனியே கண்ணோக்குவோம், ஆனால் முதலில் நாம் இவற்றை மொத்தமாகச் சிந்தித்துப் பார்க்க விரும்புகின்றோம்.*

### ஒரே வரலாற்றின் நான்கு விவரங்கள்

*மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய புத்தகங்கள் "நான்கு சுவிசேஷங்கள்" என்று அடிக்கடி அழைக்கப்படுகின்றன, ஆனால் உண்மை யில் அவை ஒரே சுவிசேஷத்தின் நான்கு விவரங்களாவே உள்ளன.*[1]

*இவற்றில் முதல் மூன்று புத்தகங்கள் "ஒப்பீட்டு சுவிசேஷ நூல்கள்" என்று பொதுவாக அழைக்கப்படுகின்றன. "ஒப்பீட்டு" என்பது* [synoptic] *"ஒன்று சேர்த்து" என்பதற்கான கிரேக்க வார்த்தையுடன், "காணுதல் அல்லது கண்ணோக்குதல்'' என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையை இணைத்துப் பெற்ற ஒரு கூட்டுச் சொல்லாக உள்ளது. "ஒப்பீட்டு நூல்" என்பது இவ்விதமாக "ஒன்றாகக் காணுதல்" என்று அர்த்தப்படுகின்றது. முதல் மூன்று புத்தகங்கள் இயேசுவைப் பற்றிய ஒத்த கண்ணோக்குகளை முன்னிறுத்துவதால் அவைகள் ''ஒப்பீட்டு சுவிசேஷ நூல்கள்'' என்று*

*குறிப்பிடப்படுகின்றன. இவை மூன்றும் அநேகமாக, கி.பி. 70ல் எருசலேமின் அழிவுக்கு முன்னதாகவே எழுதப்பட்டிருக்க வேண்டும்.*

*யோவான் சுவிசேஷமானது மற்ற மூன்று சுவிசேஷப் புத்தகங்களி லிருந்து சற்று மாறுபட்ட அணுகுமுறையை மேற்கொள்வதால், இது சில வேளைகளில் "சுவிசேஷத்தின் தற்கண்ணோக்கு [சுய கண்ணோட்டம்]"[2] என்று அழைக்கப்படுகிறது. யோவானின் சுவிசேஷமானது அநேகமாக முதல் மூன்று சுவிசேஷங்களுக்கும் பிற்பாடு, முதல் நூற்றாண்டின் முடிவின் போது, கி.பி. 90களில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.*

## *நான்கு விவரங்கள் எதற்காக?*

*ஒரே கால வேளையையும் ஒரே வரலாற்றையும் உள்ளடக்குகிற நான்கு புத்தகங்களைத் தேவன் நமக்கு ஏன் கொடுத்தார்? வேத வசனங்களில், மற்ற சில காலங்களும் ஒன்றுக்கு மேற்பட்ட புத்தகங்களினால் எடுத்துரைக்கப் படுகின்றன (1 சாமுவேல் முதல் 2 இராஜாக்கள் வரையுள்ளவற்றில் பல நிகழ்ச்சிகள் மீண்டும் 1 மற்றும் 2 நாளாகமங்களில் தரப்படுகின்றன), ஆனால் ஒரே வரலாற்றைப் பற்றி நான்கு விவரங்கள் தருவதென்பது வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது.*

*சபையின் தொடக்க கால வரலாற்றில், நான்கு [சுவிசேஷ] விவரங்கள் இருந்தது ஏன் என்பதைப் பற்றி மனிதர்கள் யூகம் செய்தார்கள். "நான்கு என்பது மனிதனின் அடையாள எண்ணாக உள்ளது" என்பது ஒரு யூகமாக இருந்தது. இந்தக் குறிப்பிட்ட எண்ணில் தேவன் முடிவு செய்தது ஏன் என்று நாம் அறிவது இல்லை, ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட விவரங்களை அவர் ஏவினார் என்ற உண்மையானது, பல விஷயங்களைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

*(1) இயேசுவின் வரலாறு எவ்வளவு முக்கியமானது என்பதை நான்கு [சுவிசேஷ] விவரங்கள் காண்பிக்கின்றன.*

*(2) நான்கு [சுவிசேஷ] விவரங்களும் இயேசுவின் வரலாற்றை அதிகாரத்துவப்படுத்துதலின் அவசியத்தை மனதில் பதியச் செய்கின்றன. மோசே, "இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலை வரப்பட வேண்டும்" (உபா. 19:15ஆ) என்று கூறினார். நான்கு சாட்சிகள் என்பது இன்னும் சிறப்பானதாக உள்ளது.*

*(3) நான்கு [சுவிசேஷ] விவரங்கள் இயேசுவின் பன்முக இயல்பை வெளிப்படுத்துகிறது. ஒரே எழுத்தாளர் அநேகமாக ஒருபோதும் அவருக்கு [இயேசுவுக்கு] நியாயம் செய்கின்றவராக இருப்பதில்லை.*

> *இலண்டனில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில், ஒரு கேன்வாஸ் திரையில் முதலாம் சார்லஸின் மூன்று உருவச் சித்திரங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றில் அவரது தலை வலது புறம் திரும்பியுள்ளது; இன்னொன்றில் இடதுபுறம் திரும்பியுள்ளது; மற்றும் நடுவில், நாம் அவரது முழுமுகத்தின் கண்ணோட்டத்தைக் காண்கின்றோம். இந்தப் படைப்பின் வரலாறு பின்வருமாறு: வான் டைக் என்பவர், ரோமச் சிற்பியான பெர்னினீ என்பவர் அரசரின் மார்பளவு உருவச் சிலையை உருவாக்க உதவுவதற்காக அவற்றை வரைந்தார். இவ்விதமாகப்*

பெற்றுக்கொண்ட உருவப் பதிவுகளை ஒன்றிணைத்ததின் மூலம் பெர்னினீ, "பேசுவது" போன்ற ஒரு உருவகத்தை உண்டாக்க முடிந்தது. ஒரே கண்ணோட்டம் என்பது போதுமானதாக இல்லாதிருந்தது.

இந்தச் சித்தரிப்புகளின் நோக்கத்திற்குப் பயன்படுதல் என்பதையே சுவிசேஷங்கள் தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன என்பது உண்மையாக இருக்கலாம். ஒவ்வொன்றும் இந்தப் பூமியில் நமது கர்த்தருடைய வாழ்வின் மாறுபட்ட அம்சம் ஒன்றை முன்னிறுத்துகின்றன. இவைகளை ஒன்றுகூட்டிக் காணும்போது, நாம் ஒரு முழுமையான சித்தரிப்பைப் பெறுகின்றோம். அவர் ஒரு ராஜாவாயிருந்தார், ஆனால் அவர் ஒரு பூரணமான ஊழியக்காரராக வும் இருந்தார். அவர் மனித குமாரனாக இருந்தார், ஆனாலும் அவர் தேவகுமாரனாகவும் இருந்தார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.[3]

## நான்கு விவரங்களையும் ஒப்பிடுதல்

இந்த நான்கு விவரங்களுமே - இயேசுவை வெளிப்படுத்துதல் என்ற - ஒரே அடிப்படை நோக்கத்தைக் கொண்டிருந்தன, ஆனால் இவை ஒவ்வொன்றும் சற்றே மாறுபட்ட கண்ணோட்டத்தில் இருந்து எழுதப் பட்டன, இது சற்றே மாறுபட்ட மக்கள் கூட்டத்தினருக்கு ஏற்புடையதாக இருக்கும்படி இவ்வாறு எழுதப்பட்டன என்பது உறுதி.[4] கீழே உள்ள அட்டவணையானது இந்த நான்கு விவரங்களையும் ஒப்பிடுகிறது.

மத்தேயு அடிப்படையில் யூதர்களுக்காக எழுதினார் என்பது உறுதி. அவர் நூற்றுக்கும் மேற்பட்ட பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளை மேற்கோள் காண்பித்து, "தாவீதின் குமாரன்" (மத். 1:1) என்பது போன்ற யூதர்களுக்குப் பழக்கமான சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். அவர் இயேசுவை, தமது இராஜ்யத்தை அமைக்க வந்த ஒரு ராஜாவாக முன்னிறுத்தினார்; "இராஜ்யம்" என்ற வார்த்தை இந்தப் புத்தகத்தில் ஐம்பத்து ஐந்து முறைகள் காணப்படுகின்றன. அவர் இயேசுவை மேசியா என்ற வகையில் விசேஷமாக வலியுறுத்தி, அவரது போதனைகள், அவரது இராஜ்யம் மற்றும் அவரது அதிகாரத்துவம் ஆகியவற்றைப் பற்றி எழுதினார்.[5]

மத்தேயுவைப் போலின்றி, யூதரல்லாத மக்கள் கூட்டத்திற்கு மாற்கு எழுதியுள்ளதாகக் காணப்படுகிறது. இவர், வம்ச வரலாறு போன்ற, புறஜாதியாருக்குச் சிறிதளவே ஆர்வமுள்ள விஷயங்களை நீக்கிவிட்டார். இவர் யூதப் பாரம்பரியத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, வழக்கமாக அவற்றை இவர் விளக்கப்படுத்தினார். மாற்கு ரோம மக்கள் கூட்டத்திற்கு எழுதினார் என்றே பல எழுத்தாளர்கள் நினைக்கின்றார்கள்;[6] இவர் சிலவேளைகளில், மற்ற எழுத்தாளர்கள் கிரேக்கச் சொற்றொடர்களைப் பயன்படுத்தி இருக்கும் இடங்களில் இலத்தீன் சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். அலெக்சந்திரியாவின் கிளெமெண்ட் (c. கி.பி. 150-215) அவர்களின் கூற்றுப்படி, மாற்கு, கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிப் பேதுருவின் மூலம் அவர் கேள்விப்பட்ட விதமாகவே பதிவு செய்யும்படி ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களிடமிருந்து ஒரு வேண்டுகோளைப் பெற்றிருந்தார்.[7] இயேசு போதித்தவற்றைக்காட்டிலும் அவர் செய்தவற்றின் மீது மாற்கு அதிகம் அக்கறையுள்ளவராக இருந்தார் என்று காணப்படுகிறது.

*இவர் இயேசுவை ஒரு ஊழியக்காரராக, பிறருக்கு உதவி செய்பவராக (மாற். 10:45) முன்னிறுத்தினார். இயேசுவின் அற்புதங்களில், மக்கள்மீது கர்த்தருடைய அன்பும் அக்கறையும் காணப்பட முடிவதால் அவர் அவற்றையே வலியுறுத்தினார்.*

*மாற்குவைப் போலவே லூக்காவும் யூதரல்லாத மக்கள் கூட்டத்திற்கே எழுதினார் என்பது உறுதி. ஆயினும், மாற்குவின் விவரமானது செயல்களில் பழக்கப்பட்ட ரோமர்களுக்கு எழுதப்பட்டு இருக்கையில், லூக்காவின் விவரமானது மதிநுட்பம் வாய்ந்த மாணவர்களுக்கு எழுதப்பட்டதாகக் காணப்படுகிறது. லூக்கா, கிரேக்க மக்கள் கூட்டத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று பலர் முடிவு செய்கின்றார்கள். இவரது விவரமானது இயேசுவை "மனித குமாரனாக" (லூக். 19:10) முன்னிறுத்தி, அவரது பரிபூரணமான மனிதத்துவத்தின்மீது விசேஷித்த வலியுறுத்தத்தை வைக்கிறது.*

*யோவானின் விவரமானது ஒருவேளை மற்ற மூவரின் பிந்திய நாட்களில் எழுதப்பட்டிருக்கலாம், மற்றும் அது தன் தனிப்பட்ட சிறப்பு வலியுறுத்தங்களைக் கொண்டதாயிருக்கிறது. இயேசுவின் இயல்பு பற்றி எழுந்திருந்த தவறான கருத்துக்கள் விசுவாசிகளின் மத்தியில் குழப்பம் உண்டாகக் காரணமாக இருந்தன. யோவான், இயேசுவை "தேவ குமாரனாக" (யோவா. 20:31) முன்னிறுத்தி, அவரது தெய்வீகத்துவத்தை வலியுறுத்தினார்.*

*இன்றைய நாட்களில், மத்தேயு சுவிசேஷம் வேதாகம மாணவர்களுக்கு விசேஷமாக வேண்டுகோளாக உள்ளது, மற்றும் மாற்கு சுவிசேஷம் வியாபாரிகள் உட்பட சராசரி நபருக்கு விசேஷமான வேண்டுகோளாக உள்ளது, அதே வேளையில் லூக்கா விசேஷமாகக் கல்வியாளர்களுக்கும், சிந்தனையாளர்களுக்கும், உயர்நோக்குடையவர்களுக்கும் மற்றும் சத்தியத்தை நாடுபவர்களுக்கும் வேண்டுகோளாக உள்ளது என்று கூற முடியும். இதற்கு மறுபுறத்தில், யோவான் சுவிசேஷம் "உலகளாவிய சுவிசேஷம்" என்று அழைக்கப்படுகிறது, இது எல்லாக் காலத்திலும் எல்லா மக்களுக்கும் வேண்டுகோளாக உள்ளது.*

*மற்றும் மத்தேயு, இயேசுவை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகராகவும்; மாற்கு, இயேசுவை வல்லமையுள்ள இரட்சகராகவும், லூக்கா இயேசுவை பரிபூரண இரட்சகராகவும்; யோவான், இயேசுவை ஒருவருக்கு சொந்தமான இரட்சகராகவும் அறிமுகப்படுத்துதல் நோக்கமாயிருந்தது என்று நாம் கூற முடியும். ஆயினும் இந்தத் தனித்தன்மைகளை நாம் ஏற்படுத்துகையில், இந்த புத்தகங்கள் ஒவ்வொன்றின் நிறைவான நோக்கம் ஒரே மாதிரியாகவே இருக்கிறது என்ற உண்மையைக் காணுவதை நாம் இழந்துவிடக் கூடாது: இயேசுவைப் பற்றிய இரட்சிக்கப்படும் ஒரு அறிவினிடத்தில் எல்லா மனிதர்களையும் கொண்டுவருதல்!*

## நான்கு விவரங்களும் எவற்றை எடுத்துரைக்கின்றன

*"மனித வரலாறு" [ஒரு நபரின் வரலாறு] என்ற சொற்றொடர் சில வேளைகளில் சுவிசேஷ விவரங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது, ஆனால்*

இந்த வார்த்தையின் கண்டிப்பான கருத்தில், இந்த நான்கு புத்தகங்களும் [இயேசு என்ற] ஒரு நபரின் வரலாறுகளாய் [மாத்திரம்] இருப்பதில்லை. மாறாக இவைகள் “போதனை எடுத்துரைப்புகளாக” உள்ள. (“போதனை” என்பதற்கான ஆங்கில வார்த்தையானது “போதித்தல்” என்று அடிப்படை யாக அர்த்தப்படுகிற “Didactic” என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது.) இந்த சுவிசேஷங்களின் விவரங்கள் ஏன் உண்மையில் வரலாறுகளாய் [மாத்திரம்] இருப்பது இல்லை என்பதற்கு இங்கு ஒரு சில காரணங்கள் தரப்படுகின்றன:

(1) இவைகள் இயேசுவின் வாழ்வு முழுவதையும் எடுத்துரைப்பதற்கு முயற்சி செய்வதில்லை. அவரது வாழ்வின் முதல் முப்பது ஆண்டுகள் பற்றிய விவரங்கள் ஏறக்குறைய கூறப்படவில்லை, அதே வேளையில், நான்கு விவரங்களிலும் சேர்த்து ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு வேத வசனப் பகுதிகள் (இயேசுவின் மரணம் என்ற) ஒரே நிகழ்ச்சிக்கு சம்பந்தப்பட்ட வைகளாக உள்ளன. இயேசுவின் பன்னிரெண்டு வயது முதல் முப்பது வயது வரையிலும் நடந்த எந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றியும் பதிவு எதையும் நாம் கொண்டிருப்பதில்லை. எனது வாழ்வைப் பற்றி எழுதும் யாரேனும் ஒருவர், எனது பன்னிரெண்டு வயது முதல் முப்பது வயது வரை நடந்த நிகழ்ச்சிகளை விட்டுவிட்டிருந்தால், நான் எவ்வாறு எனது மனைவியைச் சந்தித்தேன் என்பதற்கோ அல்லது நான் பிரசங்கிக்க முடிவுசெய்தது ஏன் என்பதற்கோ சுட்டிக் காண்பித்தல் எதுவும் இருக்காது, மற்றும் எனது திருமணம், நான் ஊழியம் செய்யத் தொடங்கியது அல்லது எனது பிள்ளைகளின் பிறப்பு ஆகியவை பற்றிய பதிவு எதுவும் இருக்காது. அது ஒரு வினோதமான வரலாற்றுக் குறிப்பாகவே இருக்கும்!

(2) இந்த விவரங்கள், அடிப்படையில் ஒரு நாள் வரிசை அணுகுமுறையை - பிறப்பு, பிள்ளைப் பருவம், ஞானஸ்நானம், ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவைகளை - பயன்படுத்தினாலும், நாள் வரிசை அமைவு முறை என்பது எழுத்தாளர்களுக்கு எப்போதுமே முக்கியமானதாக இருந்திருக்கவில்லை. அவர்கள் குறிப்பிட்ட சத்தியங் களை வலியுறுத்துகின்ற நிகழ்ச்சிகளை ஒன்றாக அடிக்கடிச் சேர்த்துக் கொடுத்தார்கள்.

(3) இந்த எழுத்தாளர்களில் எவரும் இயேசுவின் உடல் தோற்றத்தைப் பற்றி விவரிக்கவில்லை. எந்த வரலாற்று ஆசிரியராவது அதைச் செய்வதற்கு எப்போதாவது தவறியிருக்கின்றாரா?

இந்த நான்கு புத்தகங்களும் போதனை முறை எடுத்துரைப்புக்களாக இருப்பதால், இவைகள் நாள் வரிசை அமைவுமுறையைப் பற்றி அதிகம் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை, இந்த நான்கு விவரங்களையும் ஒரே ஒரு எடுத்துரைப்பாக(ஒரு “இசைவாக”)ப் பொருத்துதல் என்பது சுலபமானது அல்ல. ஆயினும், முன்பே குறிப்பிட்டபடி, இதை முயற்சி செய்வதில் பலன் இருக்கக் கூடும். “சுவிசேஷ விவரங்களில் எடுத்துரைக்கப் பட்ட பாடக் கருத்துக்கள்” என்ற அட்டவணையானது இயேசுவின் ஒன்றுகூட்டப்பட்ட வரலாற்றிற்கு இந்த நான்கு புத்தகங்கள் ஒவ்வொன்றும் பங்களித்துள்ளமை பற்றிய ஒரு கருத்தை உங்களுக்குக் கொடுக்கும்.

*ஒப்பீட்டு சுவிசேஷங்களின் விவரங்கள் அடிப்படையில் ஒரே பாடப் பொருளை முன்னிறுத்துகையில் யோவானின் விவரமானது கூடுதல் பாடப்பொருளை முக்கியமாக முன்னிறுத்துகிறது என்பதைக் கவனியுங்கள். ஒரே காலகட்டத்தில் நடந்தவற்றை எடுத்துரைக்கையிலும் கூட, மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோரின் தகவல்களில் இருந்து மாறுபட்ட தகவலையே யோவான் பொதுவாக முன் வைக்கின்றார். யோவானின் விவரமானது, இயேசுவின் பிறப்பு, இயேசுவின் ஞானஸ்நானம் மற்றும் சோதிக்கப்படுதல், மலைப்பிரசங்கம், எல்லா உவமைகள், மறுரூபமடைதல், கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்துதல் மற்றும் கெத்செமனேயில் பெருந்துக்கம் ஆகியவற்றை தவிர்த்து விடுகிறது - இவை யாவும் ஒப்பீட்டு சுவிசேஷங்களில் கூறி முடிக்கப்பட்டுள்ளன.*

*இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் தவிர, ஒரு சில நிகழ்ச்சிகளே நான்கு விவரங்களிலும் [ஒரு சேரக்] குறிப்பிடப்படுகின்றன. நான்கு புத்தகங்களும் ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் கூறும்போது, அது கவனிக்கத் தக்கதாக உள்ளது; அந்த நிகழ்ச்சி ஒரு விசேஷித்த தனிச்சிறப்பைக் கொண்டதாயிருக்க வேண்டும்.*

## நான்கு விவரங்களிலும் உள்ள மாறுபாடுகள்

*ஒருவர், சுவிசேஷத்தின் இசைவை வடிவமைக்கத் தொடங்கும்போது, ஒரே நிகழ்ச்சியைப் பற்றிய விவரங்கள் சுவிசேஷப் புத்தகங்களுக்கிடையில் மாறுதல்களைக் கொண்டிருப்பதைக் காண்பது உறுதி. இந்த மாறுபாடுகள் எவ்விதமாய் விளக்கம் தரப்படக்கூடும்?*[8]

*பெரும்பலான நிகழ்ச்சிகளில், ஒரு விவரமானது இன்னொரு விவரத்திற்குத் துணைத் தகவல் அளிக்கின்றது. பெத்தானியில் இயேசு அபிஷேகம் பெற்ற வரலாற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். மத்தேயுவின் விவரத்தில் (மத். 26:6-13), பெயர் அறியப்படாத ஒரு பெண் விலையுயர்ந்த தைலத்துடன் வந்து, இயேசுவை அபிஷேகம் செய்தபோது, அவர் சீமோன் என்ற தொழுநோயாளியின் வீட்டில் இருந்தார், இது இயேசுவின் சீஷர்கள் தங்களின் அங்கீகரியாமையை வெளிப்படுத்தியதை விளைவித்தது. மாற்குவின் விவரத்தில் (மாற். 14:3-9) இதே போன்றுதான் பெரும்பாலும் உள்ளன, ஆனால் சில விவரங்கள் கூடுதலாகத் தரப்பட்டுள்ளன: அந்தத் தைலம் சுத்தமான நளதம் என்பதாயிருந்தது, அந்தப்பெண் தைலப் புட்டியை உடைத்தாள், மற்றும் அந்தத் தைலம் முந்நூறு தினேரியம்*[9] *விலைமதிப்பு உடையதாக இருந்தது. யோவானின் விவரம் (யோவா. 12:1-8) பின்வருபவை உட்பட மற்ற விவரங்களைத் தருகிறது: இயேசு தமக்கு மதிப்பளிக்கப்பட்ட விருந்து ஒன்றில் கலந்து கொண்டிருந்தார்; மார்த்தாள் உணவைப் பரிமாறிக் கொண்டிருந்தாள்; லாசருவும் மதிப்பளிக்கப்பட்ட ஒரு விருந்தினராய் இருந்தார்; மார்த்தாளின் சகோதரியான மரியாள் என்பவள் இயேசுவை அபிஷேகம் பண்ணினாள்; யூதா ஸ்காரியோத்துதான் விமர்சனத்தைத் தொடங்கினவனாயிருந்தான். இந்த விவரங்கள் ஒன்றுக் கொன்று முரண்பாடாக இருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக ஒன்றுக் கொன்று துணைக்கருத்துக்களை அளிப்பவைகளாக உள்ளன என்பது தெளிவு.*

சாட்சியங்கள் துணை விவரங்களைக் கொடுக்கும்போது, இது அவர்களின் சாட்சியை மதிப்புக் குறையச் செய்வதாக இல்லமால், அவர்களின் உண்மைத் தன்மையை நிலைநாட்டுகின்றன.

> டாக்டர். [ஹென்றி] வான் டைக் அவர்கள், "ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிய விவரத்தைத் தருவதற்கு ஒரு நீதிபதியின் முன்பாக நான்கு சாட்சிகள் வந்து நின்று, அவர்கள் ஒவ்வொருவரும் ஒரே வரலாற்றை ஒரே விதமான வார்த்தைகளில் கூறுவார்களென்றால், அந்த நீதிபதி, அநேகமாக, அவர்களின் சாட்சியானது விதிவிலக்கான வகையில் மதிப்புமிக்கது என்று முடிவு செய்ய மாட்டார், ஆனால் அது அவர்கள் ஒரே கதையைக் கூறுவதற்கு ஒப்புக் கொண்டிருந்தார்கள் என்று சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் முடிவு செய்வார். ஆனால், ஒவ்வொரு மனிதரும் தான் கண்டதை கண்டதின்படியே கூறவேண்டியிருந்தால், பின்பு ஆதாரமானது நம்பத் தக்கதாக இருக்கும். மற்றும் நாம் நான்கு சுவிசேஷங்களை வாசிக்கும் போது, இதையெல்லவா மிகச் சரியாகக் கண்டறிகின்றோம்? ஒரே வரலாற்றை நான்கு மனிதர்கள் தங்கள் தங்கள் சொந்த வழிமுறைகளில் கூறுகின்றார்கள்."[10]

ஆயினும் சில விஷயங்களில், விவரங்கள் துணைக் கருத்துக்களாக மட்டும் இருப்பதில்லை; அதற்குப் பதிலாக, அவைகள் மாறுபட்டவைகளாக உள்ளன. நிகழ்ச்சிகளின் முறைமை ஒரே மாதிரி இல்லாது இருக்கலாம், வேறுபட்ட நபர்கள் குறிப்பிடப்பட்டிருக்கலாம், அல்லது எண்ணிக்கை வித்தியாசமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பார்வையிழந்த மனிதர்களை இயேசு எரிகோ நகருக்கு அருகில் குணமாக்கும் வரலாற்றைக் கவனியுங்கள். மத்தேயுவின் விவரத்தில் (மத். 20:29-34), இயேசு எரிகோவை விட்டுப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தார், மற்றும் இரண்டு மனிதர்கள் குணமாக்கப் பட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. லூக்காவின் விவரத்தில் (லூக். 18:35-43), இயேசு எரிகோவுக்குச் சமீபமாய் வந்து கொண்டிருந்தார், மற்றும் பார்வையற்ற ஒரே ஒரு மனிதர் மட்டுமே குறிப்பிடப்படுகின்றார்.[11] இப்படிப்பட்ட வேறுபாடுகளை நாம் எவ்வாறு விளக்கப்படுத்துகின்றோம்? இங்கு சில சாத்தியக்கூறுகள் தரப்படுகின்றன:

(1) எழுத்தாளர்களின் வலியுறுத்தங்களில் உள்ள வேறுபாடுகளின் காரணத்தினால், விவரங்களில் சில மாறுபாடுகள் நிலவுகின்றன. மேற்கூறிய உதாரணத்தில், லூக்கா பார்வையற்ற ஒரே ஒரு மனிதரின்மீது அடையாள வெளிச்சத்தை வீசினார், ஆனால் இது அங்கு பார்வையற்ற இரு மனிதர்கள் இருந்தார்கள் மற்றும் குணமாக்கப்பட்டார்கள் என்ற சாத்தியக்கூற்றைக் குறைப்பதில்லை.

(2) எழுத்தாளர்கள் ஒன்றுபோலுள்ள, ஆனால் ஒரே நிகழ்வாயிராத நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தார்கள் என்பதால் விவரங்களில் மாறுபாடுகள் நிலவலாம். F. லாகார்டு ஸ்மித் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> சில வேளைகளில், ... மிகவும் ஒரே மாதிரி காணப்படும் நிகழ்ச்சிகள்

இருமுறை நடைபெற்றனவா அல்லது ஒரே நிகழ்ச்சியானது மாறுபட்ட எழுத்தாளரால் மாறுபட்ட சந்தர்ப்பப் பொருளில் பதிவு செய்யப்பட்டதா என்பதை முடிவு செய்வது கடினமாக உள்ளது. தேவாலயத்தைச் சுத்திகரித்தல், மற்றும் எருசலேமுக்காகப் புலம்புதல் போன்றவை இந்தப் பிரச்சனைக்கு உதாரணங்களாக இருக்கின்றன.[12]

(3) ஒரு நிகழ்ச்சியின் எல்லா உண்மைகளையும் நாம் கொண்டிராத போது முரண்பாடுகள் நிலவுவதாகக் காணப்படுவதுபோல் தோன்றலாம். மேற்கூறிய உதாரணத்தைப் பொறுத்தமட்டில், எரிகோ நகரின் பழைய இடம் ஒன்றும் எரிகோவின் புதிய நகர் ஒன்றும் இருந்ததாகக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. ஆகையால், இயேசு அவற்றில் ஒரு இடத்தை விட்டுப் புறப்பட்டு இன்னொரு இடத்திற்குள் நுழைகையில் அந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கக்கூடும். முரண்பாடுகள் நிலவுகிறதாக உறுதிப்படுத்து கின்றவர்கள் தங்களிடம் அறிவுக்குறைவு உள்ளதென்று ஒப்புக்கொள்ளு கின்றவர்களாய் இருக்கின்றார்கள்.

(4) மூல வசனத்தைப் பற்றிய சிலவற்றை நாம் புரிந்துகொள்ளாதிருப் பதால் முரண்பாடுகள் நிலவுவதாகக் காணப்படுவதுபோல் தோன்றலாம். தேவ நம்பிக்கையற்றவர்கள், பழைய ஏற்பாட்டில் பணம் செலுத்துதல் பற்றிக் குறிப்பிடும் இடங்களில் முரண்பாடு நிலவிற்று என்று பல ஆண்டுகளாக உரிமைகோரி வந்தார்கள்: ஒரு விவரத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை தரப்பட்டதாகக் குறிப்பிடப்படுகையில், இன்னொரு விவரத்தில் ஒரு மாறுபட்ட தொகை தரப்பட்டதாகக் குறிப்பிட்டது என்று அவர்கள் கூறினார்கள். வரலாற்றின் அந்தக் காலகட்டத்தில் விலையுயர்ந்த உலோகங்களை மதிப்பிடுவதற்கு இருவித முறைமைகள் பயன்படுத்தப் பட்டிருந்ததை, பின்னாட்களில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தார்கள்; அநேகமாக, ஒரு எழுத்தாளர் மதிப்பிடுதலின் ஒரு முறைமையைக் குறிப்பிட்டு இருக்கையில், இன்னொருவர் இரண்டாவது முறைமையைக் குறிப்பிட்டு இருக்கலாம். காலத்திற்குக் காலம் புதைபொருள் ஆராய்ச்சியானது வேத வசனத்தின்மீது புதுப்புது வெளிச்சங்களை வீசுகிறது.

இயேசுவின் வரலாற்றிற்கு நாம் கடந்து செல்லுகையில், விவரங்களுக் கிடையில் உள்ளதாக அதிகம் பிரபலப்படுத்தப்பட்டுள்ள “மாறுபாடுகள்” சிலவற்றை நான் குறிப்பிட்டு, அந்த மாறுபாடுகளை ஒப்புரவாக்குவதற் குரிய சாத்தியமான வழிமுறைகளைப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பேன்.

## நான்கு விவரங்களிலும் உள்ள ஒற்றுமைத்தன்மைகள்

வேத வசனங்களின் ஏவுதல் பெற்ற தன்மையில் நான் நம்பிக்கை கொண்டுள்ளதால் (2 தீமோ. 3:16, 17), சுவிசேஷ விவரங்களில் உள்ள மாறுபாடுகளைப் பற்றி நான் மிகவும் அக்கறையுடையவனாக இருக்கின் றேன். ஆயினும், பல கல்வியாளர்கள் சுவிசேஷ விவரங்களுக்கிடையில் - சிறப்பாக மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியவற்றிற்கிடையில் - உள்ள ஒற்றுமைத் தன்மை பற்றி அக்கறையுடைவர்களாய் இருக்கின்றார்கள். இந்த

மனிதர்கள் "ஒப்பீட்டுப் பிரச்சனை"யைக் குறிப்பிட்டு, இந்த மூன்று புத்தகங்களும் ஏன் இவ்வளவு ஒற்றுமைத் தன்மை உடையவனாக உள்ளன என்பது பற்றி வாதிடுகின்றார்கள்: எழுத்தாளர்கள் ஏன் சில வேளைகளில் ஒரே அல்லது ஒத்த தன்மைகொண்ட மொழிநடையைப் பயன்படுத்து கின்றார்கள். இவர்கள் பின்வருவன போன்ற கேள்விகளுடன் போராடு கின்றார்கள்: "ஒரு எழுத்தாளர் இன்னொரு எழுத்தாளர் எழுதியதை அப்படியே பார்த்து எழுதினாரா?"; "எழுத்தாளர்கள் பொதுவான ஒரு ஆதாரமூலத்தில் இருந்து அப்படியே பார்த்து எழுதினார்களா?"

கற்றறிந்த இந்த மனிதர்களின் கலக்கத்தினிமித்தம் நான் அவர்களுக் காகக் கொஞ்சமே பரிவிரக்கம் கொண்டுள்ளேன் என்பதை அறிக்கை யிடுகின்றேன். பரிசுத்த ஆவியானவர் என்ற பொதுவான எழுத்தாளரால் எல்லாப் புத்தகங்களும் ஏவப்பட்டுள்ளதால் இப்படிப்பட்ட ஒற்றுமைத் தன்மைகள் இயல்பாக விளைந்ததாயிருக்கும். பழைய ஏற்பாட்டின் காலத்தில், "... மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார் கள்" (2 பேது. 1:21). வேத வசனங்களின் ஏவுதலின்மீது ஒருவர் விசுவாசம் கொண்டிருந்தால்,[13] "ஒப்பீட்டுப் பிரச்சனை" என்பதாக அழைக்கப்படுகிற விஷயமானது நான்கு புத்தகங்களுக்கும் ஒரு பொதுவான எழுத்தாளர் உள்ளார் என்ற கருத்தினால் என்றென்றைக்குமாகத் தீர்க்கப்படுகிறது.

## நான்கு விவரங்களுமே நம்பத்தக்கவை

சபையின் தொடக்க காலங்களில் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவானின் விவரங்கள் - இவை நான்கு மட்டுமே புதிய ஏற்பாட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததால், இவை இயேசுவின் வாழ்வு பற்றிய புதிய ஏற்பாட்டின் ஏவுதல் பெற்ற பகுதிகளாகக் கருதப்பட்டுள்ளன.

> [புதிய ஏற்பாட்டில் பிற புத்தகங்களில் காணப்படுகிற] ஒரு சில துணுக்குக் கூற்றுக்களைத் தவிர, [இயேசுவின்] வாழ்வு பற்றிய ஆதாரப்பூர்வமான பதிவுகள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்களில் மட்டுமே அடங்கியுள்ளன, இவை கிறிஸ்துவின் சபையின் வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே சபையினால் அதிகாரப்பூர்வமான நூல்களாக மதிக்கப்பட்டுள்ளன. இயேசுவின் வாழ்வு பற்றிய உண்மைகளாக, புகழ்பெற்ற இந்த நான்கு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிராத பல விஷயங்களை மற்ற பல சுவிசேஷ விவரங்கள் கொண்டிருப்பினும், கட்டுக் கதையான சுவிசேஷங்கள் (apocryphal Gospels)[14] என்று அழைக்கப்படுகின்ற இந்தப் புத்தகங்கள் பொதுவாக பின்னாட்களில் எழுதப்பட்டவை யாகவும், சந்தேகம் நிறைந்த விடுதலையியலை உடையவைகளாகவும் உள்ளன. இவைகள் அதிகாரப்பூர்வமான நூல்களாக ஏற்கப்பட்ட சுவிசேஷங்களில் தரப்படும் விஷயங்களின் பிரதிகளாயிராமல் வினோதமான புராணக் கதைகளைக் கூட்டியுள்ளன என்பது தெளிவு. மேலும், சில குறிப்பிட்ட பிரிவினரின் கண்ணோக்கங்களை ஆதரிப்பதற்காகவே எழுதப்பட்டுள்ளன என்பதை இவைகளின் மொழிநடையே காட்டிக் கொடுக்கிறது ...[15]

*கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய நமது படிப்பை நாம் தொடங்குகையில், நான்கு சுவிசேஷ விவரங்களை நாம் சார்ந்திருக்க முடியும் என்பதை நாம் உணர்ந்து அறிவது நமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.*

> *சீமோன் கிரீன்லீஃப் என்பவர் அமெரிக்காவில் கடந்த காலத்தில் இருந்த வழக்கறிஞர்களில் ஒரு மாபெரும் வழக்கறிஞராக இருந்தார், இவர் சட்டம் பற்றி ஆங்கில மொழியில் எழுதப்பட்டவற்றிலேயே மிகவும் முக்கியமான எழுத்தாக்கம் என்ற வகையில் சான்றின் சட்டம் பற்றி எழுதினார். இவரது புத்தகமான, சான்றின் சட்டம் பற்றிய ஒரு ஆய்வு என்பது ஒரு நூறு ஆண்டுகள் அளவாக அந்தப் பாடக் கருத்தைப் பொறுத்தமட்டில் வெற்றி கொள்ளப்பட முடியாத புத்தகமாக இருந்தது. அது பதினாறு பதிப்புகளைக் கடந்து சென்றது. சீமோன் கிரீன்லீஃப் தமது அறுபத்து மூன்று வயதில் பக்குவமான வழக்கறிஞராக இருந்தபோது, தாம் மரிப்பதற்கு ஏழு ஆண்டுகள் முன்னதாக, அவர் ஒரு தொகுதியை வெளியிட்டார், அதில் அவர் இயேசுகிறிஸ்துவுக்கு நான்கு சுவிசேஷகர்களின் சாட்சியை ஆராய்ந்திருந்தார். அவர் நாகரீக உலகின் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் சான்றின் அதே சட்டங்களை இதற்கும் பயன்படுத்தினார். அவர் பின்வருமாறு கூறினார்: "நமது தொழில் நம்மை தவறின் சிக்கல்களை ஆராய்ந்து பார்க்க, அதன் செயற்கைத் தன்மையைக் கண்டு பிடிக்க, அதன் மிகத் தடிமனான முகத்திரைகளைக் குத்தி ஊடுருவ, அதன் அறிவுத் திறமைகளைப் பின்பற்றின்யேதி அதை வெளிப்படுத்த, மாறுபட்ட சாட்சியங்களின் கூற்றுக்களைக் கடுமையாக ஒப்பிட்டுப் பார்க்க, சத்தியத்தைக் கண்டறிய மற்றும் அதைத் தவறிலிருந்து பிரிக்க வழிநடத்துகிறது." 543 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தில், சீமோன் கிரீன்லீஃப் அவர்கள், சுவிசேஷப் புத்தகங்கள் முற்றிலும் நம்பிக்கைக்குத் தகுதியானவையாக உள்ளன என்றும், நான்கு சுவிசேஷகர்களும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் பொய்யுரைத்திருக்கச் சாத்தியக்கூறு இல்லை, ஏனெனில் அவர்களின் சாட்சியம் உண்மையை ஒலிக்கிறது என்றும் முடிவுக்கு வந்தார்.[16]*

*மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்கள் தங்கள் உரிமைகோருதலின்படியே மிகச் சரியாக உள்ளன: வாழப்பட்டவற்றிலேயே மாபெரும் வாழ்வின் உண்மையான விவரங்கள்! நீங்கள் இந்தப் புத்தகங்களுக்கு உங்கள் வாழ்வை - மற்றும் உங்கள் நித்தியத்தை - ஒப்புவிக்க முடியும். பவுல் இதை பின்வருமாறு இடுகின்றார்: "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது" (1 தீமோ. 1:15அ).*

---

## போதகர்களுக்கும் பிரசங்கியார்களுக்கும் ஒரு குறிப்பு

*நீங்கள், ''சுவிசேஷ விவரங்களில் எடுத்துரைக்கப்பட்ட பாடக் கருத்துக்கள்'' என்ற அட்டவணையின் இடது புறத்தில் காணப்படக்கூடிய*

*கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய அடிப்படை வரைக்குறிப்புக்கு நன்கு பழகிக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் வாழ்வை வரைக்குறிப்பிடுவதற்குப் பல வழிகள் உள்ளன, ஆனால் இது மிக எளிய மற்றும் மிகச் சிறந்த வழிமுறையாக உள்ளது. நீங்கள் இந்த வரைக்குறிப்பைப் பெரிய அளவில் பிரதி எடுத்து அதை ஒரு பலகையில் ஒட்டி உங்கள் வகுப்பறையில் காட்சிப்படுத்தி வைக்க விரும்பலாம். உங்கள் மாணவர்கள் இந்த வரைக் குறிப்பை மனப்பாடம் செய்யும்படி அவர்களை உற்சாகப்படுத்தவும் நீங்கள் விரும்பலாம்.*

---

*குறிப்புகள்*

[1]*இரண்டு மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் இருந்தே, புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களைக் குறிப்பிடுவதற்கு ''சுவிசேஷங்கள்'' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. நான் "சுவிசேஷ விவரங்கள்" என்ற சொற்றொடரையே விரும்பித் தேர்ந்து கொள்கின்றேன், ஆனால் மற்றவர்கள் "சுவிசேஷங்கள்" என்பதை ஒரு நுணுக்கச் சொற்றொடராகப் பயன்படுத்துவதைக் குறித்து எனக்கு மறுப்பு எதுவும் இல்லை.* [2]"Autoptic" *என்ற வார்த்தையானது கண்ணால் கண்ட சாட்சி என்ற கருத்தையும் தர முடியும்ய.* [3]Henrietta C. Mears, *What the Bible Is All About* (Glendale, Calif.: Gospel Light Publications, 1966), 348. [4]*வெவ்வேறு கூட்ட மக்களுக்கு ஏற்றபடி ஒரு விவரத்தைத் தொகுத்திணைப் பதற்கான எடுத்துக்காட்டு ஒன்றுக்கு, அப். நடபடிகள் புத்தகத்தில் உள்ள பவுலின் மனம் மாறுதல் பற்றிய மூன்று விவரங்களைக் காணவும்: அப். 9ல் உள்ள விவரமானது லூக்காவின் வாசகர்களுக்காக எழுதப்பட்டது; அப். 22ல் அது எருசலேமில் இருந்த யூதர்களுக்கு முன்பாகப் பவுல் செய்த தற்காப்புவாதத்தின் ஒரு பகுதியாக இருந்தது; அப். 26ல் அது செசரியாவில் அகிப்பா அரசரை நோக்கி இயக்கப்பட்ட பவுலின் பிரசங்கத்தின் பாகமாக இருந்தது. இவற்றில் இரு விவரங்களைப் பற்றி, சைமன் கிஸ்ட்மேக்கர் அவர்கள் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்: ''பவுல் தமது மனமாற்றம் என்ற ஒரே நிகழ்ச்சியில் இருந்து, ஒவ்வொரு சாராருக்கும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்லும் தமது முயற்சியில் வெவ்வேறு வார்த்தைகளை ஞானமாகத் தேர்ந்தெடுத்து, வெவ்வேறு அம்சங்களை வலியுறுத்தினார் ..."* (Simon Kistemaker, *New Testament Commentary: Exposition of the Acts of the Apostles* [Grand Rapids, Mich.: Baker Book House, 1990], 899). [5]*நான்கு விவரங்கள் பற்றிய கூடுதல் தகவல் இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் ஒவ்வொரு புத்தகத்திற்குமான வரைக்குறிப்பில் தரப்படும்.* [6]*"மாற்கு சுவிசேஷம்" என்ற பாடத்தில் காணவும்.* [7]Referred to in John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 25. [8]*சவுலின் மனமாற்றம் பற்றி அப். நடபடிகள் புத்தகத்தில் லூக்கா மூன்று விவரங்களைக் கொடுத்தார் என்று நான் முன்பே குறிப்பிட்டேன் (அப். 9; 22; 26). இதைப் பற்றி ஜான் ஸ்டாட் அவர்கள் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்: "ஒரே எழுத்தாளர் (லூக்கா), ஒரே வரலாற்றை வேறு வகைகளில் கூறுகின்றது எப்படி என்ற நமது படிப்பானது, ஒப்பீட்டு சுவிசேஷகர்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா) தாங்கள் கூறிய ஒரே வரலாற்றை வேறு வகையில் கூறமுடிவது எப்படி என்பது பற்றி நாம் புரிந்துகொள்ள உதவும்"* (John R. W. Stott, *The Message of Acts: The Spirit, the Church & the World*, The Bible Speaks Today Series, ed. John R. W. Stott [Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1990], 380). [9]*ஒரு தினேரியம் என்பது சாதாரணத் தொழிலாளியின் ஒரு நாள் கூலிக்குச் சமமான தொகையாகும்.* "Denarii" *என்பது*

"denarius" என்பதன் பன்மைச் சொல் ஆகும். [10]Mears, 345.

[11]மாற்கு சுவிசேஷ விவரத்தில் (மாற். 10:46-52), பார்வையற்ற ஒரே ஒரு மனிதரே (பர்த்திமேயு) குணமாக்கப்பட்டார். [12]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1351. [13]இந்தப் பாடத்தொடர் முழுவதிலும், மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதியவற்றைப் பரிசுத்த ஆவியானவரே அவர்களுக்கு ஏவினார் என்ற கருத்து யூகிக்கப்பட்டிருக்கும். சில வேளைகளில் இது எடுத்துரைக்கப்படும்; சில வேளைகளில் இது எடுத்துரைக்கப்படாது. சுவிசேஷ எழுத்தாளர் இதை அல்லது அதைக் ''கூறினார்'' என்று குறிப்பிடப்படும் போதெல்லாம், அவர் அதை ஏவுதலினால் கூறினார் என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். [14]"Apocrypha" என்றால் ''மறைந்துள்ள'' என்று அர்த்தப்படுகிறது. இன்றைய நாட்களில் பயன்படுத்துகிறபடியாக இது, "எழுத்தாளரத்துவம் அல்லது அங்கிகரித்துவம் பற்றி கேள்வியெழுப்பப்படக் கூடியது" என்று மறைமுகமாக உணர்த்துகிறது. [15]Merrill C. Tenney, *New Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 131. [16]John Phillips, *Exploring the Scriptures* (London: Victory Press, 1965), 189-90.

# சுவிசேஷ எழுத்தாளர்களின் விசேஷித்த உறவுமுறைகள்

சுவிசேஷ எழுத்தாளர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் எல்லாத் தகவல்களையும் எவ்வாறு அளித்தார் என்பதை நாம் அறிதல் என்பது அவசியமும் அல்ல, அதை எல்லாவற்றையும் நாம் அறியவும் இயலாது என்றிருக்கையில், கல்வியாளர்களும் விமர்சகர்களும் இந்த நான்கு எழுத்தாளர்களுக்கும் இடையில் நிலவிய உறவுமுறைகள் பற்றியும், மற்றவர்களுடன் இவர்களுக்கிருந்த உறவுமுறைகள் பற்றியும் மனம் ஈர்க்கப்பட்டுள்ளார்கள்.

மத்தேயு ஒரு அப்போஸ்தலராயிருந்ததினால் கிறிஸ்வுடன் ஒரு நேரடியான தொடர்பு உடையவராக இருந்தார் (மத். 9:9; 10:3; மாற். 2:14). இவர் தாம் எழுதிய பெரும்பாலான நிகழ்ச்சிகளைக் கண்களால் கண்ட சாட்சியாக இருந்தார்.

மாற்கு சுவிசேஷத்தின் பெரும்பாலான விவரங்கள் பேதுருவின் தகவலாக இருந்தன என்று பொதுவாக நம்பப்படுகிறது.[1] மாற்குவும் பேதுருவும் உடன் ஊழியர்களாக இருந்தார்கள் என்று நாம் அறிகின்றோம் (1 பேது. 5:13). மாற்கு, பவுலுடனும் ஊழியம் செய்திருந்தார் (அப். 13:5; கொலோ. 4:10), மற்றும் இவர் இயேசுவுடன் எல்லைக்குட்பட்ட அளவே சொந்தத் தொடர்பு கொண்டிருந்திருப்பார்.[2]

லூக்காவின் புத்தகமானது ஆராய்ச்சியின் விளைவாகும் என்று அவரே குறிப்பிட்டார் (லூக். 1:1-4),[3] இது, கிறிஸ்துவை இவர் நேரடியாக அறிந்திருந்தது இல்லை என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது. கண்ணால் கண்ட சாட்சிகளுடன் இவர் ஆலோசனை செய்தார் என்று கல்வியாளர்கள் யூகித்துள்ளனர். பவுலின் உடன் ஊழியர் மற்றும் நெருங்கிய நண்பர் என்ற வகையில் (கொலோ. 4:14; 2 தீமோ. 4:11[4]), லூக்கா, கிறிஸ்துவின் வாழ்வு பற்றி அந்த அப்போஸ்தலருக்குத் தனிப்பட்ட வகையில் வெளிப்படுத்தப்

பட்டவைகளை அறியும் வழிபெற்றிருந்தார் (1 கொரி. 11:23). சுவிசேஷத்தின் ஏவுதல் பெற்ற மற்ற வாய்மொழி விவரங்களையும் லூக்கா பயன் படுத்தியிருக்கக் கூடும்.[5] எந்த ஒரு விவரமும் எழுதப்படுவதற்கு முன், ஏவுதல் பெற்ற மனிதர்கள் இயேசுவைப் பற்றிக் குறைந்தது முப்பது ஆண்டுகள் அளவாகப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். இயேசுவின் வாழ்வு பற்றிய அடிப்படை வரலாறு சபைக்கு நன்கு அறியப்பட்டதாக இருந்தது.

யோவானும் மத்தேயுவும் இயேசுவின் அப்போஸ்தலர்களாக ஒன்றாய் ஊழியம் செய்தார்கள் (மத். 10:2; மற்றும் யோவா. 13:23; 19:26; 20:2; லூக். 5:1-11 ஆகியவற்றையும் காணவும்). மாற்குவும் லூக்காவும் ஒரே வேளையில் ரோமாபுரியில் இருந்தார்கள் (கொலோ. 4:10, 14). எருசலேமிலிருந்த மாற்குவின் வீட்டில் சபையார் சில வேளைகளில் கூடி வந்ததால் (அப். 12:12), மாற்கு அநேகமாக - மத்தேயு மற்றும் யோவான் உட்பட - அப்போஸ்தலர்கள் எல்லாரையும் நன்கு அறிந்திருப்பார். எருசலேம் பகுதியில் லூக்கா தன் சமயத்தைக் கடத்தியிருந்ததால் (அப். 21:15; 27:1), பணித்தளமாக எருசலேமை உபயோகித்திருந்த அப்போஸ்தலர்களுடன் - ஒருவேளை மத்தேயு மற்றும் யோவான் உட்பட - அவர் பழகியிருக்க வாய்ப்பு உண்டு. மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோர் எழுதி, பல பத்தாண்டுகளுக்குப் பின்பு யோவான் எழுதியிருக்கக் கூடும் என்பதால், அவர்களின் விவரங்கள் பற்றி இவர் [யோவான்] அறிந்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. பதிவு செய்வதற்கு, இவர் வேண்டுமென்றே துணைக் கருத்துக்களைத் தேர்ந்து கொண்டதாகக் காணப்படுகிறது.

கருத்துக்களைத் தேர்ந்துகொள்ளுதல், எழுத்துப் பாணி அல்லது வார்த்தையமைப்பு இவற்றில் காணப்படுகின்ற ஒத்த தன்மைகள் வியப்புக்குரியவையல்ல. இந்த எழுத்தாளர்கள் யாவரும் மிக முக்கியமான ஒரு உறவுமுறையைப் பகிர்ந்து கொண்டார்கள்: இவர்கள் யாவரும் இயேசுவின் வாழ்வைப் பற்றிக் கூறுவதற்குப் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டிருந்தார்கள்.

---

குறிப்புகள்

[1]விஷயம் இவ்வாறு இருந்தாக, சபையின் தொடக்க கால (ஏவுதல் பெற்றிராத) எழுத்தாளர்கள் உறுதிப்படுத்தினார்கள். இந்தப் புத்தகத்தில் உள்ள "மாற்கு எழுதிய சுவிசேஷம்" என்ற பாடத்தில் காணவும். [2]மாற்கு 14:51, 52ல் குறிப்பிடப்படுகிற இளைஞர் மாற்குவேதாம் என்று பலர் நம்புகின்றார்கள். [3]லூக்காவின் ஆராய்ச்சியைப் பரிசுத்த ஆவியானவரே வழிநடத்தியிருக்கலாம். ஆராய்ச்சியிலிருந்து லூக்கா பெற்றுக்கொண்ட விஷயங்களைப் பயன்படுத்துவதில் அவரைப் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தினார் என்பது உறுதி. [4]அப். நடபடிகள் புத்தகத்தில் உள்ள "நாங்கள்" என்ற வார்த்தை உள்ள வசனப்பகுதிகளும் (உதாரணமாக அப். 16:10) பவுலுடன் லூக்கா கொண்டிருந்த நெருங்கிய தொடர்பைச் சுட்டிக்காண்பிக்கின்றன. [5]பவுலும் பிற அப்போஸ்தலர்களும் மக்களின்மீது தங்கள் கைகளை வைத்து அற்புத வரங்களைக் கொடுத்தார்கள் (அப். 8:17). இயல்புக்கு அப்பாற்பட்ட அறிவு [அறிவை உணர்த்தும் வரம்] என்பது (1 கொரி. 12:8) அவ்வரங்களில் ஒன்றாக இருந்தது, இது பிறருடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியதாக இருந்தது.

## சுவிசேஷ விவரங்களின் சுருக்கமான ஒப்பீடு

| புத்தகத்தின் பெயர் | ஆரம்பத்தில் யாருக்கு எழுதப்பட்டது | இயேசுவை எடுத்துரைத்த விதம் | புத்தகத்தின் விசேஷித்த வலியுறுத்தம் | இன்றைய நாட்களுக்கு சிறப்பான வேண்டுகோள் | நிறைவான நோக்கம் | |
|---|---|---|---|---|---|---|
| மத்தேயு | யூதர்களுக்கு | ராஜாவாக | மேசியாவாக இயேசு: அவரது போதனை, அவரது இராஜ்யம், அவரது அதிகாரம் | வேதாகம மாணவர்களுக்கு | வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகர் | மக்கள் இரட்சகரைப் பற்றிய அறிவிற்குள் கொண்டுவர |
| மாற்கு | ரோமர்களுக்கு | ஊழியராக | மக்களுக்கு உதவுதற்கு இயேசுவின் செயல்கள் அற்புதங்கள் | சராசரி நபருக்கு, வியாபாரிகளுக்கு | வல்லமையுள்ள இரட்சகர் | |
| லூக்கா | கிரேக்கர்களுக்கு | மனித குமாரனாக | இயேசுவின் பூரணப்பட்ட மனித்துவம் | கல்வியாளர், சிந்தனையாளர், உயர்நோக்கம் கொண்டவர், சத்தியத்தை நாடுபவர் ஆகியோர்களுக்கு | பரிபூரணமான இரட்சகர் | |
| யோவான் | விசுவாசிகளுக்கு | தேவ குமாரனாக | இயேசுவின் தெய்வீகத்துவம் | எல்லா மக்களுக்கும் | ஒருவருக்கு சொந்தமான இரட்சகர் | |

## சுவிசேஷ விவரங்களில் எடுத்துரைக்கப்பட்ட பாடக்கருத்துக்கள்

| கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய முக்கியமான வரைக்குறிப்பு | ஒப்பீட்டு நூல்கள் | | | யோவான் |
|---|---|---|---|---|
| | மத்தேயு | மாற்கு | லூக்கா | |
| I. **பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம்**<br>அ. முன்பே இருந்த நிலை | | | | √ |
| ஆ. வம்ச வரலாறு, பிறப்பு & குழந்தைப் பருவம் | √ | | √ | |
| II. **ஆயத்த காலவேளை**<br>அ. பிள்ளைப் பருவம் | | | √ | |
| ஆ. யோவான் ஸ்நானனின் ஊழியம் | √ | √ | √ | √ |
| இ. ஞானஸ்நானம் மற்றும் சோதிக்கப்படுதல் | √ | √ | √ | |
| III. **மறைவாயிருந்த காலவேளை**<br>அ. தொடக்க கால கலிலேய ஊழியம் | | | | √ |
| ஆ. தொடக்க கால யூதேயா ஊழியம் | √ | √ | √ | √ |
| IV. **மாபெரும் கலிலேய ஊழியத்தின் காலம்**<br>அ. ஐந்து துணைக் காலவேளைகள் | *14 அதிகாரங்களும் மேல்* | *ஏறக்குறைய 9 அதிகாரங்கள்* | *சுமார் 5 அதிகாரங்கள்* | *1 அதிகாரத்திற்கும் சற்று அதிகமாக* |
| ஆ. பெரேயாவில் ஊழியம் | | | | √ |
| V. **பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் முடிவு ஊழியம்**<br>அ. யூதேயாவில் பின்னாட்களில் ஊழியம் | | | √ | √<br>எருசலேம் |
| ஆ. பெரேயாவில் ஊழியம் | ? | ? | √ | குறிப்பிடப்படுதல் |
| இ. எருசலேமுக்குப் பயணம் | √ | √ | √ | குறிப்பிடப்படுதல் |
| VI. **கடைசி வாரத்தின் காலவேளை**<br>சிலுவையில் அறையப்படுதல் உட்பட | √<br>*7 அதிகாரங்கள்* | √<br>*5 அதிகாரங்கள்* | √<br>*4 1/2 அதிகாரங்கள்* | √<br>*8 அதிகாரங்கள்* |
| VII. **நாற்பது நாட்களின் காலவேளை**<br>உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் | √ | √ | √ | √ |

# 2

# மத்தேயு சுவிசேஷம்

## ராஜாவாகி கிறிஸ்து

*மத்தேயு சுவிசேஷம், சுவிசேஷம் விவரங்களில் முதலாவதாகவும் புதிய ஏற்பாட்டில் முதலாவது புத்தகமாவும் உள்ளது. புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் எல்லா தொடக்க காலப் பட்டியல்களிலும் செயல்முறையில் இதுவே முதல் புத்தகமாக உள்ளது. (ஏவுதல் பெற்றிராத) ஒரு பாரம்பரிய வரலாற்றின்படி, இது இயேசுகிறிஸ்துவின் வாழ்வு பற்றி எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டின் மற்ற மூன்று விவரங்களுக்கு முன்னதாக எழுதப்பட்டதால், இது முதலிடத்தில் வைக்கப்பட்டு இருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. இது நான்கு சுவிசேஷ விவங்களிலும் மிகப் பிரபலமானதாக இருந்தது என்பது, இது முதலிடத்தில் வைக்கப்பட்டதற்கான சாத்தியக் கூறுள்ள இன்னொரு காரணமாக உள்ளது: இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவ எழுத்தாளர்கள், மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களைக் காட்டிலும் மத்தேயு சுவிசேஷத்தில் இருந்து அதிகமாக மேற்கோள் காண்பித்தார்கள்.*

*மத்தேயு சுவிசேஷம் முதலிடத்தில் வைக்கப்படுவதற்கான காரணம் எதுவாயிருப்பினும், இதன் தகுதிநிலையும் வலியுறுத்தமும், இதனைப் பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் ஒரு பூரணமான தொடர்புக் கண்ணியாக ஏற்படுத்துகின்றன. பழைய ஏற்பாடானது, யூதர்கள் தங்களுக்கு நீண்ட காலமாகவே வாக்குத்தத்தம் பண்ணப் பட்டுள்ள ராஜாவாகிய தங்களின் மேசியாவை எதிர்நோக்கி இருத்தலுடன் முடிந்தது. அந்த ராஜாவாக இருப்பவர் இயேசுவே என்று மத்தேயுவின் சுவிசேஷத்தில் அறிவிக்கப்படுதலுடன் புதிய ஏற்பாடு தொடங்குகிறது!*

## மத்தேயு சுவிசேஷத்திற்கு ஒரு அறிமுகம்

**புத்தகத்தை எழுதியவர்**

*மத்தேயு சுவிசேஷப் புத்தகத்தின் (*“according to Matthew” *தமிழில் இது, “மத்தேயு எழுதின” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்று தலைப்புக் குறிப்பானது மூலத்தொகுதியின் பாகமாயிருந்திருக்காது.[1] இருந்த போதிலும், தொடக்க கால எழுத்தாளர்கள், மத்தேயுவின் பெயர்கொண்டு இன்று அறியப்படுகிற இந்தப் புத்தகத்தை மத்தேயுதான் எழுதினார் என்பதை ஒரு சேர நம்பினார்கள்.[2] இந்தப் புத்தகத்தின் இயல்பு, மத்தேயுவின்[3] இயல்பென்று கொஞ்சமாக அறியப்பட்டவற்றுடன் ஒத்துப் போகிறது.*

"தேவனுடைய கொடை" என்று அர்த்தப்படுகிற பெயரான மத்தேயு என்னப்பட்டவர், லேவி என்றும் அறியப்பட்டார், இது ''இசைவில் இணைந்தவர்'' என்றும் அர்த்தப்படுகிறது. (மத். 9:9ஐ மாற். 2:14உடன் ஒப்பிட்டுக் காணவும்.)[4] இவர் கப்பர்நகூம் ஊரைச் சேர்ந்தவர் (மாற். 2:1, 14), இது கலிலேயாக் கடற்கரையின் வடமேற்குப் பகுதியில் இருந்த ஒரு பெரிய நகரம் ஆகும், மற்றும் இவரது தந்தை அல்பேயு என்னும் பெயருடையவராய் இருந்தார் (மாற். 2:14). மத்தேயு ரோம அரசில் ஒரு வரிவசூலிப்பவராகப்[5] பணியாற்றி வந்தார் (மத். 10:3). யூதர்களில் பெரும்பான்மையானோர் இவரைக் காட்டிக் கொடுப்பவர் என்று கருதினார்கள். "ஆயக்காரன்" மற்றும் "பாவி" என்ற வார்த்தைகள் அவர்களின் சிந்தையில் ஒரு பொருட் பல சொற்களாக இருந்தன (மத். 9:10, 11; 11:19 ஆகியவற்றைக் காணவும்).

ஒரு நாள் இயேசு, மத்தேயுவை கப்பர்நகூமில் இருந்த வரிவசூலிப்பு அலுவலகத்தில் கண்டு, அவரிடத்தில், ''என்னைப் பின்செல்'' என்று கூறினார். அந்த வரிவசூலிப்பவர் "எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்" (லூக். 5:27, 28). இந்த அழைப்புக்குச் சற்றுப் பின்பு, மத்தேயு இயேசுவுக்கு ஒரு வரவேற்பை அளித்து, தமது சக ஆயக்காரர்களையும் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டிருந்தவர்களையும் அந்த விருந்திற்கு அழைத்தார் (மத். 9:9-17; லூக். 5:29-39).

மத்தேயுவின் பெயர் பன்னிரு அப்போஸ்தலர்களின் எல்லாப் பெயர்ப்பட்டியலிலும் காணப்படுகிறது (மத். 10:3; மாற். 3:18; லூக். 6:15; அப். 1:13). இவர் அப். நடபடிகள் 1 முதல் 7 அதிகாரங்கள் வரையில் எருசலேமில் அப்போஸ்தலர்கள் செய்த ஊழியத்தில் ஈடுபட்டிருந்திருப்பார், ஆனால் அந்த இடத்திற்கு அப்பால் இவரது ஊழியம் பற்றி நம்பத் தகுந்த தகவல் எதையும் நாம் கொண்டிருப்பதில்லை. ஏவுதல் பெற்றிராத தொடக்க காலப் பாரம்பரிய வரலாறானது, இவர் பதினைந்து ஆண்டுகள் அளவாக யூதேயாவில் பிரசங்கித்ததாகவும் பின்பு தொலைதூரக் களங்களுக்குச் சென்றதாகவும் கூறுகிறது. அதே பாரம்பரிய வரலாறானது, இவர் "தமது சொந்தப் பிரசன்னத்தின் குறைவினால், எழுதியதன் மூலம்" விவரம் அளிக்க, தம் சுவிசேஷ விவரத்தை எழுதினார் எனறு கூறுகிறது.[6]

### இந்தப் புத்தகத்தைப் பற்றி ஒரு கேள்வி

தொடக்க கால எழுத்தாளர்களில் பலர், மத்தேயு முதலில் இந்தப் புத்தகத்தை அரமாயிக் (எபிரெய மொழியின் வட்டார வழக்கு) மொழியில் எழுதினார் என்றும் பிற்பாடு இது மத்தேயுவினாலோ அல்லது வேறு யாரோ ஒருவரினாலோ கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது என்றும் கருத்து தெரிவித்தார்கள். மெரில் டென்னீ அவர்கள், இந்தப் பாரம்பரியமானது "அரமாயிக் மூலப் பிரதியொன்று இருப்பதாகக் கண்டு பிடிக்கப்படாததாலும், இந்த சுவிசேஷப் புத்தகமானது கிரேக்க மொழிபெயர்ப்பின் அடையாளங்கள் எதையும் கொண்டிராததாலும் அடிக்கடி மறுக்கப்பட்டுள்ளது" என்று எழுதினார்.[7] ஜேக் லூயிஸ் அவர்கள், "பெரும்பாலான கல்விமான்கள், 'நமது புத்தகமானது கிரேக்க மொழியில் எழுதப்பட்ட

*மாபெரும் கிரேக்க நூலாக உள்ளது' என்று வலியுறுத்துகின்றார்கள்'' என்று கூறுவதுடன், "இந்த சுவிசேஷத்தின் தொடக்க கால அரமாயிக் மொழிக் குறிப்புகளோ அல்லது கையெழுத்துப் பிரதிகளோ இருப்பதில்லை" என்றும் கூறினார்.[8] மத்தேயு சுவிசேஷம் பற்றிய நமது படிப்பில், நாம் அரமாயிக் மொழியிலான இதன் தொடக்க கால பதிப்பு ஒன்று இருந்தது என்ற கருதுகோளின்மீது கவனம் செலுத்த மாட்டோம். அதற்கு மாறாக, தேவன் நமக்காகப் பாதுகாத்து அளித்துள்ள (கிரேக்க மொழியில் எழுதப்பட்ட) இந்தப் புத்தகத்தின் மீதே கவனம் செலுத்துவோம்.*

**இந்தப் புத்தகத்தின் நோக்கம்**

*மத்தேயு இந்தப் புத்தகத்தை எழுதும்போது, தமது சக யூதர்களையே தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது உறுதி: இவர் யூத வம்ச வரலாறு ஒன்றுடன் தொடங்கினார் (1:1-17). இவர் பழைய ஏற்பாட்டில் இருந்து நாற்பதுக்கும் மேற்பட்ட நேரடியான மேற்கோள்கள் அடங்கிய ஏறக்குறைய ஒரு நூறு மறைவான குறிப்பிடுதல்களை உள்ளடக்கினார்.[9] இயேசு பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார் என்பதை இவர் தொடர்ந்து வலியுறுத்தினார் (1:23; 2:6, 15, 23 ஆகியவற்றைக் காணவும்). இவர் யூதர்களுக்கு நன்கு பழக்கமான, "தாவீதின் குமாரன்" (1:1, 20; 9:27) போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். இவர், இயேசு "காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு" அனுப்பப் பட்டார் என்பதை வலியுறுத்தினார் (15:24; 10:6ஐயும் காணவும்).*

*இஸ்ரவேலர்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த மேசியா/ராஜா வந்துவிட்டார் என்று காண்பிப்பதே மத்தேயுவின் நோக்கமாக இருந்தது. இந்தப் புத்தகத்தின் ஆய்வுக் கருத் தானது தொடக்க வசனத்திலேயே அறிவிக்கப்பட்டிருந்தது: "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" (1:1).*

> *இந்தக் கூற்று கிறிஸ்துவை, தேவன் தாவீதுடனும் ஆபிரகாமுடனும் ஏற்படுத்தியிருந்த மாபெரும் உடன்படிக்கைகள் இரண்டுடன் ஒன்று சேர்க்கிறது. தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கையில் தாவீதின் அரியணையில் அமர்ந்து என்றென்றும் ஆட்சி செய்ய ஒரு ராஜா வருவார் என்ற வாக்குத்தத்தம் அடங்கியிருந்தது (2 சாமு. 7:8-13). ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையில் ஆபிரகாமின் மூலமாகப் பூமியில் உள்ள எல்லாக் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தார் (ஆதி. 12:3).[10]*

*''மேசியா'' என்பது அபிஷேகம் பண்ணப்பட்ட[ஒரு]வர் என்று அர்த்தப்படும் எபிரெய மொழிச் சொல்லிலிருந்து ஒலியாக்கமாக உள்ளது. ''கிறிஸ்து'' (யோவா. 1:41) என்பது இதற்கு இணையான கிரேக்கச் சொல்லாக உள்ளது. ஆசாரியங்களையும் (யாத். 28:41; 29:7) பிறரையும்[11] நியமிப்பதில் அபிஷேகம் செய்வித்தல் பயன்படுத்தப்பட்டது; ஆனால் ஒரு யூதர், "தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்ற சொற்றொடரைக்*

*கேள்விப்படும்போது, அவர் ஒரு ராஜாவைப் பற்றியே நினைத்தார் (1 சாமு. 10:1; 24:6; சங். 2:2, 6 ஆகியவற்றைக் காணவும்). இயேசுவின் ராஜத்துவம் என்பதே மத்தேயு சுவிசேஷத்தில் வலியுறுத்தமாக உள்ளது: "யூதர்களின் ராஜாவை" ஆராதிப்பதற்காக ஞானிகள் வந்தார்கள் (2:2). இயேசுவில் ஒரு போட்டி ராஜாவை ஏரோது உய்த்துணர்ந்தார் (2:3-9). அவர் இயேசு தாவீதின் குமாரன் என்பதை மக்கள் ஒப்புக்கொண்டார்கள் (9:27; 15:22; 20:30). கிறிஸ்து ஒரு ராஜாவாக எருசலேமுக்குள் நுழைந்தார் (21:1-11; வ. 5ஐயும் காணவும்). அவரது சிலவையின்மீது, "யூதர்களின் ராஜா" என்று எழுதப்பட்டு இருந்தது (27:37). இயேசு, ஒரு நாளலே தாம் ஒரு நியாயாதிபதியாக தமது அரியணையில் அமரப் போவதாக உறுதிப் படுத்தினார் (25:31-33).*

*எரிக் ஹைடன் அவர்கள், மத்தேயு புத்தகத்தில், "நாம் ஒரு ராஜாவின் தூதுவருக்கு (யோவான் ஸ்நானன்[12]), ராஜாவின் சோதனை வேளைகளுக்கு (அவர் சோதிக்கப்படுதல்), ராஜாவின் கொள்கை விளக்க அறிவிப்புக்கு (மலைப் பிரசங்கம்), ராஜாவின் ஊழியத்துக்கு (அவரது போதனைகள் மற்றும் அற்புதங்கள்), ராஜாவின் புறக்கணிக்கப்படுதலுக்கு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுக்கு அறிமுகப்படுத்தப் படுகின்றோம்'' என்று கருத்துத் தெரிவித்தார்.[13] "இந்தப் புத்தகத்தைக் கண்ணோக்குங்கள்'' என்ற புத்தகத்தின் ஆசிரியர்கள், ''இயேசு ஒரு ராஜாவைப் பிறந்தார், ஒரு ராஜாவைப்போல் வாழ்ந்தார், ஒரு ராஜாவைப் போல் பேசினார், ஒரு ராஜாவைப்போல் மரித்தார், அவர் மரித்தோரில் இருந்து எழுந்து ராஜாதி ராஜாவாக மீண்டும் வருவதாக வாக்குத்தத்தம் செய்தார்" என்று எழுதினார்.[14]*

*ராஜாவின் இராஜ்யத்தின்மீதும் மத்தேயு கவனம்செலுத்துகின்றார். ''பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது'' (3:2; 4:17; 10:7) என்பதே யோவான் ஸ்நானன், இயேசு, இயேசுவின் சீஷர்கள் ஆகியோரின் அடிப்படைச் செய்தியாக இருந்தது. "இராஜ்யம்" என்ற வார்த்தையானது மத்தேயு சுவிசேஷத்தில் ஐம்பதுக்கும் அதிகமான முறைகள் காணப் படுகிறது.[15] (''பரலோக இராஜ்யம்'' என்ற சொற்றொடர் மட்டும் முப்பதுக்கும் அதிகமான முறைகள் காணப்படுகிறது.[16]) இந்தப் புத்தகத்தில் பெரும்பாலான உவமைகள் ''அன்றியும் பரலோக இராஜ்யம் … போன்றதாக உள்ளது" என்றே தொடங்குகின்றன (அதிகாரம் 13ல் உள்ள உவமைகளைக் காணவும்).*

*மத்தேயு யூத வாசகர்களுக்கு எழுதியிருக்கலாம், ஆனால் அவர் யூதர்களுக்கு மட்டுமே எழுதவில்லை. இந்த அப்போஸ்தலர், ஏவுதலினால் எல்லா மக்களுக்கும் எழுதினார். இவருடைய விவரத்தில் முதல் வசனம், இயேசு "தாவீதின் குமாரன்" என்று கூறுவதுடன், அவர் "ஆபிரகாமின் குமாரன்" என்றும் கூறிற்று. இயேசு, பூமியின் எல்லா இனங்களும் ஆசீர் வதிக்கப்படும் என்று ஆபிரகாமிடம் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமாக இருந்தார் (ஆதி. 12:3; 22:18; கலா. 3:8). மத்தேயு யூதரல்லாதவர்களை (புறஜாதிகளை)ப் பற்றி அடிக்கடி குறிப்பிட்டார் (4:14-16; 8:11, 12; 12:18, 21; 13:38; 15:22-28; 24:14). இந்தப் புத்தகத்தின்*

*தொடக்கப் பகுதியில், புறஜாதியைச் சேர்ந்த முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் இயேசுவை ஆராதிக்க வந்தார்கள் (மத். 2:2-12); இதன் முடிவில் இயேசு, "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி" (28:19அ) என்று கட்டளையிட்டார். மத்தேயு சுவிசேஷம் இயேசுவை, உலகளாவிய இரட்சகராக எடுத்துரைக்கிறது.*

**இந்தப் புத்தகத்தின் பண்புகள்**

*மத்தேயு சுவிசேஷப் புத்தகத்தின் பெரும்பாலான பண்புகள் அதன் நோக்கத்திற்கு தொடர்புடையவைகளாக உள்ளன.*

*முன்னரே குறிப்பிட்டபடி, இந்த சுவிசேஷ விவரம் நிறைவேற்றப் பட்ட தீர்க்கதரிசனத்தை வலியுறுத்துகிறது. மீண்டும் மீண்டும் ஏதாவதொரு நிகழ்வு "தீர்க்கதரிசியால் [அல்லது தீர்க்கதரிசிகளால்] உரைக்கப்பட்டபடி இவ்வாறு நடந்தது" (மத். 1:22; 2:15, 17, 23; 8:17ஐக் காணவும்) என்று இது எடுத்துரைக்கிறது. சிலுவையில் அறையப்படுதல் (இது யூதர்களுக்கும் இடறுதலாக இருந்தது, 1 கொரி. 1:23) என்பது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாயிருந்தது (26:54, 56; 27:9) என்ற உண்மையை மத்தேயு விசேஷக் கருத்தாக ஏற்படுத்தினார். இவ்விதமாக இந்தப் புத்தகம், "கிறிஸ்தவம் என்பது ஒரு மதவெறிக் குழுவினரின் 'புதிய' மதக்குழுவா யிராமல், தீர்க்கதரிசிகள் யாவரும் முன்னுரைத்தவற்றின் முழுமையான நிறைவேற்றமாக இருந்தது" என்பதைத் தெளிவாக்கிற்று.[17]*

*மேலும், குறிப்பிடப்பட்டபடி, இந்தப் புத்தகமானது ஒரு பலத்த யூதப் பின்னணியைக் கொண்டுள்ளது. பழைய ஏற்பாடு மற்றும் இஸ்ரவேலின் மேசியா/ராஜா என்பவற்றின்மீதான இதன் வலியுருத்தத்துடன் கூடுதலாக, இது மத்தேயுவின் நாட்களில் இருந்த யூதத்துவத்தை அதன் மாறுபட்ட சிந்தனைத்துறைகள், பயபக்திக்கான அதன் வெளிப்படையான செயல்கள், அங்கீகாரத்தின்மீது அதன் அன்பு, மற்றும் அதன் யூத மார்க்கத்து அமைவிக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றை விரிவாகப் பிரதிபலிக்கிறது.[18]*

*இயேசுவின் ராஜத்துவம் பற்றிய மத்தேயுவின் வலியுறுத்தத்தின் காரணமாக, இவரது புத்தகத்தில் உள்ள சில விஷயங்கள் மற்ற மூன்று புத்தகங்களிலும் இடம்பெறுவதில்லை. இவர் பதிவு செய்துள்ள பதினைந்து உவமைகளில், பதினோறு உவமைகள் இவருக்கே உரியவைகளாக இருக்கின்றன. இவரது புத்தகத்தில் உள்ள அற்புதங்களில் மூன்று வேறு எவ்விடத்திலும் காணப்படுவதில்லை. எல்லாம் ஒன்றுகூட்டிக் காண்கையில், மத்தேயு சுவிசேஷத்திற்கு மட்டுமே உரித்தான முப்பது பிரிவுப் பகுதிகள் உள்ளன, இவற்றில் பெரும்பாலானவை ராஜா மற்றும் அவரது இராஜ்யம் என்ற பாடக் கருத்தைக் கொண்டுள்ளன.*

*இந்தப் புத்தகமானது இயேசுவின் போதனையின்மீது பலத்த வலியுறுத்தத்தைக் கொண்டுள்ளது. இயேசு ராஜாவாக இருக்கின்றார். என்றால், அவர் சட்டங்களை ஏற்படுத்த உரிமை கொண்டுள்ளார். ஒப்புயர்வற்ற மலைப்பிரசங்கம் உட்பட (5-7) இயேசுவின் ஐந்து மாபெரும் உரையாடல்களை மத்தேயு பதிவு செய்தார்.[19]*

*மத்தேயுவில் பதிவு செய்யப்பட்டபடி, இயேசுவின் போதனையில்*

*உள்ள ஒரு தனிச் சிறந்த அம்சம் கவனிக்கப்பட வேண்டும்: நான்கு சுவிசேஷ விவரங்களிலும், இது ஒன்றுதான் "சபை" என்ற வார்த்தையைக் குறிப்பிடுகிறது (16:18; 18:17). கர்த்தருடைய சபை கூடுதல் அல்லது சபை என்பது யூதர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட விஷயமாயிருந்தது (யாத். 12:3, 6, 19, 47).[20] மற்றும், "ஜெப ஆலயம்" என்பது "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையான* ekklesia *என்பதற்கு ஒத்ததாக இருந்தது.[21] மேசியாவின் இராஜ்யம் பற்றிய தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவின் சபையில் நிறைவேற்றப்படும் என்று மத்தேயு கூறினார்.*

*இந்தப் புத்தகத்தில் தனிச்சிறப்பான, கிறிஸ்தவத்தை சார்ந்துபேசும் கூறு ஒன்றுள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டும். இயேசு சட்ட விரோதமான குழந்தையாகப் பிறந்தார் என்று யூதர்களிடையே வதந்திகள் பரவுவதைத் தடை செய்வது என்பதே கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய விவரங்களைக் கொடுத்ததற்கான ஒரு காரணமாக இருக்கலாம். வெறுமையான கல்லறைக்கு யூதர்கள் அளித்த பிரபலமான ஒரு விளக்கம் வெளியாக்கப்பட்ட இடமான மத்தேயு 28:11-15ஐக் கவனியுங்கள். மத்தேயு உண்மைகளை எடுத்து உரைத்து, பின்னர், தமது வாசகர்கள், விசுவாசத்தின் பக்கமா அல்லது அவிசுவாசத்தின் பக்கமா, எந்தப் பக்கம் இருக்கின்றார்கள் என்பதை அவர்களே முடிவு செய்யும்படி அறைகூவல் விடுத்தார்.*

*மற்ற சுவிசேஷ விவரங்களில் உள்ளபடி, நமது பாவங்களுக்காக இயேசு மரித்தார் என்பதே மத்தேயு புத்தகத்தின் முன்னணிக் கருத்தாக உள்ளது. இந்தப் புத்தகத்தின் மொத்தப் பாடக் கருத்துக்களில் 25 சதவிகிதமானது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை மையங்கொண்டுள்ளது.*

***இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலம்***

*"இந்நாள் வரைக்கும்" (27:8; 28:15) என்ற சொற்றொடரை மத்தேயு பயன்படுத்துதலானது இவர் எழுதிய நிகழ்ச்சிகளுக்குப் பிறகு காலம் கடந்து சென்றிருந்ததைச் சுட்டிக்காண்பிக்கிறது. இதற்கு மறுபுறத்தில், அதிகாரம் 24ல் மிகவும் விரிவாக முன்னுரைக்கப்பட்ட எருசலேமின் அழிவுக்கு முன்பாக (கி.பி. 70) இந்தப் புத்தகம் கி.பி. 50க்கும் கி.பி. 70க்கும் இடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். பழமைவாத எழுத்தாளர்கள் பலர், இந்தப் புத்தகம் கி.பி. 60ல் எழுதப்பட்டிருக்கும் என்று நினைக்கின்றார்கள்.*

***இந்தப் புத்தகத்தின் பிரிவுகள்***

*மத்தேயு சுவிசேஷப் புத்தகமானது பல இயற்கையான பிரிவுகளைக் கொண்டுள்ளது. 4:17 மற்றும் 16:21 வசனங்களில் உள்ள "அதுமுதல்" என்ற வார்த்தைகளினால் மனித வரலாற்றுப் பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன. அதிகாரம் 4ன் வசனம் 17 இயேசுவின் ஊழியத்தின் தொடக்கமாக இருக்கையில், 16:21 முடிவின் தொடக்கமாக உள்ளது. இயேசுவின் மாபெரும் உரையாடல்களில் காணப்படுகிற "இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது" (7:28; 11:1; 13:53; 19:1; 26:1) என்ற வார்த்தைகளினால் தலைப்பு ரீதியான பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன.*

*இயல்பான இந்த பிரிக்கும் கருத்துக்களை முழுமையாகப் புரிந்து கொள்ளப்படக்கூடிய வரைக்குறிப்புக்குள் ஒன்றிணைத்தல் என்பது ஒரு அறைகூவலாக உள்ளது. பல வரைக்குறிப்புகள் பின்வரும் இரு வார்த்தைகளில் ஒன்றைப் பயன்படுத்துகின்றன: "மேசியா" அல்லது "ராஜா." டென்னீ அவர்கள் தமது பிரிவுகளில் "மேசியா" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்: (1) மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் உணர்ந்தறியப்பட்டன, (2) மேசியாவின் கொள்கைகள் அறிவிக்கப் பட்டன, மற்றும் (3) மேசியாவின் வல்லமை வெளிப்படுத்தப்பட்டது.[22] மேயர்ஸ் அவர்கள் "ராஜா" மற்றும் "இராஜ்யம்" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார்: (1) ராஜாவின் வருகை, (2) இராஜ்யம் பற்றிய அறிவித்தல், (3) ராஜாவைப் புறக்கணித்தல், மற்றும் (4) ராஜாவின் வெற்றி.[23] ஜான் பிலிப்ஸ் அவர்களும் தமது தலைப்புக்களில் "ராஜா"[24] என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். அவரது பிரதான பிரிவுகள் பின்வரும் வரைக்குறிப்பில் தழுவிக் கொள்ளப்பட்டுள்ளன.*

---

## மத்தேயு சுவிசேஷப் புத்தகத்தின் வரைக்குறிப்பு

I. *ராஜா வெளிப்படுத்தப்படுதல் (1:1-9:38).*
  A. *இயேசுவின் ஊழியத்திற்கான தயாரிப்பு.*
    1. *இயேசுவின் வம்ச வரலாறு (1:1-17).*
    2. *இயேசுவின் பிறப்பும் குழந்தைப் பருவமும் (1:18-2:23).*
      a. *ஞானிகள் வருதல்.*
      b. *எகிப்துக்கு ஓடிப்போகுதல்*
      c. *பிள்ளைகள் கொலை செய்யப்படுதல்.*
      d. *நாசரேத்தூருக்குத் திரும்புதல்.*
    3. *இயேசுவின் ஞானஸ்நானம் (3:1-17).*
      a. *யோவான் ஸ்நானனின் (மேசியாவின் அறிவிப்பாளர்) ஊழியம்.*
      b. *அந்த ஊழியத்தின் உச்சக்கட்டம்: இயேசுவின் ஞானஸ்நானம்.*
    4. *இயேசு சோதிக்கப்படுதல் (4:1-11).*
  B. *இயேசுவின் ஊழியத்தின் வல்லமை.*
    1. *கலிலேயாவில் அவரது ஊழியத்தின் தொடக்கம் (4:12-17; அந்த ஊழியத்தின் தொகுப்புக்கூற்றை 4:23-25; 9:35-38 ஆகியவற்றில் காணவும்).*
    2. *அவரது முதல் சீஷர்கள் (4:18-22).*
    3. *மலைப் பிரசங்கம் (5:1-7:29).*
    4. *வல்லமை நிறைந்த அற்புதங்கள் (மற்றும் பொது மக்களிடையே மதிப்பு வளருதல்; 8:1ஐக் காணவும்) -*

*மற்றும் இடையிடையே நடைபெற்ற நிகழ்ச்சிகள்.*

a. *ஒரு தொழுநோயாளி குணமாக்கப்படுதல் (8:2-4).*
b. *ஒரு நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரர் குணமாக்கப் படுதல் (8:5-13).*
c. *பேதுருவின் மாமி மற்றும் பிறர் குணமாக்கப்படுதல் (8:14-17).*
d. *சீஷராகப் போகின்றவர்கள் (8:18-22).*
e. *அலைகள் அமைதிப்படுத்தப்படுதல் (8:23-27).*
f. *அசுத்த ஆவிபிடித்த இருவர் குணமாக்கப்படுதல் (8:28-34).*
g. *திமிர்வாதக்காரர் ஒருவர் குணமாக்கப்படுதல் (9:1-8).*
h. *மத்தேயு அழைக்கப்படுதல் மற்றும் மத்தேயு விருந்தளித்தல் (9:9-13).*
i. *உபவாசம் பற்றிய ஒரு கேள்வி (9:14-17).*
j. *ஒரு வியாதிப்பட்ட பெண் குணமாக்கப்படுதலும் மரித்த ஒரு சிறுபெண் உயிரோடு எழுப்பப்படுதலும் (9:18-26).*
k. *பார்வையற்ற இரு மனிதர்கள் குணமாக்கப்படுதல் (9:27-31).*
l. *பிசாசு பிடித்த ஒரு மனிதர் குணமாக்கப்படுதல் - மற்றும் இது பிசாசுகளின் தலைவன் மூலமாகவே செய்யப் பட்டதென்று ஒரு குற்றச்சாட்டு (9:32-34).*

II. *ராஜா எதிர்த்து நிற்கப்படுதல் (10:1-16:12).*
   A. *எதிர்ப்பு முன் எதிர்பார்க்கப்படுதல்.*
      1. *விசேஷித்த ஊழியத்திற்காக பன்னிருவர் ஒதுக்கி வைக்கப் படுதல் (10:1-4).*
      2. *"இழந்துபோன ஆடுகளாகிய இஸ்ரவேல் குடும்பத்தினருக் கான" அளவிற்கு உட்பட்ட கட்டளை - அத்துடன் சீஷத்துவத்திற்கான பொதுவான சில அறிவுறுத்தல்கள் (10:5-42). (எதிர்ப்பை முன் எதிர்பார்த்தல் பற்றியது. வ. 14, 16-18, 21-25, 28, 34-36, 39 ஆகியவற்றைக் காணவும்).*
   B. *விசுவாசமும் உண்மைத்தன்மையும் புகழப்படுதல். (இந்தக் காலகட்டத்தின்போது இயேசுவின் ஊழியத்தின்மீதான ஒரு பொதுவான கூற்றுக்கு, 11:1ஐக் காணவும்.)*
      1. *யோவானின் விசாரிப்பு - மற்றும் இயேசுவின் பதில் (11:2-19).*
      2. *இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்களை அவர் கடிந்து கொள்ளுதல், மற்றும் அவரை*

*ஏற்றுக்கொண்டவர்களை அவர் புகழுதல் (11:20-27). (வ. 28-30ல் உள்ள மாபெரும் அழைப்பைக் கவனிக்கவும்.)*

C. *பகைமை தீவிரப்படுதல். (இந்தக் காலகட்டத்தின்போது, இயேசுவின் ஊழியத்தின்மீதான ஒரு பொதுவான கூற்றுக்கு, 14:34-36 மற்றும் 15:29-31ஐக் காணவும்.)*

1. *ஒய்வுநாள் பற்றிய விமர்சனம் (12:1-13).*
2. *அவரைக் கொலை செய்யத் திட்டமிடுதல் (12:14).*
3. *எதிர்ப்பைத் தவிர்க்க முயற்சி செய்தல் (12:15-21).*
4. *அவர் பிசாசுகளின் தலைவன் மூலமாகக் குணமாக்குகின்றார் என்ற குற்றச்சாட்டு மீண்டும் கூறப்படுதல் (12:22-37).*
5. *ஒரு அடையாளம் தரும்படி அவரிடம் அறைகூவல் விடப்படுதல் (12:38-45).*
6. *தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது இயேசுவுடனான உறவுக்கு ஒரு திறவுகோலாக உள்ளது (12:46-50).*
7. *இராஜ்யத்தின் உண்மை இயல்பைப் பற்றிய உவமைகள் (13:1-52).*
8. *நாசரேத்தூரில் இயேசு புறக்கணிக்கப்படுதல் (13:53-58).*
9. *யோவான் ஸ்நானனின் மரணம் (14:1-12).*
10. *ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (14:13-21).*
11. *பேதுருவின் விசுவாசம் அலைவுபடுதல் (14:22-33).*
12. *கெனேசரேத்தில் குணமாக்குதல் (14:34-36).*
13. *கைகளைக் கழுவாதிருத்தல் பற்றிய விமர்சனம் (15:1-20).*
14. *கானானியப் பெண்ணொருத்தியின் மகளும் மற்றும் சிலரும் குணமாக்கப்படுதல் (15:21-31).*
15. *நான்காயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (15:32-39).*
16. *ஒரு அடையாளம் தரும்படி இயேசுவுக்கு மீண்டும் அறைகூவல் விடப்படுதல் (16:1-4).*
17. *பரிசேயர் மற்றும் சதுசேயர் ஆகியோரின் செல்வாக்குப் பற்றிய எச்சரிக்கை (16:5-12).*

III. *ராஜா புறக்கணிக்கப்படுதல் (16:13-27:66).*

A. *இயேசுவின் மரணம் முன்னுரைக்கப்படுதல்.*

1. *நல்ல அறிக்கை - மற்றும் இயேசுவின் மரணம் பற்றிய அவரது முன்னுரைத்தல் (16:13-28).*
2. *மறுரூபமாகுதல் - மற்றும் இயேசுவின் மரணம் பற்றிய முன்னுரைத்தல் (17:1-13).*
3. *பிசாசு பிடித்திருந்த ஒரு பையனைக் குணமாக்குதல் - மற்றும் இயேசுவுக்கு வரவிருந்த மரணம் பற்றிய அதிகமான செய்திகள் (17:14-23).*

B. தேவைப்பட்ட அறிவுறுத்தல்கள் முன் எதிர்பார்க்கப்படுதல்.
   1. வரிசெலுத்துதல் பற்றிய ஒரு கேள்வி (மற்றும் மீனு க்குள் நாணயம் என்ற அற்புதம்) (17:24-27).
   2. பிள்ளைகள் மற்றும் தாழ்மை பற்றிய அறிவுறுத்தல் (18:1-14; 19:13-15ஐயும் காணவும்).
   3. உறவுமுறைகள் பற்றிய அறிவுறுத்தல் (18:15-20).
   4. மன்னிப்பு பற்றிய அறிவுறுத்தல் (18:21-35).
   5. விவாகரத்துப் பற்றிய ஒரு கேள்வி (19:1-12).

C. எருசலேமை நெருங்குதல் (19:1, 2ஐக் காணவும்).
   1. செல்வந்தராயிருந்த ஒரு வாலிப அதிகாரி - மற்றும் இயேசுவைப் பின்பற்றுவதால் கிடைக்கும் பலன்கள் (19:16-30).
   2. திராட்சத் தோட்டத்தில் வேலைக்காரர்களின் உவமை - மற்றும் இயேசுவின் மரணம் பற்றிய இன்னுமொரு முன்னுரைத்தல் (20:1-19).
   3. ஊழியக்காரராக இருக்க வேண்டியதின் அவசியம் - மற்றும் பிறருக்காக மரிப்பதற்கு இயேசுவின் விருப்பம் (20:20-28).
   4. பார்வையற்ற இரு மனிதர்கள் எரிகோவில் குணமாக்கப் படுதல் (20:29-34).

D. கடைசி வாரம் தொடங்குதல்.
   1. எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசம் மற்றும் தேவாலயத்தைச் சுத்திகரித்தல், அதைத் தொடர்ந்து இயேசுவின் விரோதிகளால் விமர்சிக்கப்படுதல் (21:1-17).
   2. காய்க்காத அத்திமரத்தைச் சபித்தல் (21:18-22).
   3. கேள்விகளின் நாள் (செவ்வாய்க்கிழமை):
      a. இயேசுவின் செயல்களுக்கான அதிகாரம் பற்றிய கேள்வி (21:23-27).
      b. பிரதான ஆசாரியர்களையும் பரிசேயர்களையும் சுட்டிக் காட்டிய உவமைகள் (21:28-22:14).
      c. இராயனுக்கு வரிசெலுத்துதல் பற்றிய கேள்வி (22:15-22).
      d. உயிர்த்தெழுதல் பற்றிய கேள்வி (22:23-33).
      e. பிரதானமான கற்பனை பற்றிய கேள்வி (22:34-40).
      f. இயேசுவின் விரோதிகள் ஒரு கேள்வியினால் வாயடைக்கப்படுதல் (22:41-46).
      g. வேதபாரகர், பரிசேயர் (மற்றும் எருசலேம்) மீதும் சாபங்கள் அறிவிக்கப்படுதல் (23:1-39).
      h. எருசலேமின் அழிவு மற்றும் இரண்டாம் வருகை ஆகியவற்றைப் பற்றிய போதனை.

(1) ஒரு வெளிப்படையான செய்தி (24:1-51).
(2) பத்து கன்னிகைகளின் உவமை (25:1-13).
(3) தாலந்துகளின் உவமை (25:14-30).
(4) இரண்டாம் வருகை மற்றும் நியாயத்தீர்ப்பு பற்றிய போதனை (25:31-46).

E. முடிவு துரிதப்படுதல்.
1. இயேசுவின் மரணம் பற்றிய இன்னொரு முன்னுரைத்தல் (26:1, 2).
2. இயேசுவைக் கொல்வதற்கான சதித் திட்டம் வலுப்பெறுதல் (26:3-5).
3. இயேசு பெத்தானியில் (அவரது மரணத்தின் முன் எதிர்பார்ப்பாக) அபிஷேகிக்கப்படுதல் (26:6-13).
4. இயேசுவின் விரோதிகளுடன் (யூதாஸ்) சூழ்ச்சி செய்தல் (26:14-16).

F. பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்படுதல்.
1. பஸ்கா பண்டிகைக்கான ஆயத்தம் (26:17-20).
2. யூதாஸ் காட்டிக் கொடுப்பது முன்னுரைக்கப்படுதல் (26:21-25).
3. கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்படுதல் (26:26-29).
4. சீஷர்கள் கைவிடுதலும் பேதுருவின் மறுதலிப்பும் முன்னுரைக்கப்படுதல் (26:30-35).
5. கெத்செமனே தோட்டத்திற்குள் (26:36-46).
6. இயேசு காட்டிக் கொடுக்கப்படுதலும் கைது செய்யப்படுதலும் (26:47-56).

G. இயேசுவின் விசாரணைகள் சகிக்கப்படுதல்.
1. காய்பாவுக்கு முன்பாக (மற்றும் பேதுருவின் மறுதலிப்பு) (26:57-75).
2. பிலாத்துவுக்கு முன்பாக (மற்றும் யூதாஸின் தற்கொலை) (27:1-26).

H. இயேசுவின் மரணமும் அடக்கமும் விவரிக்கப்படுதல்.
1. இயேசு அடிக்கப்பட்டு கொல்கொதாவுக்குக் கொண்டு செல்லப்படுதல் (27:27-32).
2. இயேசு சிலுவையில் அறையப்படுதலும் அவரது மரணமும் (27:33-54).
3. இயேசுவின் அடக்கம் - மற்றும் கல்லறை “பாதுகாக்கப் படுதல்” (27:55-66).

IV. ராஜா உயிர்த்தெழுந்தார் (28:1-20)!
A. உயிர்த்தெழுதலின் அறிவிப்பும் பெண்களுக்கு இயேசு தரிசனமாகுதலும் (28:1-10).
B. வெறுமையான கல்லறைக்கான பொய்யான “விளக்கம்” (28:11-15).

C. *இயேசு தமது சீஷர்களுக்குத் தரிசனமாகுதல் - மற்றும் பிரதான கட்டளை (28:16-20).*[25]

---

*குறிப்புகள்*

[1]*ஆயினும், அந்தப் புத்தகம் இந்தத் தலைப்பின்றி எப்பொழுதாவது சுற்றுக்கு விடப்பட்டது என்பதற்கு நேர்மறையான ஆதாரம் எதுவும் இல்லை.* [2]Eusebius *Ecclesiastical History* 3.34.16; Irenaeus *Against Heresies* 3.1.1. [3]*மத்தேயு ஒரு யூதராயிருந்தார்; வரிவசூலிக்கும் அலுவலகத்தில் பணியாற்றிய வர் என்ற வகையில் (மத். 9:9), இவர் அறிக்கைகளை எழுதுவதில் பழக்கமானவராக இருந்திருப்பார்.* [4]*சிலர், இவரது பிறப்புப் பெயர் லேவி என்றும், இயேசு சீமோனுக்குப் "பேதுரு" என்று பெயர் கொடுத்தவாறே இவருக்கு "மத்தேயு" என்ற பெயரைக் கொடுத்தார் என்றும் நினைக்கின்றார்கள்.* [5]*வரிவசூலிப்பவருக்கு* KJV *மற்றும் தமிழ் வேதாகமங்களில்* "publican" *அதாவது, "ஆயக்காரன்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.* [6]Eusebius *Ecclesiastical History* 4.24.6. [7]Merrill C. Tenney, *New Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 142. [8]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary Series, ed. Everett Ferguson (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 9. [9]*பழைய ஏற்பாட்டுக் குறிப்புரைகளின் எண்ணிக்கை எழுத்தாளருக்கு எழுத்தாளர் மாறுபடுகிறது, ஆனால் மத்தேயு சுவிசேஷத்தில் மிக ஏராளமான பழைய ஏற்பாட்டுக் குறிப்புரைகள் உள்ளன என்று எல்லாரும் ஒப்புக் கொள்ளுகின்றார்கள்.* [10]Henrietta C. Mears, *What the Bible Is All About* (Glendale, Calif.: Gospel Light Publications, 1966), 355.

[11]*1 இராஜாக்கள் 19:16 வசனம், தீர்க்கதரிசிகள் அபிஷேகம் பண்ணப்பட்டதைச் சுட்டிக் காண்பிக்கலாம்.* [12]*இந்த யோவானை* "Baptist" *("ஸ்நானன்") என்றே பல மொழிபெயர்ப்புகள் குறிப்பிடுகின்றன. "ஸ்நானன்" என்ற வார்த்தை வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த நாட்களில் இருந்ததில் இருந்து மாறுபட்ட சொல்லர்த்தம் ஒன்றை இன்றைய நாட்களில் கொண்டுள்ளது.* (Baptist) *"ஸ்நானன்" என்பது, "ஞானஸ்நானம் கொடுக்கின்ற ஒருவர்" என்று நேரடியான அர்த்தம் தருகிற கிரேக்க வார்த்தை யிலிருந்து ஒலி பெயர்க்கப்பட்டுள்ளது.* The Revised Standard Version\the New Revised Standard Version *ஆகிய மொழிபெயர்ப்புகள், The New Testament in the Language of Today என்ற புத்தகத்தில் வில்லியம் எஃப். பெக் அவர்கள் செய்கின்றது போலவே, "ஸ்நானன்"* (Baptizer) *என்றே மொழிபெயர்க்கின்றன. இது* J. B. *ரோத்தர் ஹாம் அவர்களின் The Emphasized New Testament: A New Translation என்ற புத்தகத்தில்,* "Immerser" *(முழுக்காட்டுபவர்) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்தொடரில் நான், யோவானை* "the Baptizer" *(ஸ்நானன்) என்றே குறிப்பிடுவேன்.* [13]Eric W. Hayden, *Preaching Through the Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1964), 180. [14]Glen Gray and Tim Woodroof, *Look at the Book* (Lincoln, Neb.: Lincoln church of Christ, 1988), 169. [15]*சில எழுத்தாளர்கள், மத்தயு சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் இராஜ்யம் பற்றிய குறிப்புகள் ஒரு நூறு எண்ணிக்கைக்கு நெருங்கிய அளவில் இருப்பதாகக் கண்டறிந்துள்ளார்கள்.* [16]*சுவிசேஷ எழுத்தாளர்களில் மத்தேயு மாத்திரமே "பரலோக இராஜ்யம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்.* [17]Gray and Woodroof, 169. [18]*நமது [பிந்திய] பாடங்களில் நாம் இவைகளைக் கலந்துரையாடுவோம். யூதர்களின்மீது மத்தேயுவின் எதிர்மறை வலியுறுத்துதல்களையும் நாம் கவனிக்க முடியும். இயேசு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜாவாயிருந்தார், ஆனால் அவர்*

யூதர்கள் எதிர்பார்த்த வகையிலான ராஜாவாயிருக்கவில்லை, எனவே அவர்கள் அவரை புறக்கணித்து விட்டார்கள். இதன் விளைவாக மத்தேயு, யூதர்களுக்கு எதிராகப் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற மிகவும் கடுமையான கூற்றுக்களைப் பதிவு செய்தார் (மத். 23ஐக் காணவும்). [19]பின்வரும் அதிகாரங்களில் ஐந்து மாபெரும் உரையாடல்கள் காணப் படுகின்றன: (1) 5-7; (2) 10; (3) 13; (4) 18; (5) 24; 25. [20]நீங்கள் ''சபை'' (congregation) என்ற வார்த்தையை ஒரு ஒத்த வாக்கிய அட்டவணைப் புத்தகத்தில் காண விரும்பலாம்.

[21]"ஜெப ஆலயம்" (synagogue) என்பது "ஒன்றுகூடி வழிநடத்துதல்" என்று அர்த்தம் தருகிற கிரேக்கக் கூட்டு வார்த்தை ஒன்றின் ஒலிபெயர்ப்பாக உள்ளது, அதே வேளையில் ekklesia என்றால் "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்று அர்த்தப்படுகிறது (வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இவர்கள் ஒன்றுகூட அழைக்கப்பட்டவர்கள்). [22]Tenney, 145. [23]Mears, 358-69. [24]John Phillips, *Exploring the Scriptures* (London: Victory Press, 1965), 194-95. [25]மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய புத்தகங்களின் மீதான பாடங்களுக்கு அவற்றில் இயல்பின் காரணமாக நான் வழக்கமான "முடிவுரையை" தருவதில்லை. நீங்கள் ஒவ்வொரு முறையும் வரைக்குறிப்பை முன்னிறுத்திய பின்பு, நீங்கள் இந்தப் புத்தகத்தைச் சுருக்கமாக மறுகண்ணோட்டமிடவும் பின்பு அடுத்த பாடத்திற்கான பாடக்கருத்தை அறிவிக்கவும் விரும்பலாம்.

## ૩

# மாற்கு சுவிசேஷம்

## *சேவகராகிய கிறிஸ்து*

*சுவிசேஷ விவரங்களில் இரண்டாவதாக உள்ளதான மாற்கு சுவிசேஷம் என்பது, ஒருவேளை மிகவும் குறைவாக வாசிக்கப்படுவதாகவும் மற்றும் இவை நான்கிலும் மிகவும் குறைவாக பாராட்டப்படுவதாகவும் இருக்கலாம். ஆயினும் இது கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய வல்லமை நிறைந்த எடுத்துரைப்பாக உள்ளது.*

## மாற்கு சுவிசேஷத்திற்கு அறிமுகம்

**இந்தப் புத்தகத்தின் எழுத்தாளர்**

*மாற்கு சுவிசேஷப் புத்தகத்தில் இதன் எழுத்தாளரின் பெயர் குறிப்பிடப்படுவதில்லை, ஆனால் (ஏவுதல் பெற்றிராத) பழங்காலப் பாரம்பரிய வரலாறு, இந்தப் புத்தகம் யோவான் மாற்குவினால் எழுதப்பட்டதென்று குறிப்பிடுகிறது. சபை வரலாற்றாளரான ஈசூபியஸ் (c. கி.பி. 260-340) அவர்கள், மாற்குதான் இப்புத்தகத்தை எழுதினார் என்று குறிப்பிட்ட பாப்பியஸ் (c. கி.பி. 60-150) என்பவரை மேற்கோள் காண்பித்தார். மேலும் அலெக்சந்திரியாவின் கிளமெண்ட் அவர்களும் ஓரிகன் என்பவரும் (c. கி.பி. 185-254). மாற்குதான் இந்தப் புத்தகத்தை எழுதினார் என்று நம்பியதாகவும் ஈசூபியஸ் அவர்கள் குறிப்பிட்டார்.[1] இந்தப் பாரம்பரியக் கூற்றை இரேனியுஸ் அவர்கள் (c. கி.பி. 140-195) தமது எழுத்துக்களில் ஆதரித்தார்.[2]*

*யோவான் ("யெகோவா கிருபைமிக்கவராக இருந்துள்ளார்") என்பதே யோவான் மாற்குவின் எபிரெயப் பெயராக இருந்தது, ஆனால் நாம் அவரது ரோமப் பெயரான மாற்குஸ் ("யுத்தம் விரும்பி") என்பதைக் கொண்டே நன்கு அறிகின்றோம். இவர் அநேகமாக, எருசலேமில் தமது தாயான மரியாளின் வீட்டில் வாழ்ந்திருக்க வேண்டும் (அப். 12:12). கிறிஸ்துவின் வாழ்வில், எருசலேமில் நடந்த சில நிகழ்ச்சிகளை இவர் கண்ணால் கண்ட சாட்சியாக இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. மாற்கு 14:51, 52ல் யோவான் மாற்கு, தம்மையே குறிப்பிட்டுக் கொள்ளுகின்றார் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றார்கள். மாற்கு, பேதுருவின் பிரசங்கத்தினால் மனம் மாற்றப்பட்டார் என்பது தெளிவு (1 பேது. 5:13). பிற்பாடு, இவரது தாயாரின் வீடு கிறிஸ்தவர்கள் கூடிவரும் ஒரு இடம் ஆயிற்று (அப். 12:12).[3]*

*மாற்குவை பர்னபாவின் இனத்தாராக கொலோசெயர் 4:10 அடையாளப்படுத்துகிறது. இவர் இளைஞராயிருந்தபோது, பவுலுடனும்*

பர்னபாவுடனும் ஊழியப் பயணத்திற்குப் புறப்பட்டுச் சென்றார், ஆனால் பயணம் முடியும் முன்பாகவே இவர் அதை விட்டுச் சென்றார் (அப். 12:25; 13:5, 13), இது பவுலை மிகவும் அதிருப்தியடைச் செய்தது (அப். 15:37-39). பர்னபாவோ, மாற்குவின் திறமைமீது இன்னமும் நம்பிக்கை கொண்டவராக இவரை, சீப்புருத் தீவுக்குப் பிரசங்கப் பயணமாக அழைத்துச் சென்றார் (அப். 15:39). பிற்பாடு மாற்கு, சுவிசேஷத்தைப் பரப்புவதில் பேதுருவுடன் இணைந்து உழைத்தார் (1 பேது. 5:13). கடைசியில் மாற்கு பவுலுடன் ஊழியம் செய்தார் மற்றும் அந்த அப்போஸ்தலர் இவரை ஒரு மதிப்புமிக்க உடைமையாக எண்ணினார் (கொலோ. 4:10, 11; பிலே. 24; 2 தீமோ. 4:11).

இயேசு மற்றும் பெரும்பாலான அப்போஸ்தலர்கள்[4] ஆகியோரை விடப் பொதுவாக இளையவராகக் கருதப்படும் மாற்கு சுமார் பத்து வயதுகள் இளையவராய் இருந்திருப்பார் என்று சிலரால் மதிப்பிடப் படுகின்றார். இவர், தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகியோருடன் அப்போஸ் தலர்களின் காலத்தில் ஒரு “இளைய பிரசங்கியாராக” கருதப்பட்டிருப்பார். இவர் எகிப்து நாட்டின் அலெக்சந்திரியா நகரில் சபை ஒன்றைத் தோற்றுவித்தலாக ஏவுதல் பெற்றிராத பாரம்பரிய வரலாறு கூறுகிறது.

பவுல் உட்பட ஏவுதல் பெற்ற பல மனிதர்களிடம் இருந்து கற்றறியக் கூடிய வாய்ப்பை மாற்கு கொண்டிருந்தார். ஆயினும், பழங்கால (ஏவுதல் பெற்றிராத) பாரம்பரியமானது பேதுருவுடன் இவருக்கு இருந்த உறவைப் பற்றி மட்டுமே வெகுவாக வலியுறுத்துகிறது. மாற்கு சுவிசேஷத்தை யோவான் மாற்கு எழுதியதாகக் குறிப்பிடுகிற அதை ஆதாரமூலமானது, இவரது இந்த விவரம் பேதுருவிடம் இருந்து வந்ததாக வலியுறுத்துகிறது. எடுத்துக்காட்டாக, மாற்குவை “பேதுருவின் மொழிபெயர்ப்பாளர்” என்று பாப்பியஸ் என்பவர் குறிப்பிட்டார். அவர் பின்வருமாறு கூறினார்:

> ... இவர் பதிவுசெய்தது எதுவாக இருப்பினும், இவர் மிகவும் சரியாக அவற்றை எழுதினார், ஆயினும் இவர் நமது கர்த்தரை கேட்டதோ அல்லது பின்பற்றியதோ இல்லை என்ற காரணத்தினால், அவற்றை நமது கர்த்தர் பேசிய அல்லது செய்த வரிசைமுறைப்படி இவர் பதிவு செய்யவில்லை, ஆனால் ... இவர் பேதுருவுடன் இணைந்திருந்தார், அவரே இவருக்குத் தேவையான அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார், ஆனால் நமது கர்த்தருடைய உரைகளின் வரலாற்றை கொடுக்க வில்லை; எனவே மாற்கு சிலவற்றைத் தாம் பதிவு செய்தபடி எழுதியதில் தவறு எதுவும் செய்யவில்லை; ஏனெனில் இவர் ஒரு விஷயத்தை மிகவும் எச்சரிக்கையாகக் கவனித்தார், தாம் கேட்ட எதையும் கடந்து செல்லாமலும் அல்லது இந்த விவரங்களில் எதையாவது தவறாகக் குறிப்பிடாமலும் இருந்தார்.[5]

பேதுருவின் உரையைக் கேட்டவர்கள், பேதுரு வாய்மொழியாக உரையாற்றியிருந்து உபதேசத்தின் பதிவு ஒன்றை வைத்துச் செல்லும்படி மாற்குவை வற்புறுத்தினார்கள் என்றும் இந்த விரமானது சபைகளில் வாசிக்கப்படுவதைப் பேதுரு அங்கீகரித்தார் என்றும் அலெக்சந்திரியா நகரத்து கிளமென்ட் அவர்கள் கூறினார்.[6] இரேனியுஸ் அவர்கள்,

*“பேதுருவால் பிரசங்கிக்கப்பட்டவற்றை பேதுரு மற்றும் பவுல் ஆகியோரின் இறப்பிற்குப் பின்பு மாற்கு எழுதியதின் மூலம் நமக்குக் கொடுத்தார்” என்று எழுதினார்.*[7]

*இந்தப் பழங்காலப் பாரம்பரியத்தை, பல உண்மைகள் உறுதிப்படுத்து வதாகக் காணப்படுகிறது: அப். 10:36-42ல் பேதுருவின் பிரசங்கமானது மாற்கு சுவிசேஷத்திற்கு ஒரு வரைக்குறிப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடும். பேதுருவைக் குறிப்பிடுகின்ற வசனமான மாற்கு 16:7ல் உள்ள வார்த்தைகளை எழுதிய ஒரே சுவிசேஷ எழுத்தாளராக மாற்கு இருக்கின் றார். இந்தப் புத்தகத்தின் பாணியானது, கண்ணால் கண்ட சாட்சியின் வாய்மொழி சாட்சியைப் போன்றதாக உள்ளது. (மாற்கு சுவிசேஷமானது “ஒரு பேச்சாளரின் கரடுமுரடான கிரேக்க மொழியுரையை” கொண்டிருப் பதாகச் சில எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.)*

**இந்தப் புத்தகத்தின நோக்கம்**

*ரோமாபுரி மக்கள் கூட்டத்தாருக்காக மாற்கு இதை எழுதினார் என்று பெரும்பான்மையானோர் நம்புகின்றார்கள்.*[8] *வம்சா வழி வரலாறு உட்பட, அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தாருக்கு ஆர்வமற்ற விஷயங்களை இவர் நீக்கி விட்டார். இவர் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களைப் பற்றி ஒரு சிறிதே கூறினார். இவர் கிறிஸ்துவின் வாழ்வில் யூதப் பின்னணியெதையும் வலியுறுத்தவில்லை. யூத வார்த்தைகளையோ அல்லது வழக்கங்களையோ அறிமுகப்படுத்தியபோது, இவர் அவற்றை வழக்கமாக விளக்கப் படுத்தினார். மற்ற சுவிசேஷ எழுத்தாளர்கள் கிரேக்க மொழியைப் பயன்படுத்திய இடங்களில் இவர் இலத்தீன் சொற்றொடர்களைப் பயன்படுத்தினார் (உதாரணத்திற்கு,* “basket” *என்பதற்கு modius* [*மாற். 4:21*], “poll tax” *என்பதற்கு census* [*12:14*], “executioner” *என்பதற்கு Speculator* [*6:27*], *மற்றும்* “centurion” *என்பதற்கு centurio* [*15:39, 44, 45*]*). சுவிசேஷ எழுத்தாளர்களில் இவர் ஒருவர் மாத்திரமே ரூபஸ் பற்றிக் குறிப்பிட்டார் (15:21), இந்த ரூபஸ் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு அறிமுகமானவராக இருந்தார் (ரோமர் 16:13). “மாற்கு*[வின் புத்தகமானது] *நடைமுறையில் ரோ மனநிலை கொண்டுள்ள, சுவிசேஷம் அறிவிக்கப் படாத சாதாரண மனிதருக்கு* [*சுவிசேஷத்தை அறிவிக்கும்*] *நோக்கம் கொண்டுள்ளது” என்று மெரில் டென்னீ அவர்கள் முடிவு செய்தார்.*[9]

*இப்படிப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்திற்கு ஏற்புடையதாக இருப்ப தற்கு, மாற்கு இயேசுவை செயல்பாட்டின் மனிதராக முன்னிறுத்தினார். இந்தப் புத்தகம் சிறியதாகவும் சுருக்கமாகவும், நான்கு சுவிசேஷ புத்தகங்களில் மிகவும் சிறியதாகவும் உள்ளது. போதனைகள் கொஞ்சமே பதிவு செய்யப்பட்டுள்ளன: விரித்துரைக்கப்பட்டவைகளாக நான்கு உவமைகள் மட்டுமே உள்ளன, விரிவான உரையாடல்கள் எதுவுமே இல்லை. மாற்கு, இயேசுவின் அற்புதங்களை வலியுறுத்தினார், இவை மனிதரின் தேவைகளைச் சந்தித்தன: இதன் அளவை ஆழ்ந்து சிந்திக்கையில், இந்த விவரமானது வேறு எந்த சுவிசேஷ விவரத்தைக் காட்டிலும் அதிகமாக அற்புதங்களுக்கு இடம் அளிக்கிறது.*

*மாற்குவின் புத்தகம் இயங்குகின்றதாக உள்ளது. இதன் பதினாறில் பதிமூன்று அதிகாரங்கள், [ஆங்கில மொழியில்] "and" என்ற வார்த்தையுடன் தொடங்குகின்றன. இந்தப் புத்தகத்தின் ஆசிரியருக்கு [மாற்குவுக்கு] பிரியமான கிரேக்க வார்த்தையாக இருந்தது euthus (அல்லது eutheos) என்பதாகும், இது "நேராக," "உடனடியாக," "நேரடியாக," அல்லது "உடனே" என்று மொழிபெயர்க்கப்பட்டது. மாற்கு இந்த வார்த்தையை நாற்பத்து இரண்டு முறைகள் பயன்படுத்தினார். இயேசு எப்போதும் அதிகரிக்கும் வேகத்துடன் தமது ஊழியத்தின் நிறைவேற்றத்தை நோக்கி முன்னதாக நகருகின்றவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார்.*

*மாற்கு 10:45 வசனம் இந்தப் புத்தகத்தின் திறவுகோலாக உள்ளது: "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." "ஊழியங்கொள்ளுதல்" மற்றும் "ஊழியஞ் செய்தல்" என்ற வார்த்தைகளுக்குச் சிறப்புக் கவனம் கொடுங்கள். மத்தேயுவின் புத்தகத்தில் இயேசு ஒரு ராஜாவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார்; ஆனால் மாற்குவின் புத்தகத்தில் இயேசு ஒரு சேவகராக இருப்பதாகக் காண்பிக்கப் பட்டுள்ளார். மாற்கு, இயேசுவுக்குத் தெய்வீக இயற்பெயர் எதையும் பயன்படுத்தவில்லை, மற்றும் அதிகாரத்துவம் இங்கு வலியுறுத்தப்பட வில்லை.[10] இயேசு ஊழியம் செய்தார்.[11]*

*ஏவுதல் பெற்ற இந்த விவரத்தின் நோக்கமானது மற்ற எல்லா சுவிசேஷங்களின் நோக்கத்தைப் போன்றதாகவே உள்ளது: இயேசுவை தேவனுடைய குமாரனாகவும் நமது இரட்சகராகவும் காண்பித்தல். இந்தப் புத்தகம், "தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்" (மாற். 1:1) என்று தொடங்குகிறது. நான்கு சுவிசேஷ விவரங்களிலும் சேர்த்து, "சுவிசேஷம்" என்ற வார்த்தையானது பன்னிரெண்டு முறைகள் வருகிறது; இந்தப் பன்னிரெண்டில் எட்டு முறைகள் மாற்கு சுவிசேஷத்தில் உள்ளன. மாற்கு சுவிசேஷமானது அணுகு முறையில் மட்டுமே மற்ற சுவிசேஷப் புத்தகங்களில் இருந்து மாறுபடுகிறது: இவர் இயேசுவைப் பற்றி ஒரு சுருக்கமான சித்தரத்தை வரைந்து விட்டு, பின்பு அந்தச் சித்திரமே தனக்காகப் பேசும்படிக்கு விட்டுவிட்டார்.*

### இந்தப் புத்தகத்தின் பண்புகள்

*இந்தப் புத்தகத்தின் பண்பு, சாத்தியக்கூறுள்ள இதன் ஆதார மூலத்திற்கும் (பேதுருவுக்கும்) மற்றும் இதன் நோக்கத்திற்கும் (இயேசுவை ஒரு சேவகராக எடுத்துரைத்தல்) அதிகம் உறவுபடுவதாக உள்ளது.*

*ஏற்கனவே குறிப்பிட்டபடி, மாற்கு சுவிசேஷம் செயல்பாட்டின் சுவிசேஷமாக உள்ளது.*

*மேலும், மாற்கு சுவிசேஷம் உணர்வின் சுவிசேஷமாக உள்ளது. இந்தப் புத்தகம், இயேசுவைக் கண்டு கேட்டவர்களின் உணர்வுகளையும் பதில்செயல்களையும் பதிவு செய்கிறது: "எல்லாரும் ஆச்சரியப்பட்டு" (1:27); "அவர்கள் இருதயங்களில் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்" (2:7); "அவர்கள் மிகவும் பயந்து" (4:41); "அவர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்"*

*(6:14-16); "அவர்கள் மேன்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்" (7:37); "அவர்கள் எரிச்சலானார்கள்" (14:1). இப்படிப்பட்ட இருபத்து மூன்று பதில்செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் புத்தகம் இயேசுவின் உணர்வுகளையும் பதிவு செய்கிறது: அவர் "மனதுருகி" (1:41; 6:34; 8:2); அவர் கோபமடைந்தார் (3:5); அவர் "விசனமடைந்தார்" (10:14); அவர் பெருமூச்சு விட்டார் (7:34; 8:12); அவர் ''திகிலடையவும் மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்" (14:33, 34).*

*மாற்கு சுவிசேஷம் அக்கறையின் சுவிசேஷமாகவும் இருக்கிறது. இயேசு, மக்களின் மகிழ்ச்சி, பசி, துன்பங்கள், ஆரோக்கியம் மற்றும் மாய்மாலம் ஆகியவை பற்றி அக்கறை உள்ளவராயிருந்தார்.*

*இத்துடன் கூடுதலாக, மாற்குவின் சுவிசேஷமானது ஊழியத்தின் சுவிசேஷமாக உள்ளது. இயேசு அந்நியருக்கு உதவி செய்தார், ஊமைகளை விடுவித்தார், பெரும்பசியுற்றோருக்கு உணவளித்தார் மற்றும் அடிப்படைவாதிகளைக் கடிந்து கொண்டார்.*

*மற்ற சுவிசேஷ விவரங்களைப் போலவே, மாற்கு சுவிசேஷமும் சிலுவையின் சுவிசேஷமாக உள்ளது சிலுவையில் கிறிஸ்துவின் மரணம் என்பதே அவரது மாபெரும் ஊழியமாக உள்ளது. மாற்கு சுவிசேஷத்தின் நாற்பது சதவிகிதப் பகுதியானது, எருசலேமுக்குக் கடைசிப் பயணத்தையும் அதைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளையும் எடுத்துரைக்கிறது. இந்த நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடுத்துள்ள வகையில் மாற்கு சுவிசேஷம் யோவான் சுவிசேஷத்திற்கு இரண்டாம் இடத்தில் நிற்கிறது.*

*கடைசியாக, மாற்கு சுவிசேஷம் விரித்துரைக்கும் தன்மையின் சுவிசேஷமாக உள்ளது. இந்தப் புத்தகமானது இயேசுவின் தனிப்பட்ட உடல் அமைவுகளைக் கூட அறிக்கையிடுகிறது. இதன் பாணி புத்தம் புதியதாகவும் இயங்குவதாகவும் உள்ளது. சிலர் இதை ''தெருப் பிரசங்கியாரின் பாணி" என்றும் அழைத்துள்ளார்கள்.*

**இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலம்**

*மாற்கு சுவிசேஷம் முதல் நூற்றாண்டின் இரண்டாம் பாதியின் முற்பகுதியில் எழுதப்பட்டது என்பது தெளிவு. அலெக்சந்தரும் ரூப்புவும் மாற்குவின் வாசகர்களுக்கு நன்கு பழக்கமானவர்களாய் இருந்த காரணத்தினால்தான் அவர்களைப் பற்றி அவர் குறிப்பிட்டார் (மாற். 15:21). இது இந்தப் புத்தகத்தை சிலுவையிலிருந்து ஒரு தலைமுறைக்குள்ளாக ன்எழுதப்பட்டதாகதி வைக்கும். பாரம்பரியமானது இப்புத்தகத்தைப் பேதுருவுடன் தொடர்புபடுத்திற்று என்று நான் முன்பே குறிப்பிட்டு இருந்தேன். பழங்கால எழுத்தாளர்கள் பலர், மாற்குவின் சுவிசேஷம் சுற்றுக்கு விடப்படும் முன்பு அதைப் பேதுரு சரி பார்த்தார் என்று கருத்துத் தெரிவித்தார்கள். பேதுருவின் மரணம் கி.பி. 65க்கும் 68க்கும் இடையில் நிகழ்ந்திருக்கலாம் என்று நினைக்கப்படுகிறது.[12]*

*மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்கள் மாற்குவின் சுவிசேஷத்தைப் பார்த்து எழுதப்பட்டன என்று இன்றைய நாட்களில் பலர் நம்புகின்றார்கள், ஆனால் மிகத் தொடக்க கால (ஏவுதல் பெற்றிராத) பாரம்பரியங்கள்*

மத்தேயு சுவிசேஷத்தையே முதலிடத்தில் வைக்கின்றன. டென்னீயின் விளக்கம் இங்கு கருத்திற்குரியதாக உள்ளது:

> இந்த சுவிசேஷங்கள் என்பவை பரிசுத்த ஆவியானவரால் ஏவப் பட்டதினால் எழுதப்பட்ட கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலிக்க செய்தியினுடைய மூன்று எடுத்துரைப்புகளாய் இருக்கின்றன என்றால் [அவை இவ்வாறே இருக்கின்றன] ... இவை அப்போஸ்தலர்களும் அவர்களின் துணையாளர்களும் பிரசங்கித்த வற்றிலிருந்து எடுக்கப்பட்டவைகளா இருந்தன என்றால், இவை யாவும் ஒரே காலகட்டத்தில் உண்டாக்கப்பட்டிருப்பதற்குச் சாத்தியக் கூறு உள்ளது.[13]

மாற்கு சுவிசேஷம் எழுதப்பட்ட காலம் என்று யூகித்துக் கொடுக்கப் பட்டவைகளில் பின்வரும் மூன்று காலங்களும் அடங்கியுள்ளன: கி.பி. 50-60, 58-65 மற்றும் 60-70. இந்தப் புத்தகம் கி.பி. 70க்கு முன்பாகவே எழுதப்பட்டது என்று கூறுவது நமக்குப் பாதுகாப்பானதாக இருக்கும்.

**இந்தப் புத்தகத்தின் பிரிவுகள்**

மாற்கு சுவிசேஷப் புத்தகம் வரைக் குறிப்பிடுவதற்குச் சுலபமான புத்தகம் அல்ல. மாற்கு, சிந்தனையில் இறையியல் வரிசைக் கிரமம் எதையும் பின்பற்றவில்லை. இவரது விவரமானது ஒரு முற்றான வகையில் முழுமையான செயல்தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தைப் புறக்குறிப்பிடுவதற்கு மாறுபட்ட பல அணுகு முறைகள் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளன: ஜான் பிலிப்ஸ் அவர்கள் தமது பிரிவுகளுக்கு, மாற்கு 10:45ன் திறவுகோல் சிந்தனைகளை பயன்படுத்தினார்: (1) சேவகர் தமது வாழ்வை ஊழியத்தில் அளிக்கின்றார் (அதி. 1-10); (2) சேவகர் தமது வாழ்வைப் பலியாக அளிக்கின்றார் (அதி. 11-16).[14] ஹென்ரிட்டா மெயர்ஸ் அவர்கள் அந்தக் கருத்தை விரிவாக்கி, "சேவகர்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி ஏழு மடங்கு பிரிவு ஒன்றை கருத்துத் தெரிவித்தார்: (1) சேவகரின் வருகையும் அவர் சோதிக்கப்படுதலும் (அதி. 1); (2) சேவகர் ஊழியம் செய்தல் (அதி. 2 மற்றும் 3); மற்றும் இதுபோல் இன்னும் பிற.[15] சிலர் இந்தப் புத்தகத்தை இயேசு ஊழியம் செய்த இரு பிரதான பகுதிகளான கலிலேயா மற்றும் யூதேயா என்பவைகளைக் கொண்டு இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றார்கள். டென்னீயின் ஏழு பாகமான பிரிவானது இயேசு பயணம் செய்த பகுதிகளைப் பற்றிய அதிகம் விரிவான இடைநிறுத்தலைப் பயன்படுத்துகிறது.[16]

பின்வரும் வரைக்குறிப்பில் நாம் இந்தக் கருத்துக்கள் மற்றும் பிறவற்றின் இணைவொன்றைப் பயன்படுத்துவோம். ஆயினும் மாற்கு சுவிசேஷம் முழுமையான ஒன்றாகவே கருதப்பட வேண்டும் என்பதை மனதில் வையுங்கள்.

# மாற்குவின் சுவிசேஷப் புத்தகத்தின் வரைக்குறிப்பு

I. *சேவகர் ஊழியம் செய்யத் தயாரிக்கப்படுதல் (1:1-13).*
   A. *பட்டமும் நோக்கமும் (1:1).*
   B. *யோவானால் தயாரிக்கப்பட்ட வழி (1:2-8).*
   C. *இயேசுவின் ஞானஸ்நானத்தினால் அவர் தயார் செய்யப்படுதல் (1:9-11).*
   D. *இயேசு சோதிக்கப்படுதலினால் தயார் செய்யப்படுதல் (1:12, 13).*
   E. *இவை எல்லாவற்றிலும் இயேசு தமது ஆதாரச் சான்றுகளைப் பெற்றுக் கொண்டார். அவர் ...*
      1. *யோவானால் சுட்டிக்காண்பிக்கப்பட்டார்.*
      2. *பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் செய்விக்கபப்ட்டார்.*
      3. *பிசாசானவனால் சோதிக்கப்பட்டார்.*

II. *ஊழியத்திற்கு சேவகரின் உறுதிப்பாடு (1:14-8:30).*
   A. *ஊழியத்தின் தொடக்கம் (1:14-2:12).*
      1. *இந்தக் காலகட்டம் அடிப்படையில் கலிலேயாவில் நடந்தது, யோவான் கொல்லப்பட்ட பின்பு இயேசு அங்கு சென்றார் (1:14, 15).*
      2. *இயேசு நான்கு மீனவர்களை அழைத்தல் (1:16-20).*
      3. *கப்பர்நகூமில் ஒரு மாபெரும் நாள் (1:21-34).*
      4. *தொழுநோயாளி ஒருவரைக் குணமாக்கியது உட்பட கலிலேயாவில் ஒரு பொதுப் பயணம் (1:35-45).*
      5. *மேற்கூரை வழியே இறக்கி விடப்பட்ட மனிதர் ஒருவரைக் குணமாக்கியது உட்பட, கப்பர்நகூமில் இன்னொரு மாபெரும் நாள் (2:1-12). பாவங்களை மன்னிப்பதற்கான இயேசுவின் வல்லமையினால் குணமாக்குதல்களின் பட்டியல் உச்சகட்டத்தை அடைதல்.*
   B. *விமர்சனம் தொடங்குகிறது (2:13-3:35).*
      1. *கடலோரம் போதித்தல் (2:13).*
      2. *லேவியை அழைத்தலும் பாவிகளுடன் உண்ணுதலும் (மற்றும் விமர்சனமும்) (2:14-17).*
      3. *உபவாசம் பற்றிய விமர்சனம் (2:18-22).*
      4. *ஓய்வுநாள் பற்றிய விமர்சனங்கள் (2:23-3:5).*
      5. *பரிசேயர்கள் மற்றும் ஏரோதியர்கள் ஆகியோரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சூழ்ச்சி (3:6).*
      6. *இயேசுவின் ஊழியம் அதிகமாய் மாறுபடுதல்:*

பன்னிருவரைத் தேர்ந்து கொள்ளுதலும், அவரது நண்பர் களும்கூட, “அவர் மதிமயங்கியிருக்கிறார்” (3:7-21) என்று நினைக்கும் அளவுக்குப் பணியில் மும்முரமாகுதல்.

7. பெயல்செபூலின் அதிகாரத்தினாலேயே இயேசு தமது அற்புதங்களைச் செய்தார் என்ற குற்றச்சாட்டு; பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான பாவம் பற்றிய போதனை (3:22-30).
8. இயேசுவின் தாயும் சகோதர சகோதரிகளுமே தேவனு டைய சித்தத்தின்படி செய்கின்றவர்கள் என்று அடையாளப் படுத்துப்படுதல் (3:31-35).

C. *ஊழியத்தின் அறைகூவல்.* (தொடர்ந்த எதிர்ப்புக்களுடன், அவ்வப்போது கூட்டத்தில் இருந்து விலகிச் சென்று - கடலுக்கு அப்பாலிருந்த தெக்கப்போலிக்கு, பெனிக்கியாவுக்கு, பிலிப்பி செசரியாவுக்கு, மற்றும் பிற இடங்களுக்குச் செல்லுதல்.)

1. ஒரு கப்பலில் ன்படவில்தி இருந்துகொண்டு உவமைகளில் போதித்தல்: விதைப்பவன், விளக்கு, வளர்ச்சி, மற்றும் கடுகு விதை ஆகியவற்றின் உவமைகள் (4:1-34).
2. கலிலேயாக் கடலைக் கடந்து (மற்றும் புயலை அமர்த்தி) - தெக்கப்போலி செல்லுதல் (4:35-41).
3. கதரேனருடைய நாட்டில் அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதனைக் குணமாக்குதல் (மற்றும் இரண்டாயிரம் பன்றிகள் இறந்துபோன வரலாறு) (5:1-20).
4. மீண்டும் கடலைக் கடந்து யவீருவின் மகளைக் குணமாக்குதல் (அத்துடன் “அதே வேளையில் நடைபெற்ற இன்னொரு அற்புதம்”) (5:21-43).
5. நாசரேத்தூர் செல்லுதலும் அங்கு புறக்கணிக்கப்படுதலும் (இயேசு ஒரு தச்சர் என்று அழைக்கப்படுதல்) (6:1-6).
6. வரையறைக்குட்பட்ட ஊழியத்திற்குப் பன்னிருவரை அனுப்புதல் (ஏரோதின் கவனத்தைக் கவருதல் - அந்த அரசன் யோவானுக்குச் செய்ததைச் சிந்தித்துப் பார்க்கையில் இது ஒரு அபாயமிக்க நடவடிக்கையாக இருந்தது) (6:7-32).
7. தமது சீஷர்களுடன் வனாந்தரமான இடத்திற்குச் செல்லுதல், திரளான மக்கட்கூட்டம் பின்தொடருதல்; ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி) (6:33-44).
8. கடலானது இயேசு நடப்பதற்கு ஒரு ஓதுக்காகப் பணியாற்றுதல் (6:45-52) - இதைத் தொடர்ந்து

கெனசெரேத் பகுதியில் பொதுவான போதனையும் குணமாக்குதலும் *(6:53-56).*

9. *கழுவாத கைகளினால் உண்ணுதல் பற்றி விமர்சிக்கப்படுதல் - மற்றும் பாரம்பரியத்துவம் பற்றிய ஒரு உரை (7:1-23).*
10. *தீரு சீதோன் ஊர்களுக்குப் பின்வாங்கிச் செல்லுதல் - மற்றும் சீரோபெனிக்கியா நாட்டுப் பெண்ணொருத்தியின் மகளைக் குணமாக்கிய வரலாறு (7:24-30).*
11. *தெக்கப்போலிக்குப் பின்வாங்கிச் செல்லுதல்:*
    a. *பொதுவான போதனையும் குணமாக்குதலும் (7:31-37).*
    b. *நாலாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (8:1-9).*
12. *கலிலேயாவுக்குத் திரும்புதல் (தல்மனூத்தா என்பது கலிலேயாக் கடலின் மேற்குக் கரையில் உள்ள பகுதியாகும்) - ஒரு அடையாளம் தேடப்படுதல், "பரிசேயர்களின் புளித்த மா" பற்றிய எச்சரிக்கை (8:10-21).*
13. *பெத்சாயிதாவுக்குப் பின்வாங்கிச் செல்லுதல் - பார்வையற்ற ஒரு மனிதர் குணமாக்கப்படுதல் (8:22-26).*
14. *பிலிப்பி செசரியாவுக்குப் பின்வாங்கிச் செல்லுதல் - மற்றும் மாபெரும் அறிக்கை (8:27-30) (இயேசுவின் ஊழியத்தின் உச்சக்கட்டம்).*

III. *சேவகர் ஊழியத்தின் மாபெரும் செயல்பாட்டிற்கு கடந்து செல்லுதல்: சிலுவையில் மரித்தல் (8:31-15:47).*

A. *அவரது முடிவு ஊழியம் (8:31-10:52).*

1. *தமது மரணத்திற்காகத் தமது சீஷர்களைத் தயார் செய்ய முயற்சித்தல்.*
    a. *தாம் மரிக்கப் போவதாகத் தமது சீஷர்களிடம் கூறி, தமது சீஷர்கள் தங்கள் சிலுவைகளை எடுத்துக்கொள்ளும்படி ஊக்கப்படுத்துதல் (8:31-9:1). (9:1ஐக் காணவும்.)*
    b. *மறுரூபத்தில் இயேசுவின் உண்மையான மகிமை காணப்படுதல்; உயிர்த்தெழுதல் முன் ரைக்கப்படுதல் (9:2-13).*
    c. *தமது சீஷர்கள் குணமாக்க முடியாத ஒரு பையனைக் குணமாக்குதல் (9:14-29).*
    d. *தமது மரணத்தைப் பற்றிக் கூடுதலான போதனை (9:30-32).*
    e. *சீஷர்களின் முற்றிலும் தவறான*

*புரிந்துகொள்ளுதல்; யார் பெரியவன் என்றும் யார் கர்த்தருக்கு அருகில் அமருவது என்றும் சண்டையிட்டுக் கொள்ளுதல் (9:33-50).*

2. *எருசலேமுக்குப் பயணத்தைத் தொடங்குதல்.*
   a. *யூதேயாவிலும் யோர்தானுக்கு அப்பாலும் (பெரேயாவில்) (10:1).*
      *(1) திருமணம் மற்றும் விவாக ரத்துக் குறித்து இயேசுவின் அறைகூவல் (10:2-12).*
      *(2) பிள்ளைகளை ஆசீர்வதித்தல் (10:13-16).*
      *(3) ஐசுவரியம் உள்ள வாலிப அதிகாரியின் வரலாறு - எல்லாவற்றையும் கைவிடுதலின் பலன்கள் (10:17-31).*
   b. *எருசலேமுக்குச் செல்லும் வழியில்.*
      *(1) நடக்க இருந்தது பற்றித் தமது சீஷர்களுக்கு விளக்கப்படுத்துதல் (10:32-34). அவர்களில் இருவர் அவரது வலம் மற்றும் இடது புறங்களில் அமர விரும்பும் அளவுக்கு அவர்களின் தவறான புரிந்து கொள்ளுதல் அதிகமாய் இருத்தல் (10:35-45). (ஒரு திறவுகோல் வசனம்: 10:45.)*
      *(2) எரிகோவின் வழியாகக் கடந்து செல்லுதல்; பார்வையற்ற பர்திமேயு குணமாக்கப்படுதல் (10:46-52).*

B. *ஒரு இடர்ப்பாடுமிக்க வேளை: அவரது ஊழியத்தின் கடைசி வாரம் (11:1-14:42).*
   1. *ஞாயிற்றுக்கிழமை: வெற்றிப் பிரவேசத்தின் நாள் (11:1-11).*
   2. *திங்கட்கிழமை: அத்திமரத்தை சபித்து ஆலயத்தைச் சுத்திகரித்த நாள் (11:12-19).*
   3. *செவ்வாய்க்கிழமை ஊழியம் மும்முரமான நாள்.*
      a. *அத்திமரம் பட்டுப் போகுதல் (11:20-26).*
      b. *கேள்விகளின் நாள்.*
         *(1) "எந்த அதிகாரத்தினால்" என்ற கேள்வி (11:27-33).*
         *(2) பொல்லாத தோட்ட வேலைக்காரர்களைப் பற்றிய உவமையின் இடைச் செருகல் (12:1-12).*
         *(3) இராயனுக்கு வரிசெலுத்துதல் பற்றிய ஒரு கேள்வி (12:13-17).*
         *(4) உயிர்த்தெழுதல் பற்றிய ஒரு கேள்வி (12:18-27).*
         *(5) பிரதான கற்பனை பற்றிய ஒரு கேள்வியும்,*

ராஜ்யத்திற்குத் தூரமானவராய் இராதவரும் (12:28-34).

(6) இயேசுவின் விரோதிகள் வாயடைக்கப்படுதல்; இயேசுவிடமிருந்து ஒரு கேள்வி (12:35-37).

c. வேதபாரகர்களைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்கும்படி ஒரு எச்சரிக்கை (12:38-40).

d. விதவையின் காணிக்கை (12:41-44).

e. ஆலயத்தை விட்டு வெளியேறுதல், இயேசுவிடமிருந்து அருள்வெளிப்பாடான ஒரு செய்தி (13:1-37).

4. புதன் கிழமை: இயேசுவுக்கு ஒரு அமைதியான நாள்.

a. அவரது விரோதிகளுக்கு மும்முரமான பணி நாள் (14:1, 2), ஆனால் இயேசுவுக்கு ஒரு அமைதியான நாள்.

b. பெத்தானியில் உணவு மற்றும் இயேசு அபிஷேகிக்கப் படுதல் (14:3-9).

c. இயேசுவைக் கொல்லுகிற திட்டத்தில் யூதாஸின் பங்கு (14:10, 11).

5. வியாழக்கிழமை: தயாரிப்பின் நாள்.

a. பஸ்காவுக்குத் தயார் செய்தல் (14:12-16).

b. பஸ்கா உணவும் கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்துதலும் (14:17-26).

c. எல்லாரும் இயேசுவைக் கை விடுவார்கள் மற்றும் பேதுரு அவரை மறுத்தலிப்பார் என்ற முன்னு ரைத்தல் (14:27-31).

d. கெத்செமனே தோட்டத்திற்குள் (14:32-42).

C. (வெள்ளிக்கிழமையன்று) அவர் சிலுவையில் அறையப்படுதலும் அடக்கம் பண்ணப்படுதலும் (14:43-15:47).

1. இயேசு காட்டிக் கொடுக்கப்படுதலும் சீஷர்கள் ஓடிப்போகுதலும் (14:43-52).

2. காய்பாவுக்கு முன்பாக விசாரணை, பேதுரு நெருப்பினருகில் குளிர்காய்தல் (14:53-65).

3. பேதுருவின் மறுதலிப்பு (14:66-72).

4. சனதெரீன் சங்கத்தினரால் உறுதிப்படுத்தப்படுதல், பிலாத்துவின் முன்பாக விசாரணை; பரபாஸ் விடுவிக்கப்பட்டு, இயேசு ஏளனம் செய்யப்படுதல் (15:1-20).

5. எனது பாவங்களுக்காக இயேசுவின் மரணம் (15:21-41).

6. இயேசுவின் உடல் அடக்கம் (15:42-47).

IV. *உயிர்த்தெழுதலினால் சேவகர் உயர்த்தப்படுதல் (16:1-20).*
   A. *கல்லறைக்குப் பெண்களின் பயணம் மற்றும் தூதனின் அறிவிப்பு (16:1-8).*[17]
   B. *உயிர்த்தெழுதலின் சில தரிசனங்கள்:*
      1. *மகதலேனா மரியாளுக்கு (16:9-11).*
      2. *இரண்டு சீஷர்களுக்கு (16:12, 13).*
      3. *பதினொருவருக்கு (16:14-18). (சீஷர்களுக்குத் தேவைப்பட்ட விசுவாசமும் பிரதான கட்டளையும்: 16:15, 16).*
   C. *இயேசு பரத்திற்கு ஏறிச் செல்லுதல், அத்துடன் இயேசுவின் உறுதிப்படுத்துதலுடன் சீஷர்களின் பின்னாளைய ஊழியம் (16:19, 20).*

---

*குறிப்புகள்*

[1]Eusebius *Ecclesiastical History* 3.39; 2.15; 6.25. *பாப்பியஸ் என்பவர் "அப்போஸ்தலிக்கப் பிதாக்களில்" ஒருவராக இருந்தார். அவரது எழுத்துக்களில் அப்போஸ்தலிக்க காலங்களின் வாய்மொழிப் பாரம்பரியங்கள் மற்றும் வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் வாய்ந்த உட்கண்ணோட்டங்கள் அடங்கியிருந்தன, ஆனால் அவைகள் பின்னாளைய வரலாற்றாளர்களான ஈசூபியஸ் மற்றும் இரேனியுஸ் ஆகியோரால் பாதுகாக்கப்பட்டிருந்த துணுக்குகளுக்குள்ளாக மட்டுமே தப்பியிருந்தன. மாபெரும் கற்றல் மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றைக் கொண்டிருந்த எழுத்தாளரான ஈசூபியஸ் அவர்கள், சபையின் வளர்ச்சி பற்றி விவரித்தல் முதல் வரலாற்றளராக இருந்தார். கிரேக்க இறையியலாளரான அலெக்சந்திரியாவின் கிளமென்ட் அவர்கள், "சபைப் பிதாக்களில்" ஒருவராக கருதப்படுகின்றார். "விரிவுரைப் பிரசங்கித்தலின் பிதா" என்று அழைக்கப்படுகின்ற ஓரிகன் அவர்கள், மூன்றாம் நூற்றாண்டில் மிகவும் முக்கியமான பிரசங்கியாராகக் கண்ணோட்டமிடப்பட்டார்.* [2]Irenaeus *Against Heresies* 3.1.1. *இரேனியுஸ் அவர்கள் போலிகார்ப்பின் மாணவராயிருந்தார், இந்த போலிகார்ப் அவர்கள் சிமிர்னா சபையின் "மூப்பராக" இருந்தார், மற்றும் இவர் இரண்டாம் நூற்றாண்டின் மிக முக்கியமான இறையிய லாளராகக் கருதப்படுகின்றார்.* [3]*இந்த வீடு கடைசி இராப்போஜனம் நடைபெற்ற (மாற். 14:12-17) மற்றும்/அல்லது இயேசு வாக்குத்தத்தம் செய்திருந்த பரிசுத்த ஆவியானவர் வருவதற்காக அப்போஸ்தலர்கள் காத்திருந்த இடமாக இருந்திருக்க(அப். 1:4-8, 12)ச் சாத்தியக்கூறு உள்ளது.* [4]*மாற்கு 14:51, 52 வசனப்பகுதி யோவான் மாற்குவைக் குறிப்பிடுகிறது என்றால், இது இவர் அப்போஸ்தலர்களை விட இளையவராயிருந்தார் என்று சுட்டிக் காண்பிக்கும்.* [5]Eusebius *Ecclesiastical History* 2.16. [6]Ibid., 3.39. [7]Irenaeus *Against Heresies* 3.1.1. [8]*இந்தப் புத்தகத்தில் உள்ள "நான்கு சுவிசேஷ விவரங்கள்" என்ற பாடத்தில் காணவும்.* [9]Merrill C. Tenney, *New Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 157. [10]*பிரதான கட்டளை பற்றி மத்தேயு கொடுக்கும் விவரங்களை (மத். 28:18-20) மாற்கு கொடுக்கும் விவரங்களுடன் ஒப்பிடவும் (மாற். 16:15, 16).*

[11]*இவ்விடத்தில் ஆர்மிக்கதொரு பக்கக் குறிப்பு உள்ளது: மாற்கு, முதலில் ஒரு சேவகராயிருக்கத் தவறினார்.* [*ஆனால் இவரே*] *இயேசுவை ஒரு பரிபூரணமான*

சேவகராக எடுத்துரைத்தார். [12]பேதுருவின் மரணத்திற்குப் பின்பு மாற்கு இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்று தொடக்க கால எழுத்தாளர்கள் சிலர் இது எழுதப்பட்ட காலத்தைக் கணிக்கின்றார்கள், ஆனால் இது இந்தப் புத்தகம் "வெளியிடப்பட்டதை" (பிரதிகள் எடுத்து, சுற்றுக்கு விடப்பட்டதை)க் குறிப்பதாக இருக்கலாம். [13]Tenney, 157. [14]John Phillips, *Exploring the Scriptures* (London: Victory Press, 1965), 200. [15]Henrietta C. Mears, *What the Bible Is All About* (Glendale, Calif.: Gospel Light Publications, 1966), 390. [16]Tenney, 159-60. [17]வசனம் 8ஐ தொடர்ந்து வருகிற பன்னிரெண்டு வசனங்களின் அதிகாரத் துவத்தன்மை பற்றிக் கேள்வி கேட்கப்பட்டுள்ளது, ஏனெனில் இந்த வசனங்கள் மிக முக்கியமான கைப்பிரதிகள் பலவற்றில் காணப்படுவதில்லை. பெரும்பாலான பழமைவாத எழுத்தாளர்கள், இவைகள் இவ்விடத்திற்கு உரியவைகளாய் உள்ளன - இவை மூல வசனத்தின் பகுதிகளாக அதாவது மாற்குவினால் பின்னாட்களில் சேர்க்கப்பட்ட குறிப்பாகவோ அல்லது ஏவப்பட்ட இன்னொரு எழுத்தாளரால் சேர்க்கப்பட்ட ஏவுதல் பெற்ற குறிப்பாகவோ உள்ளன என்று நம்புகின்றார்கள். (இதன் உதாரணத்திற்கு. உபா. 34ஐக் காணவும், அங்கு வேறு யாரோ ஒரு எழுத்தாளர், அநேகமாக யோசுவா, மோசே எழுதிய புத்தகத்தில் மோசேயின் மரணம் பற்றிய செய்தியைக் கூடுதலாக எழுதினார்.)

# 4

# லூக்கா சுவிசேஷம்

## மனிதகுமாரனாகிய

## *கிறிஸ்து*

*அடுத்ததாக, நாம் மூன்றாவது சுவிசேஷ விவரத்திற்கு வருகின்றோம், இது எழுதப்பட்டவற்றிலேயே மிகவும் அழகிய ஆராய்ச்சிப் புத்தகம் என்று அழைக்கப்பட்டுள்ளது.*

## *லூக்கா சுவிசேஷத்திற்கு அறிமுகம்*

**இந்தப் புத்தகத்தை எழுதியவர்**

*லூக்கா சுவிசேஷத்தை எழுதியவரின் பெயர் இதில் தரப்படவில்லை, ஆனால் இதை எழுதியவர் "பிரியமான வைத்தியனாகிய" லூக்கா (கொலோ. 4:14) என்பதைப் பெரும்பான்மையானோர் ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.*

*லூக்கா சுவிசேஷத்தை எழுதியவர் அப். நடபடிகள் புத்தகத்தையும் எழுதினார் (லூக். 1:1-4ஐயும் அப். 1:1ஐயும் ஒப்பிட்டுக் காணவும்). இவ்விரு புத்தகங்களும் ஒரே புத்தகத்தின் இரு தொகுதிகளாக இருக்கும்படி வடிவமைக்கப்பட்டன என்பது தெளிவு.[1] அப். நடபடிகள் புத்தகமானது, அதன் எழுத்தாளர் அடிக்கடி, அப்போஸ்தலரான பவுலுடன் ஒன்றாகப் பயணம் செய்தார் என்பதை வெளிப்படுத்துகிறது (அப். 16:10; 20:5; 21:1ஐக் காணவும்), லூக்காவைத் தவிர பவுலுடன் பயணம் செய்ததாக அறியப் படுகிற மற்ற துணைவர்கள் யாவரும் நீக்கிப் போடப்பட முடியும்.[2] மருத்துவர் லூக்காதான் லூக்கா சுவிசேஷம் மற்றும் அப். நடபடிகள் ஆகிய புத்தகங்களை எழுதினார் என்ற முடிவானது சபையின் தொடக்க கால (ஏவுதலற்ற) பாரம்பரிய வரலாற்றுக்கு கருத்தொருமித்ததாக உள்ளது.*

*லூக்கா யார்? நாம் இவரை ஒரு கிரேக்கப் பெயரினால் அறிகின்றோம்[3]; இவர் அநேகமாக, பிறப்பினால் ஒரு கிரேக்கராய் இருந்தார் (கொலோ. 4:10, 11, 14ஐக் காணவும்). அது புதிய ஏற்பாட்டில் இவர் ஒருவரை மட்டும் புறஜாதி எழுத்தாளராக்கியிருக்கும். இவர் தொடக்க காலத்தில் அந்தியோகியாவில் மனம் மாறியவர்களில் ஒருவராக இருந்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது.[4] அவ்வாறிருந்ததென்றால் இது, இவர் சபை நிலை நாட்டப்பட்டுப் பதினைந்து ஆண்டுகளுக்குள்ளாகவே ஒரு கிறிஸ்தவ ரானார் என்று அர்த்தப்படுத்துவதாயிருக்கும்.[5]*

*முன்பே எடுத்துரைக்கப்பட்டபடி, லூக்கா ஒரு மருத்துவராயிருந்தார்*

*(கொலோ. 4:14) மற்றும் இவர் பவுலுடன் பயணம் செய்தவர்களில் ஒருவராக இருந்தார். பவுல் துரோவாவை விட்டுப் புறப்பட்டு (கி.பி. சுமார் 51) பிலிப்பி நகருக்குச் செல்லுகையில், அப். நடபடிகள் புத்தகத்தில் உள்ள "நாங்கள்" என்று வரும் வேத வசனப்பகுதிகள், அதிகாரம் 16ல் தொடங்கு கின்றன. பவுல் பிலிப்பி நகரை விட்டுப் புறப்பட்டபோது, லூக்கா அங்கேயே தங்கி விட்டார் என்பது உறுதி, ஏனெனில் "நாங்கள்" வசனப் பகுதிகள் அவ்விடத்தில் ஒழிந்து விடுகின்றன. இவர் பவுல் திரும்பி வரும் வரையிலும் பிலிப்பியில் இருந்த சபையில் ஊழியம் செய்து கொண்டிருந் தார் என்பது தெளிவு. அந்த இடத்தில் "நாம்" என்ற வார்த்தையை உபயோகித்த வேத வசனப்பகுதிகள் மீண்டும் வருகின்றன; அப்போஸ்தல ரான பவுல் பலஸ்தீனத்தின் துறைமுக நகரங்களில் ஒன்றான செசரியாவில் நான்கு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தது வரையிலும் லூக்கா அவருடன் பயணம் செய்தார். அந்த நான்கு ஆண்டுகள் லூக்கா அநேகமாக அருகாமையில் ஏதேனும் ஒரு இடத்தில் தங்கியிருந்திருக்க வேண்டும், ஏனென்றால், பவுல் செசரியாவை விட்டு ரோமாபுரிக்குப் புறப்பட்டுச் செல்லுகையில் "நாங்கள்" என்ற வார்த்தையை உபயோகித்த வேத வசனப் பகுதிகள் மீண்டும் தொடருகின்றன. (பலஸ்தீனத்தில் இருந்த வேளையில் லூக்கா, தமது சுவிசேஷ நூலின் 1:1-4[6] வசனப்பகுதிகளில் குறிப்பிடப்படும் ஆராய்ச்சிப் பணியை அதிகமாகச் செய்திருக்கக்கூடும்.) ரோமாபுரியில் லூக்கா, பவுலின் "உடன் ஊழியர்களில்" ஒருவராக இருந்தார் (பிலே. 24). பிற்பாடு, பவுல் சிறையில் அடைக்கப்பட்டு, தமது மரணத்திற்காகக் காத்திருந்த வேளையில், லூக்கா அவருடன் இருந்தார் (2 தீமோ. 4:11).*

*லூக்கா குறிப்பிடத்தக்க மனிதராயிருந்தார்: இவர் கல்வியறிவு பெற்ற ஒரு கிரேக்கராக, பவுலுடன் உடன் ஊழியராக, மற்றும் செயல் துடிப்பான பிரசங்கியாராக, ஊழியராக இருந்தார். லூக்கா மற்றும் நடபடிகள் புத்தகங்களின் எழுத்தாளர் என்ற வகையில், இவர் சபையின் முதலாவது மாபெரும் வரலாற்றாளராகவும், கிறிஸ்தவத்திற்காக இலக்கிய ரீதியாக பரிந்து பேசுபவராகவும் இருந்தார்.*

### இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலம்

*லூக்கா சுவிசேஷம் எழுதப்பட்ட காலம் இரு திசைகளில் வரையறுக்கப் பட்டுள்ளது. ஒரு புறத்தில், இயேசுவின் மரணமும் லூக்காவின் மனமாற்ற மும் நடந்து சில காலங்கள் கடந்திருந்தன - இது இயேசுவின் வாழ்வு பற்றிய பல விவரங்கள் தொகுக்கப்பட்டிருக்கப் போதுமான காலமாக இருந்தது (லூக். 1:1, 2). இன்னொரு புறத்தில், நடபடிகள் (இணைத்தொகுப்பு நூல்) புத்தகம், பவுல் ரோமாபுரியில் முதலில் இரு ஆண்டுகள் இருந்த வேளையில் - கி.பி. சுமார் 62ல் - எழுதப்பட்டது என்பது உறுதி (அப். 28:30). பழைமை வாத எழுத்தாளர்கள் பலர், லூக்கா சுவிசேஷம் கி.பி. 60ம் ஆண்டுவாக்கில் எழுதப்பட்டது என்று கூறுகின்றார்கள்.[7]*

### இந்தப் புத்தகத்தின் முன்னுரை

*லூக்காவின் புத்தகம் தனிச்சிறந்த ஒரு முன்னுரையைக் கொண்டுள்ளது:*

மகா கனம்பொருந்திய தேயோப்பிலுவே, நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடி யினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக். 1:1-4).[8]

அந்த அறிமுகவுரையிலிருந்து சில முக்கிய கருத்துக்களை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்:

"மகா கனம்பொருந்திய தேயோப்பிலுவே ...": "மகா கனம் பொருந்திய" என்பது ஒரு அலுவலருக்கு தரப்பட்ட மரியாதை விளிப்புரை யாக இருந்தது. "தேயோப்பிலு" என்ற கிரேக்கப் பெயரானது, "தேவன் மீது அன்புகூருபவர்" என்று அர்த்தம் தருவதாக உள்ளது. இது தேவனை அன்புகூருகின்ற யாவரையும் குறிக்கக் கூடும், ஆனால் அநேகமாக இது ஒரு குறிப்பிட்ட நபரைக் குறிப்பதாக இருக்கிறது. ஒருவேளை இந்தத் தனிநபர் லூக்காவின் ஆதரவாளராகவும் இந்தப் புத்தக வெளியீட்டிற்கு நிதி உதவி அளித்தவராகவும் இருந்திருக்கலாம்.[9]

"நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்ப முதல் கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்த படியே ...": "கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள்" என்ற வார்த்தைகள் அநேகமாக அப்போஸ்தலர்களை முதன்மையாகக் குறிப்பிடு வதாயிருக்கின்றன, (அப். 1:21, 22ஐக் காணவும்), ஆனாலும் இவைகள் நம்பிக்கைகளின்/விசுவாசங்களின் சரீரத்தினுடைய கட்டுப்பாடு மிகுந்த ஒற்றுமையை சுட்டிக்காண்பிக்கின்றன.

"அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம் பேர் ஏற்பட்டபடி யினால் ..."; சபையார் யாவருக்கும் பொதுவாக இயேசுவைக் குறித்த விசுவாசங்களின் அடிப்படைக் கருத்தொன்று இருந்தது என்பது தெளிவு.

"ஆதிமுதல் ...": சபையின் வரலாற்றின் தொடக்க காலத்தில் "கண்ணால் கண்ட சாட்சிகளிடத்தில்" லூக்கா தொடர்பு கொண்டிருந்தார் என்பது உறுதி.

"எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் ...": இது, கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய விவரத்தை எழுதிய சிலர் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து *அறியவில்லை* என்று சுட்டிக்காண்பிக்கிறது.[10] ஏவுதல் பெற்றிராத தொடக்க காலக் கையெழுத்துப் பிரதிகள் பல - இவைகள் இயேசுவின் வாழ்வு பற்றிய விவரங்களை அளிப்பதாக நினைக்கப்பட்டன - இன்றைய நாட்களிலும் உள்ளன, ஆனால் அவற்றில் மதியீனமான கருத்துக்களே நிறைந்துள்ளன.

"உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று ...": சிலர், "உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின்" என்ற சொற்றொடரானது முறைப்படியான அறிவுறுத்துதலைக் குறிப்பிடு வதாக நினைக்கின்றார்கள். எந்த வகையில் பார்த்தாலும், இவ்வார்த்தைகள்,

தொடக்க கால சபையில் விசுவாசத்தின் பொது அமைவு ஒன்று இருந்ததை மீண்டும் வலியுறுத்துகிறது.

''அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று'': இது, கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய நாளாகம வரிசைக் கிரமமான விவரங்களைத் தருவதற்கு மற்ற சுவிசேஷ எழுத்தாளர்களைக் காட்டிலும் லூக்கா அதிக சிறப்பான முயற்சியை மேற்கொண்டார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கலாம். இருப்பினும், நாம் காணப் போகின்ற படி, லூக்கா சுவிசேஷத்தின் விவரமும் கூட முற்றிலுமாக நாளாகம வரிசைக்கிரமப்படி அமைந்திருக்கவில்லை. ஆகையால், "ஒழுங்காய்" என்ற சொற்றொடரானது அநேகமாக ஒரு முறைப்படியான - தர்க்கரீதியான, சிந்தித்து தெளிவாய் வெளியிடப்பட்ட பதிப்பாக - விவரமாக எழுதுதல் என்பதைக் குறிப்பிடலாம்.

லூக்கா, கிறிஸ்தவத்தின் முதல் முறைப்படியான "விமர்சகர்" என்று நினைக்கப்படலாம்: இவர் சுற்றோட்டத்திற்கு விடப்பட்ட பல்வேறு விவரங்களை அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, இவர் உண்மைகளை முற்றிலுமாகப் பரிசோதித்தார். இவ்விதமாக, இவர் எழுதிய யாவும் ''மிகச் சரியானதாக'' இருந்தது. இவர் தமது விவரங்களைப் பரிசோதித்து அறியும்படிக்கு வாசகர்களை அழைப்பதாகக் காணப்படுகிறது, ஏனெனில் இவர் ஆய்ந்தறியப்படக் கூடிய வரலாற்றுத் தகவல்களைத் தொடர்ந்து கொடுத்து வந்தார் (1:5; 2:1, 2; 3:1; 13:1, 2). புதைபொருள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள், லூக்கா ஒரு மிகச் சரியான வரலாற்றாளர் என்பதையும் கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் தொடக்க காலச் சபையின் தமது விவரம் ஆகியவற்றிற்கு மிகவும் கனம் கொடுத்துள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றன.

### இந்தப் புத்தகத்திற்கான விசேஷித்த ஆதார மூலம்

லூக்காவினால் பயன்படுத்தப்பட்ட ஆதாரமூலங்களைப் பற்றிக் கவனிக்கையில், இவருக்கு அப்போஸ்தலரான பவுலுடன் இருந்த விசேஷித்த உறவைப்பற்றிச் சிறப்பான கவனம் செலுத்தப்பட வேண்டும். பேதுருவும் பவுலும் தொடக்க கால சபையில் இரு முக்கிய நபர்களாக இருந்தார்கள் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இதன்படியே காணுகையில், இயேசுவின் வாழ்வு மற்றும் போதனை ஆகியவற்றைப் பதிவு செய்யும் பணியானது அந்த முக்கிய பணியில் அவர்களின் செல்வாக்கு இல்லாத நிலையில் நிறைவேறியிருக்காது என்று நாம் யூகிக்க முடியும். (ஏவுதல் பெற்றிராத) பழங்கால பாரம்பரியங்கள் உண்மையானவை என்றால், இவ்விருவருமே ஒரு பங்கை வகிக்கின்றனர்: மாற்கு சுவிசேஷம் பற்றிய பாடத்தில் குறிப்பிடப்பட்டபடியாக, பேதுருவின் கூற்றின்படி யாகவே மாற்கு தமது சுவிசேஷத்தை எழுதினார் என்று நம்பப்படுகிறது. அது போலவே, பவுலின் கூற்றின்படியே லூக்கா தம் சுவிசேஷத்தைப் பதிவு செய்தார் என்று தொடக்க காலப் பாரம்பரியங்கள் கூறுகின்றன.

இயேசு இந்த பூமியில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது, பவுல் அவரது சீஷராக இருந்ததில்லை; ஆனால் பவுல், கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய

*அடிப்படைத் தகவல்களை வெளிப்படுத்துதல் மூலமாகப் பெற்றுக் கொண்டார் (1 கொரி. 11:23; 15:3-8; அப். 20:35 ஆகியவற்றைக் காணவும்). இயேசுவைப் பற்றிய மாபெரும் ஆய்வுக் கருத்துக்கள் தொடர்பாக அவர் [பவுல்] பிரசங்கித்ததை லூக்கா பலமுறைகள் கேட்டு இருந்திருப்பார்.*

*இது லூக்கா தகவலுக்காகப் பவுலையே முற்றிலுமாகச் சார்ந்திருந்தார் என்று அர்த்தப்படுத்துவது இல்லை. இவர் தமது சொந்த, விரிவான ஆய்வையும் கூட்டிக் கொண்டார்.[11] இருந்தபோதிலும், பவுலின் சுவிசேஷத்தை லூக்கா எழுதினார் என்பதே ஏவுதல் பெற்றிராத பழங்கால எழுத்தாளர்களின் பொது இசைவான கருத்தாக உள்ளது. இது, லூக்காவின் சுவிசேஷமானது புறஜாதி மக்கள் கூட்டத்திற்கென்று, அதிலும் விசேஷமாய் கிரேக்கர்களுக்கென்று எழுதப்பட்டதைத் தெளிவாக்குகிறது:[12] பவுல், புறஜாதியாருக்கான அப்போஸ்தலராயிருந்தார் (அப். 26:16-18) மற்றும் இவரே அநேகமாக, கிரேக்கர்களுக்குச் சுவிசேஷத்தை முதலில் பிரசங்கித்த வராயிருந்திருப்பார் (அப். 17).*

### இந்தப் புத்தகத்தின் வலியுறுத்தங்கள்

*லூக்கா தமது விவரங்களை ஒரு புறஜாதி மக்கள் கூட்டத்தை நோக்கி எழுதினார்: இவர் மலைப்பிரசங்கத்தை(அல்லது அதைப் போன்ற ஒரு பிரசங்கத்தை)ப் பற்றித் தகவல் அளித்தபோது, இவர் "பிரமாணத்தையும் தீர்க்கதரிசிகளையும்" குறிப்பிடவில்லை. இவர், "ரபீ" மற்றும் "ஓசன்னா" போன்ற யூதத்துவச் சொற்றொடர்களைத் தவிர்த்தார். இவர் தமது வாசகர் களுக்கு பலஸ்தீன நாட்டின் பூகோள அமைப்பை விளக்கப்படுத்துவதற்கு அதிக கவனம் எடுத்துக்கொண்டார். இவரது சுவிசேஷத்தில் மட்டும்தான் "கல்வாரி" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கச் சொற்றொடர் உள்ளது. மற்றும், கிரேக்கர்களே இவரது விசேஷித்த இலக்காக இருந்தார்கள் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. (அநேகமாக, லூக்கா தாமே ஒரு கிரேக்கராயிருந்தார் மற்றும் இவர் தமது புத்தகத்தை ஒரு கிரேக்க அலுவலருக்கு எழுதினார் என்பது ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டது.)*

*லூக்காவின் நாட்களில் இருந்த கிரேக்கர்கள் கல்வியறிவுள்ள மக்களாக, அழகையும் கலையையும் நேசிப்பவர்களாக இருந்தார்கள். லூக்காவின் சுவிசேஷ விவரமானது தனிச்சிறந்த இலக்கியப் பண்பைப் பெற்றிருப்பதில் வியப்பெதுவும் இல்லை. இது முழுமையானதாக, முறையானதாக, தனிச் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. மனிதருடைய இரட்சிப்புக்கு அப்பாற்பட்ட வகையிலும்கூட, இது ஒரு சிறப்பு வாய்ந்த தொகுதியாக உள்ளது. ஒரு தொடக்க காலப் பாரம்பரியமானது, லூக்கா ஒரு ஓவியராகவும் இருந்தார் என்று கூறுகிறது. இவர் திரைத் துணிகளில் வரைந்தாரோ இல்லையோ நமக்குத் தெரியவில்லை, ஆனால் இவர் வியப்புக்குரிய வகையில் வார்த்தைகளைக் கொண்டு "வரைபவராக" இருந்தார்: அதிகாரம் 1 மற்றும் 2ல் உள்ள நான்கு அழகுமிக்க கவிதை - பாடல்களை வாசியுங்கள், இவை லூக்காவினால் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிகாரம் 15ல் உள்ள ஊதாரி மகன் போன்ற இருதயத்தை அசைக்கின்ற கதைகளைச் சுவைத்துப் பாருங்கள். லூக்காவின் எடுத்துரைப்புக்கள் எளிமை மற்றும் தனிச்சிறப்பின்*

எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

கிரேக்கர்கள் பரிபூரணமான மனிதத்துவத்தைப் பாராட்டுபவர்களாக வும் இருந்தார்கள். அவர்களின் கடவுள்களை மனித உருவில் வடிவமைக்கு மளவுக்கு அவர்கள் பரிபூரண மனிதத்துவத்தை விக்கிரக ஆராதனைப் படுத்தியிருந்தார்கள். இவ்விதமான மன அமைவு கொண்டவர்களுக்கு, இயேசுவை மனிதருடைய பரிபூரணத்துவமான குமாரனாக லூக்கா முன்னிறுத்தினார். இயேசுவின் மனிதத்துவம் லூக்கா சுவிசேஷத்தின் அதிக ஆதிக்கம் கொண்ட கருத்தாக இருக்கிறது. இந்த வலியுறுத்தத்திற்கான ஒரு சில விவரிப்புகள் பின்வருமாறு:

- லூக்காவின் வரலாற்றுக் குறிப்புகள் இயேசுவை மனித குல வரலாற்றில் ஒரு பங்காளராகக் காண்பிக்கின்றன.
- லூக்கா தருகின்ற வம்ச வரலாறு (லூக். 3), மத்தேயு தருகின்ற வம்ச வரலாற்றிலிருந்து (மத். 1) மாறுபடுகிறது: மத்தேயு தருகின்ற வம்ச வரலாறு யோசேப்பின் மூலமாக இயேசுவின் சட்டப்பூர்வமான வம்சவழியை வலியுறுத்துகிறது. இதற்கு நேரெதிரிடையாக, லூக்கா தருகின்ற வம்ச வரலாறு ஆதாம் தொடங்கி - மரியாளின் மூலமாக - இயேசுவின் மாம்சப் பிரகாரமான வம்ச வழியை வலியுறுத்துகிறது. இவ்விதமாக, இயேசு எல்லா மக்களின் மனிதத்துவத்தில் பங்கேற்றார் என்பதை லூக்கா காண்பித்தார்.
- இயேசுவின் பிறப்பைப் பற்றி லூக்கா மட்டுமே பதிவு செய்தார் (லூக். 2). இந்த விவரங்கள் அவரது மனிதத்துவத்தை வலியுறுத்து கின்றன. அவரது பெற்றோர்கள் (மற்ற ஒவ்வொருவரைப் போலவே) குடிமதிப்பு எழுதப்படும்படி பெத்லகேமுக்குச் சென்றார்கள். ஒரு தாழ்மையான தொழுவத்தில் இயேசு பிறந்தார். அவரை முதன் முதலாக வந்து கண்டவர்கள் மேய்ப்பர்களே.[13]
- இயேசுவின் தொடக்க கால வாழ்வைப் பற்றி லூக்கா மாத்திரமே கூறினார். இயேசுவின் வளர்ச்சியானது மிகத் தனிச்சிறப்பானதாக இருந்தது, ஆனால் அது இயற்கைக்கு மாறானதாக இருந்ததில்லை. மற்றவர்கள் வளருவது போன்றே அவரும் வளர்ந்தார் (2:40, 52).
- மற்றவர்கள் ஞானஸ்நானம் செய்விக்கப்படுகையில் இயேசு ஞானஸ்நானம் பெற்றார் என்று லூக்கா வலியுறுத்தினார் (3:21).
- இயேசு சோதிக்கப்பட்டபோது (4:1-13), மனிதகுலத்தின் எல்லாச் சோதனைகளின் பிரதிநிதியாக அவர் சோதனைகளைச் சந்தித்தார்.
- இயேசுவின் ஊழியம் முழுவதிலும், அவரது மனிதத்துவம் வலியுறுத்தப்பட்டது: அவர் அழுதார் (19:41); அவர் ஜெபித்தார் (3:21; 5:16; 6:12); அவர் இரக்க உணர்வடைந்தார் (7:13; 10:33; 15:20); அவர் மரித்தார் (23:46).

இது, இயேசுவை லூக்கா வெறும் மனிதராக மட்டுமே முன்னிறுத் தினார் என்று அர்த்தப்படுத்துவது இல்லை. இயேசு மனிதத்துவத்தின் பரிபூரணராக இருந்தார்; அவர் தேவ-மனிதராக இருந்தார்; அவர் நமது

இரட்சகராக இருக்கின்றார். நாம் பிறப்பில் பாவம் ஒன்றும் அறியாதவர்களாகவே இருக்கின்றோம், ஆனால் அவர் பரிசுத்தராக இருந்தார் (லூக். 1:35). லூக்காவின் விவரமானது இயேசுவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின்[14] ஊழியத்தை வலியுறுத்துகிறது. மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய சுவிசேஷங்கள் இணைந்து தருவதைக் காட்டிலும் அதிகமாக லூக்கா சுவிசேஷத்தில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

**இந்தப் புத்தகத்தின் பண்புகள்**

இந்தப் புத்தகத்தின் பெரும்பாலான பண்புகள் ஏற்கனவே கலந்துரையாடிய பண்புகளுடன் தொடர்புடையவைகளாகவே இருக்கின்றன.

லூக்கா சுவிசேஷமானது தனிச்சிறந்த மருத்துவ ஒலிக்கூற்றைக் கொண்டுள்ளது. லூக்காவின் சுவிசேஷமானது ஒரு மருத்துவரின் மன அமைவை அடிக்கடி வெளிப்படுத்துகிறது. இவர் சில வேளைகளில் மருத்துவச் சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். (எடுத்துக்காட்டாக, இவர் 18:25ல் மருத்துவர் பயன்படுத்தும் ஊசிக்கான கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்தினார்.) இயேசுவின் "வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது'' (லூக். 22:44) என்பதை லூக்கா மட்டுமே பதிவு செய்தார். பன்னிரெண்டு ஆண்டுகளாகப் பெரும்பாடுடன் இருந்த பெண்ணைப் பற்றி லூக்கா கூறியபோது, அவர் மாற்குவை விட அதிகமாக மருத்துவர்கள் மீது பரிதாபத்தைக் காண்பித்தார் (மாற். 5:25, 26ஐ லூக். 8:43உடன் ஒப்பிட்டுக் காணவும்). கன்னிப்பெண்ணிடமிருந்து இயேசுவின் பிறப்பு, குணமாக்குதலின் அற்புதங்கள், இயேசு நிச்சயமாகவே மரித்தார் என்பது உண்மையே, மற்றும் இயேசு சரீரத்தில் உயிர்த்தெழுந்தார் ஆகியவற்றை ஒரு மருத்துவர் உறுதிப்படுத்திய விஷயம் பற்றி நான் தனிப்பட்ட வகையில் அகம் மகிழ்வடைகின்றேன்.

கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய பதிவேடு என்ற வகையில் லூக்கா சுவிசேஷமானது மிகவும் விசாலமானதாக உள்ளது. கூற முடிந்த எல்லாவற்றையும் எந்த சுவிசேஷ விவரமும் கூறுவதில்லை (யோவா. 21:25), ஆனால் லூக்காவின் சுவிசேஷமானது இயேசுவின் வாழ்வில் நடந்த அனைத்திற்கும் மிகவும் பிரதிநிதித்துவமாக உள்ளது. இது சுவிசேஷப் பதிவேடுகளிலேயே மிகவும் பெரியதாக உள்ளது.[15]

இந்த சுவிசேஷ விவரமானது மற்ற ஒப்பீட்டு சுவிசேஷங்களை விட அதிகம் தனிச்சிறப்பு வாய்ந்த கருத்துக்களைக் கொண்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, லூக்கா மாத்திரமே இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம் ஆகியவை பற்றிப் பதிவு செய்தார். தனிப்படுத்தப்பட்ட வசனப்பகுதிகளை தவிர்த்து, 9:51 முதல் 18:30 வரையுள்ள பாடக் கருத்துக்கள் லூக்கா சுவிசேஷத்திற்கே உரிய தனிச்சிறப்பானவைகளாக உள்ளன. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு எம்மாவு சீஷர்களுக்குக் காட்சியளித்ததையும் (24:13-35) அவர் பரத்துக்கேறியதையும் (24:50-53; அப். 1:9-11ஐயும் காணவும்) பற்றிய விவரங்களை லூக்கா மாத்திரமே கொடுத்தார்.

லூக்காவின் சுவிசேஷ விவரமானது ஜெபத்தின் மீது விசேஷித்த

*வலியுறுத்தத்தை இடுகிறது. இந்த புத்தகமானது, இயேசுவின் வாழ்வின் முக்கியமான வேளைகளின்போது, அவர் ஜெபித்தார் என்பதைக் காண்பிக்கிறது (3:21; 6:12, 13; 9:18, 28, 29).*

*லூக்கா தமது சுவிசேஷ விவரத்தில், பலவீனர்கள், தேவையில் இருந்தவர்கள், மற்றும் புறம்பே ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோர் மீது விசேஷித்த கவனத்தைச் செலுத்தினார். பல எதிர்கொள்ளுதல்களில் பெண்கள் சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். (அதி. 1 மற்றும் 2ல் மரியாள் மற்றும் எலிசபெத் ஆகியோரின் மீதான வலியுறுத்தத்தையும், அத்துடன் அதி. 7ல் நாயீன் பட்டணத்து விதவை மற்றும் பாவம் நிறைந்த பெண் ஆகியோரின் மீதான வலியுறுத்தத்தையும் கவனிக்கவும்.) சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் சாதகமான வெளிச்சத்தில் சித்தரிக்கப்படுகின்றார்கள் (நல்ல சமாரியன் [10:30-37], ஊதாரி மகன் [15:11-32], தாழ்மையான ஆயக்காரன் [18:13, 14], சகேயு [19:2-10], மற்றும் சிலுவையில் தொங்கிய கள்ளன் [23:43]). இயேசு "ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதராய்" இருந்தார்! (லூக். 7:34).*

**இந்தப் புத்தகத்தின் நோக்கம்**

*விளக்கவுரையாளர்கள், லூக்கா சுவிசேஷத்தை "இரட்சிப்பின் சுவிசேஷம்" என்றும் "பாவிகளுக்கான சுவிசேஷம்" என்றும் அழைத்துள்ளார்கள். ஒப்பீட்டு சுவிசேஷங்களில் இது ஒன்றுமட்டுமே இயேசுவை "இரட்சகர்" என்று குறிப்பிடுகிறது (லூக். 2:11). இந்தப் புத்தகத்தின் திறவுகோல் வசனமாக 19:10 உள்ளது: "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்."*

**இந்தப் புத்தகத்தின் பிரிவுகள்**

*லூக்கா சுவிசேஷமானது இயல்பாகவே பின்வரும் பகுதிகளாகப் பிரிந்துள்ளது: (1) கிறிஸ்துவின் தொடக்க கால வாழ்வு, (2) அவரது ஊழியம், (3) அவரது மரணத்தைச் சுற்றி நடந்த நிகழ்ச்சிகள், மற்றும் (4) அவரது உயிர்த்தெழுதல். இவற்றில் இரண்டாவது பிரிவு - அவரது ஊழியம் - இரண்டு தனிச்சிறப்பு வாய்ந்த பகுதிகளையும் கொண்டுள்ளது. இது பின்வரும் வரைக்குறிப்பிற்கு ஐந்து பிரதானப் பிரிவுகளை அளிக்கிறது.*

*லூக்கா 4:14 முதல் 9:50 வரை கூறிமுடிக்கப்பட்டுள்ள இயேசுவின் ஊழியத்தினுடைய முற்பகுதியில், சில போதனைகள் தரப்பட்டிருப் பினும், இப்பகுதியானது, அவரது நடவடிக்கைகள் மற்றும் அற்புதங்கள் ஆகியவற்றை வலியுறுத்துவதாகவே உள்ளது. இந்தப் பகுதி, கலிலேயாவில் அவரது ஊழியம் பற்றிக் கூறுகிறது. இவற்றில் உள்ள பெரும்பாலான விவரங்கள் பிற ஒப்பீட்டு சுவிசேஷங்களில் உள்ளது போன்றே இருக்கின்றன.*

*இரண்டாம் பாகமான, 9:51 முதல் 18:30 வரையுள்ள பகுதியானது லூக்காவுக்கு மட்டுமே உரிய தனிச்சிறப்பான பகுதியாக உள்ளது. (இவற்றில் மிகச் சிறிய அளவே பிற சுவிசேஷ விவரங்களில் காணப்படுகிறது.) இந்தப் பகுதியானது, இயேசு "எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி" - குறைந்தபட்சம் அவர் அதைச் சிந்தையில் இருத்தினார் - என்று காண்பிக்*

*கிறது (9:51ஐக் காணவும்). பொதுவாக இது லூக்காவினால் பதிவு செய்யப் பட்டபடி, யூதேயா - பெரேயாவில் ஊழியம் என்று அழைக்கப்படுகின்றது. இந்த அதிகாரங்களில் அற்புதங்களும் செயல்பாடுகளும் விவரிக்கப் படுகின்றன, ஆனால் போதனை மீதே வலியுறுத்தம் உள்ளது. முதலில், இந்தப் பகுதியானது போதனை மற்றும் உவமைகள் ஆகியவற்றின் நோக்கமெதுவுமற்ற தொகுப்பு என்பதுபோல் காணப்படுகிறது, ஆனால் இதில் லூக்கா, தமது புறஜாதி வாசகர்களுக்கு இயேசுவின் ஊழியத்தின் அர்த்தத்தை விளக்குவதற்காகப் புத்தம்புதிய கருத்துக்களைப் பயன் படுத்தினார்.*

---

## லூக்கா சுவிசேஷப் புத்தகத்தின் வரைக்குறிப்பு

I. *மனிதன் குமாரன் ஆயத்தப்படுதல் (1:1-4:13)*
   A. *முன்னுரை (1:1-4).*
   B. *பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம்.*
      1. *யோவான் ஸ்நானனின் பிறப்பு பற்றி சகரியாவுக்கு அறிவிப்பு (1:5-25).*
      2. *இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்கு அறிவிப்பு (1:26-38).*
      3. *மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தல் (1:39-56).*
      4. *யோவானின் பிறப்பு மற்றும் தொடக்க கால வாழ்வு (1:57-80).*
      5. *இயேசுவின் பிறப்பு (2:1-7).*
      6. *இயேசுவின் பிறப்பு பற்றி மேய்ப்பர்களுக்கு அறிவிப்பு (2:8-20).*
      7. *இயேசுவைத் தேவாலயத்தில் ஒப்புக் கொடுத்தல் (2:21-39அ).*
   C. *நாசரேத்தூருக்குத் திரும்புதலும் இயேசுவின் தொடக்க கால வளர்ச்சியும் (2:39ஆ, 40).*
   D. *இயேசு தமது பன்னிரெண்டு வயதில் தேவாலயத்திற்குச் செல்லுதல் (2:41-50).*
   E. *நாசரேத்தூருக்குத் திரும்புதலும் இயேசுவின் தொடர்ந்த வளர்ச்சியும் (2:51, 52).*
   F. *இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானபோது அவரது ஊழியத்தின் தொடக்கம். (லூக்கா மட்டுமே இயேசுவின் வயதை இவ்விடத்தில் கொடுத்துள்ளார் ன்3:23தி.)*
      1. *யோவானின் ஊழியம் (யோவான் கைது செய்யப்படுதல் இங்கு முன் எதிர்பார்ப்பாக*

*குறிப்பிடப்பட்டது) (3:1-20).*

2. *இயேசுவின் ஞானஸ்நானமும் வம்ச வரலாறும் (3:21-38).*
3. *இயேசு சோதிக்கப்படுதல் (4:1-13).*

G. *இந்த முதலாவது காலகட்டத்தை நினைவில் வைத்துக் கொள்ள உதவியாக, 'ய'க்களின் வரிசைத் தொடர் ஒன்று:*

1. *பெத்லகேமில் பிறப்பு* (Birth).
2. *நாசரேத்தூரில் பிள்ளைப் பருவம்* (Boyhood).
3. *யோர்தானில் ஞானஸ்நானம்* (Baptism).
4. *(இயேசுவின் வம்ச) வரலாற்றுப் பின்னணி* (Back ground).
5. *சாத்தானுடன் போராட்டம்* (Battle).

II. *மனித குமாரனின் வல்லமை (4:14-9:50)*

A. *ஊழியம் தொடங்கப்பட்டது.*

1. *கலிலேயாவுக்கு: இயேசுவின் பிரசங்கித்தல் தொடங்குதல் (4:14, 15).*
2. *நாசரேத்தூரில் முதன்முறை புறக்கணிக்கப்படுதல் (4:16-30).*
3. *கப்பர்நகூமில் பிரசங்கித்தல் மற்றும் குணமாக்குதல் (4:31-41).*
4. *தனிமையான ஓரிடத்திற்கும் பின்பு கலிலேயாவில் ஒரு பயணமும் (4:42-44).*
5. *அற்புதமான மீன்பிடிப்பு - மற்றும் மீனவர்களை அழைத்தல் (5:1-11).*
6. *தொழுநோயாளர் ஒருவரைக் குணமாக்குதல்; ஜெபிக்கத் தனியே செல்லுதல் (5:12-16).*

B. *ஊழியம் விமர்சிக்கப்படுதல்.*

1. [*திமிர்வாதமுள்ள*] *மனிதர் கூரையின் வழியே இறக்கப்படுதல் (5:17-26).*
2. *லேவியை அழைத்தல் மற்றும் பாவிகளுடன் உண்ணுதல் (5:27-32).*
3. *உபவாசித்தல் பற்றிய விமர்சனங்கள் (5:33-39).*
4. *ஓய்வுநாள் பற்றிய விமர்சனங்கள் (6:1-11).*

C. *ஊழியம் (அதிகரிக்கப்பட்ட வேகத்தில்) தொடருதல்.*

1. *ஜெபமும் பின்பு பன்னிருவரைத் தேர்ந்து கொள்ளுதலும் (6:12-16).*
2. *சமவெளியில் பிரசங்கம் (6:17-49).*
3. *கப்பர்நகூமுக்கு; நூற்றுக்கு அதிபதி ஒருவரின் வேலைக் காரரைக் குணமாக்குதல் (7:1-10).*
4. *நாயீனுக்கு; ஒரு விதவையின் மகனை உயிருடன் எழுப்புதல் (7:11-17).*

5. யோவானுக்கும் யோவானைப் பற்றியும் இயேசுவின் சாட்சியம் (7:18-35).
6. பரிசேயனான சீமோனின் வீட்டில் (7:36-50) (வ. 41-43 லூக்காவுக்கே விசேஷமானவை).
7. கலிலேயாவில் இன்னொரு பயணம் (8:1-3).
8. உவமைகள் (விதைப்பவன் மற்றும் விளக்கு) மற்றும் இயேசுவின் உண்மையான உறவினர்கள் (8:4-21).
9. கடலைக் கடந்து செல்லுதல் மற்றும் புயலை அமர்த்துதல் (8:22-25).
10. கதரேனருடைய நாட்டில்; அசுத்த ஆவிபிடித்த ஒரு மனிதர் (8:26-39).
11. கடலின் குறுக்காகப் பின்னிடுதல்; யவீருவின் மகளைக் குணமாக்குதல் மற்றும் இணையாக நடந்த ஒரு அற்புதம் (8:40-56).

D. ஊழியம் உச்சக்கட்டத்தை அடைதல்.

1. பன்னிருவரை ன்ஊழியத்திற்குதி வெளியே அனு ப்புதல் (மற்றும் ஏரோதுவின் கவனத்தைக் கவருதல்) (9:1-10அ).
2. பெத்சாயிதாவுக்கு அண்மையில் தனிமையான ஒரு இடத்திற்கு; மற்றும் ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (9:10ஆ-17).
3. ஜெபம் - மற்றும் மாபெரும் அறிக்கை (9:18-22). இயேசுவின் சீஷர்கள் தங்களின் சிலுவைகளை எடுத்துக்கொள்ளும்படி அறைகூவல் விடப்படுதல் (9:23-27).
4. மறுரூபமாகுதல் (9:28-36).
5. மலையிலிருந்து கீழே இறங்கி வருதல்; அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு பையனைக் குணமாக்குதல்; இயேசுவின் மரணத்தைப் பற்றி சீஷர்களுக்கு மீண்டும் கூறுதல் (9:37-45).
6. சீஷர்கள் புரிந்துகொள்ளத் தவறுதல்: யார் பெரியவர் என்பது பற்றிய விவாதம் (மற்றும் தங்களைப் பின்பற்றாத ஒருவரைத் தண்டிக்க விருப்பம்) (9:46-50).

III. மனித குமாரனின் பிரசங்கம் (9:51-18:30).

A. இயேசு “எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்புதல்” (9:51ஐக் காணவும்).

1. சமாரியா வழியாகக் கடந்து செல்லுதல் (“அக்கினி இறங்கி வரும்படி” அழைக்க [லாமா] என்று கேட்ட நிகழ்ச்சி) (9:51-56).
2. சீஷர்களாயிருக்கத் தகுதியானவர்கள் (9:57-62).
3. எழுபது பேர்களை அனுப்புதல் (10:1-24).

4. *நியாய சாஸ்திரியினால் சோதிக்கப்படுதலும் நல்ல சமாரியன் உவமையும் (10:25-37).*
5. *பெத்தானியில்: மரியாளின் தேர்ந்துகொள்ளுதல், "நல்ல பங்கு" (10:38-42).*
6. *பொதுவான போதனை:*
    a. *ஜெபம் - மற்றும் ஜெபத்தைப் பற்றிய அறிவுறுத்துதல் (11:1-13).*
    b. *குற்றஞ்சாட்டுதல் - மற்றும் அசுத்த ஆவிகள், கீழ்ப்படிதல் ஆகியவை பற்றிய போதனை, அடையாளம் தேடுதல் (11:14-36).*
    c. *பரிசேயருடன் உண்ணுதல்; பரிசேயர்களுக்கும் நியாய சாஸ்திரிகளுக்கும் சாபங்கள் (11:37-54).*
    d. *திரளான மக்கள் கூட்டமும் பொதுவான போதனையும் (12:1-12).*
    e. *சொத்துரிமை பற்றிய ஒரு கேள்வியும் செல்வந்தனான ஒரு மதியீனன் பற்றிய கதையும் (12:13-21).*
    f. *கவலை, பரலோக பொக்கிஷம், விழித்திருத்தல், மற்றும் உக்கிராணத்துவம் பற்றிய உபரிப் போதனை (12:22-59).*
    g. *ஒரு வரலாற்றுக் குறிப்பு; மனந்திரும்புதல் பற்றிய போதனை (13:1-9).*
7. *கூனியாய் இருந்த ஒரு பெண்ணைக் குணமாக்குதல்; விமர்சனம் (13:10-17).*
8. *இராஜ்யமானது கடுகு விதைக்கும் புளித்த மாவுக்கும் ஒப்பிடப்படுதல் (13:18-21).*

B. *இயேசு "எருசலேமுக்குத் தமது வழியைத்" தொடங்குதல் (13:22).*

1. *ஒரு சிலர் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள் என்று போதித்தல் (13:23-30).*
2. *கலிலேயாவுக்கு திரும்புதல்;ஏரோதுவைப் பற்றி இயேசு எச்சரிக்கப்படுதல்; இயேசு எருசலேமில் மரிக்க வேண்டும் என்ற அவரது கூற்று ("எருசலேமே எருசலேமே"; வ. 34) (13:31-35).*
3. *ஓய்வு நாளில் ஒரு பரிசேயருடன் உண்ணுதல் மற்றும் நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனிதரைக் குணமாக்குதல் (14:1-6). பண்டிகைகள் பற்றிய ஒரு போதனை வரிசை:*
    a. *திருமண இடத்தில் முதலிடத்தை நாடுதல் பற்றிய உவமை (14:7-11).*
    b. *நண்பர்களை மட்டும் அழைக்கக் கூடாது என்பது பற்றிய பாடம் (14:12-14).*

c. *மாபெரும் விருந்து பற்றிய உவமை (14:15-24).*

4. *சீஷத்துவத்தின் விலை (14:25-35).*
5. *பாவிகளுடன் உண்பதற்காக விமர்சிக்கப்படுதல் (15:1, 2). இழந்துபோன ஆத்துமாக்களை விட உலகப் பொருட்களின் மீது அதிக அக்கறை காண்பித்த பரிசேயர்கள், வேதபாரகர்கள் ஆகியோருக்கு எதிரான பாடங்களின் வரிசைத் தொடர்:*
    a. *இழந்துபோன பொருட்கள் பற்றிய உவமைகள் (15:3-32).*
    b. *அநீதியான உக்கிராணக்காரன் பற்றிய உவமை - அத்துடன் பொதுவான போதனை (16:1-18).*
    c. *ஐசுவரியவானும் லாசருவும் பற்றிய கதை (16:19-31).*
    d. *குற்றங்கள் பற்றிய பொதுவான போதனை மற்றும் விசுவாசத்திற்கேற்ற கீழ்ப்படிதல் (17:1-10).*

C. *எருசலேமுக்குச் செல்லும் வழியில்; இயேசு சமாரியா, கலிலேயா வழியாகக் கடந்து செல்லுதல் (17:11).*
1. *பத்து தொழுநோயாளிகள் (17:11-19).*
2. *வரவிருந்த ராஜ்யம் மற்றும் அவரது இரண்டாம் வருகை ஆகியவை பற்றிய போதனை (17:20-37).*
3. *ஜெபத்தைப் பற்றிய உவமைகள்:*
    a. *விடாமுயற்சியுள்ள ஒரு விதவை (18:1-8).*
    b. *பரிசேயனும் ஆயக்காரனும் (18:9-14).*
4. *சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தல் (18:15-17).*
5. *செல்வந்த இளைஞனான அதிகாரியும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் கிடைக்கும் பலன்களும் (18:18-30).*

IV. *மனித குமாரனின் பாடுகள் (18:31-23:56).*

A. *கடைசிப் பயணம் (மற்ற எல்லாப் பயணங்களும் இந்தப் பயணத்தையே சுட்டிக் காண்பித்தன):*
1. *இயேசுவும் அவரது சீஷர்களும் அவரது மரணத்திற்காக எருசலேம் செல்லுவதாக இயேசு அவர்களிடம் கூறுதல் (18:31-34).*
2. *எரிகோவில்: பார்வையற்ற மனிதரைக் குணமாக்குதல் (18:35-43).*
3. *எரிகோவில்: சகேயு (19:1-10).*
4. *எருசலேமுக்கு அண்மையில்: திரவியங்களின் உவமை (19:11-27).*

B. *கடைசி வாரம்:*
1. *ஞாயிற்றுக்கிழமை: வெற்றிப் பிரவேசம் (19:28-40).*
2. *திங்கட்கிழமை:*
    a. *எருசலேமுக்காக அழுதல்;*

காசுக்கடைக்காரர்களை வெளியே துரத்துதல் (19:41-46).

   b. இயேசுவின் அன்றாட போதனை; அவரது விரோதிகள் அவரைக் கொலை செய்யத் திட்டமிடுதல் (19:47, 48).

3. செவ்வாய்க்கிழமை: கேள்விகளின் நாள்.
   a. "எந்த அதிகாரத்தினால்?" (20:1-8).
   b. திராட்சத் தோட்ட உவமை; புறக்கணிக்கப்பட்ட கல்லைப் பற்றிய போதனை (20:9-19).
   c. இராயனுக்கு வரிசெலுத்துதல் பற்றிய ஒரு கேள்வி (20:20-26).
   d. உயிர்த்தெழுதல் பற்றிய ஒரு கேள்வி (20:27-39).
   e. தாவீதின் குமாரன் பற்றிய ஒரு கேள்வி (20:40-44).
   f. "வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (20:45-47).
   g. விதவையின் காணிக்கை (21:1-4).
   h. தேவாலயமும் எதிர்காலம் பற்றிய ஒரு உரையும் (21:5-38).
4. பஸ்கா அன்று சூழ்ச்சி (22:1-6).
5. வியாழக்கிழமை:
   a. கடைசி இராப்போஜனம் (22:7-38).
   b. கெத்செமனே தோட்டம் (22:39-46).

C. கடைசி நாள்:
1. காட்டிக் கொடுக்கப்படுதல் (22:47-53).
2. பிரதான ஆசாரியருக்கு முன்பாக விசாரிக்கப்படுதல் (மற்றும் பேதுருவினால் மறுதலிக்கப்படுதல்) (22:54-65).
3. சனதெரீன் சங்கத்தாரால் [இயேசுவுக்கு மரணதண்டனை] உறுதிப்படுதல் (22:66-71).
4. பிலாத்துவுக்கு முன்பாக இழுத்துச் செல்லப்படுதல் (23:1-6).
5. ஏரோதுவிடம் இழுத்துச் செல்லப்படுதல் (23:7-12).
6. மீண்டும் பிலாத்துவிடம் இழுத்துச் செல்லப்படுதல்: "பரபாஸா அல்லது இயேசுவா?" (23:13-25).
7. கல்வாரி செல்லும் வழியில் (23:26-31).
8. எனக்காக இயேசு சிலுவையில் அறையப்படுதல் (23:32-49)! (சிலுவையில் மனம் வருந்திய கள்ளன் பற்றிய வரலாறு லூக்காவில் விசேஷமானது).
9. அரிமத்தியாவூர் யோசேப்பினால் அடக்கம் செய்யப்படுதல் (23:50-56).

V. மனித குமாரனின் பரிபூரணத்துவம் (24:1-53). (இயேசுவின்

*உயிர்த்தெழுதலானது, அவர் வெறும் மனிதர் என்பதை விட மேலானவர் என்பதைக் காண்பித்தது; ரோமர் 1:5ஐக் காணவும்).*

A. *வெறுமையாயிருந்த கல்லறை.*
   1. *பெண்கள் கல்லறைக்குச் செல்லுதல் (24:1-11).*
   2. *பேதுரு வெறுமையாயிருந்த கல்லறைக்கு ஓடுதல் (24:12).*

B. *உயிர்த்தெழுதலுக்குப் பின் தரிசனங்கள்:*
   1. *எம்மாவு செல்லும் சாலையில் இரு மனிதர்களுக்கு (24:13-35). (அவர்கள் இதற்கு முன் அறிந்திருந்த அன்பார்ந்த நண்பராயிருப்பதாகவே இயேசு காண்பிக்கப்பட்டார்.)*
   2. *பதினோரு பேருக்கு: பிரதான கட்டளை; எருசலேமில் காத்திருக்கும்படி அறிவுறுத்தல் (24:36-49).*

C. *பரத்துக்கேறுதல் (24:50, 51).*

D. *காத்திருப்பதற்காக சீஷர்கள் எருசலேமுக்குத் திரும்புதல் (24:52, 53). (இவ்விடத்தில் லூக்கா தமது எழுதுகோலைக் கீழே வைத்தார் - மீண்டுமாக விரைவிலேயே இந்த வரலாற்றின் தொடர்ச்சியை நடபடிகளின் புத்தகத்தில் எழுதும்படிக்கு அப்படிச் செய்தார்.)*

*முடிவுரை:*

A. *இவ்விதமாக லூக்காவின் "அவர் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கினவை" (அப். 1:1) பற்றிய விவரங்கள் முடிவடைகின்றன - இவைகள் ஆறு* "T" *க்களினால் உச்சகட்டமாக்கப்படுகிறது:*
   1. *அவரது மேஜை* (Table).
   2. *அவரது கண்ணீர்* (Tears).
   3. *அவரது சோதனைகள்* (Trials).
   4. *அவரது மரம்* (Tree).
   5. *அவரது கல்லறை* (Tomb).
   6. *அவரது வெற்றி* (Triumph).

B. *பரிபூரணமான இந்த மனித குமாரன் இன்னமும் வாழ்கின்றார், அவர் உங்களுக்கு உதவ முடியும் (எபி. 4:15, 16ஐக் காணவும்).*

---

*குறிப்புகள்*

[1]*அளவை வைத்துப் பார்க்கும்போது, லூக்கா மற்றும் நடபடிகள் புத்தகங்களை எழுதியவர் புதிய ஏற்பாட்டிற்கு அதிகம் பங்களித்தவராக இருக்கின்றார்.* [2]*நீக்குதலின் இந்தச் செயல்முறையானது மெரில் சி. டென்னீ அவர்களின் New Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 173 *என்ற புத்தகத்தில்*

கலந்துரையாடப்பட்டுள்ளது. [3]லூக்கா மற்றும் நடபடிகள் புத்தகத்தின் எழுத்தாளர்த்துவம் பற்றிய மிகவும் விவரமான கலந்துரையாடலுக்கு, இன்றைக்கான சத்தியம் வெளியிட்டுள்ள "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" என்ற புத்தகத்தின் 19-22 பக்கங்களில் காணவும். [4]இவரது பெயரில் இலத்தீன் வடிவமானது "ஒளியைக் கொண்டு வருபவர்" என்று அர்த்தப்படுகிறது. கிரேக்க மொழியில் "லூக்கா" என்பது, தோன்றிய இடம் ஒன்றைக் குறிப்பிடவும் கூடும்: "from Lucania." (லூக்கேனியாவிலிருந்து.) [5]பிற்காலத்தியக் கையெழுத்துப் பிரதி ஒன்று, அப். 11:28ல் "நாங்கள்" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது. (Bruce Metzger, *A Textual Commentary on the Greek New Testament*, 3rd ed. [New York.: United Bible Societies, 1971], 344-45). [6]லூக்கா 1:1-4ல் லூக்காவின் அறிமுக உரையானது, இவர் இயேசுவைத் தனிப்பட்ட வகையில் சுயமாக அறிந்திருந்தது இல்லை என்று சுட்டிக் காண்பிக்கிறது, ஆனால் ''ஆதிமுதல்'' என்ற வார்த்தைகள் (அவ்வசனப்பகுதியில் இருமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன; 1:2ல் 'ஆரம்ப முதல்' என்றும், 1:3ல் 'ஆதிமுதல்' என்றும் உள்ளது), இவர் சபையின் வரலாற்றுத் தொடக்க காலத்திலேயே கிறிஸ்தவரானார் என்று சுட்டிக்காண்பிக்கின்றன. [7]ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தின்படி, இயேசுவின் தொடக்க கால வாழ்வு பற்றி லூக்கா எழுதுவதற்கு இயேசுவின் தாயான மரியாளே ஆதாரமூலமாக இருந்தார்கள். [8]1 தீமோத்தேயு 5:18ல் (இது கி.பி. சுமார் 65ல் எழுதப்பட்டது), பவுல் மத்தேயு 10:10 அல்லது லூக்கா 10:7ல் இருந்து மேற்கோள் காண்பித்திருக்கலாம். [9]இந்த வசனப்பகுதியை அப். 1:1உடன் ஒப்பிடவும். [10]"புத்தக வெளியீடு" என்பது புத்தகத்தின் பிரதிகளை எடுத்து அவற்றை விநியோகித்தலைக் குறிக்கிறது.

[11]மத்தேயு, மாற்கு, மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷப் புத்தகங்கள் இந்தக் கூற்றில் இருந்து விலக்கப்படுவதாக இருக்கும். [12]லூக்காவின் ஆராய்ச்சியில் அவரைப் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தியிருப்பார். ஆராய்ச்சியில் இருந்து பெற்ற கருத்துக்களை லூக்கா பயன்படுத்துதலில் பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாகவே வழிநடத்தியிருப்பார். [13]அடுத்த பாடத்தில் கலந்துரையாடப்பட்டுள்ள புத்தகத்தின் வலியுறுத்தங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும். [14]ஞானிகள் ஒரு அரசரைக் காணவந்தார்கள் என்று மத்தேயு வலியுறுத்துகையில், மேய்ப்பர்கள் ஒரு குழந்தையைப் பார்க்க வந்தார்கள் என்று லூக்கா வலியுறுத்தினார். [15]ஆவியானவரின் ஊழியத்தின் மீதான இந்த வலியுறுத்தம் நடபடிகளின் புத்தகத்தில் தொடருகிறது. [16]மத்தேயு சுவிசேஷத்தில் லூக்கா சுவிசேஷத்தைக் காட்டிலும் அதிகமான அதிகாரங்கள் உள்ளன, ஆனால் லூக்கா சுவிசேஷத்தில் அதிக விஷயங்கள் அடங்கியுள்ளன. நமது தமிழ்ப் புதிய ஏற்பாட்டில், மத்தேயு சுவிசேஷம் நாற்பத்து நான்கரைப் பக்கங்களும் லூக்கா சுவிசேஷம் சுமார் நாற்பத்து எட்டரைப் பக்கங்களும் கொண்டவையாக உள்ளன.

5

# யோவான் சுவிசேஷம்

## தேவகுமாரனாகிய

## *கிறிஸ்து*

*யோவான் சுவிசேஷமானது சொல்லாடலிலும் பாணியிலும், சுவிசேஷ விவரங்களிலேயே மிகவும் எளிமையானதாக உள்ளது. இது, புதிய ஏற்பாட்டுக் கிரேக்க மொழியைக் கற்றுக்கொள்ளத்தொடங்கும் மாணவர்களுக்குப் பயன்படுத்தப்படும் அளவுக்கு மிகவும் எளிமையான தாக உள்ளது. இதற்கு மறுபுறத்தில், யோவான் சுவிசேஷமானது இது கலந்துரையாடுகின்ற தலைப்புக்களின் கருத்தமைவில், நான்கு சுவிசேஷப் புத்தகங்களிலும் இது பல வழிகளில் அதிகம் சிக்கலுள்ளதாக இருக்கிறது.*

*யோவானின் சுவிசேஷ விவரமானது தனித்தன்மையுடன் நிற்கிறது: இது தனக்கு முற்பட்ட மூன்று சுவிசேஷங்களின் விவரங்களில் இருந்து மிகச் சிறிய அளவே நகலெடுக்கிறது; இது ஒரு தனிச்சிறப்பான முன்னுரையைக் கொண்டுள்ளது (1:1-18) மற்றும் இது ஒரு தனிச் சிறப்பான நோக்க வாக்கியத்தைக் கொண்டுள்ளது (20:30, 31). யோவான் புத்தமானது, முதல் மூன்று புத்தகங்களில் இருந்து மாறுபட்டதாக இருப்பது ஏன் என்பதைப் புரிந்துகொள்ளுவதற்கு, நாம் இது எழுதப்பட்ட சூழ்நிலைகளைப் புரிந்து கொள்வது அவசியமானதாக உள்ளது.*

## யோவான் சுவிசேஷத்திற்கு அறிமுகம்

### இந்த புத்தகத்தின் எழுத்தாளர்

*இந்தப் புத்தகமானது, "இயேசுவுக்கு அன்பாயிருந்தவர் ... இவைகளை எழுதினார்" (யோவா. 21:20, 24) என்று அடையாளப்படுத்துகிறது.[1] அப்போஸ்தலரான யோவானே இந்த சீஷர் என்று தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் நம்பி ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.[2] இரேனியு அவர்கள் முதல் மூன்று சுவிசேஷ விவரங்களைக் குறிப்பிட்டு, "பின்பு கர்த்தரின் மார்பின் மீது சாய்ந்திருந்த அவரது சீஷரும் கூட ஆசியாவில் இருந்த எபேசுவில் தங்கியிருந்தபோது ஒரு சுவிசேஷத்தை வெளியிட்டார்" என்று கூறினார்.[3] இந்தப் புத்தகம் யோவானால் எழுதப்பட்டது என்று குறிப்பிட்டவர்களில் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அந்தியோகியா வைச் சேர்ந்த தெயோபிலுவும், அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த கிளமென்ட்டும், தொர்த்துலியனும் (c. கி.பி. 155-225), ஓரிகனும் மற்றும்*

*ஹிப்போலிட்டஸ்ஸுைம் (c. கி.பி. 170-235) இருந்தார்கள்.*

*இந்த முடிவுக்கு, இப்புத்தகத்தின் உள்ளார்ந்த சான்றும் ஒத்துப் போகிறது.*[4] *இதன் எழுத்தாளர், யூதர்களின் பண்டிகைகள், யூதப்பழக்க வழக்கங்கள், மற்றும் சமாரியர்களுடன் யூதர்களுக்கு இருந்த உறவுமுறைகள் ஆகியவை பற்றிய அறிவுகொண்ட ஒரு யூதராக இருந்தார். மற்றும் இவர் பொதுவாகப் பலஸ்தீனம் மற்றும் குறிப்பாக எருசலேம் பற்றிய உள்ளரங்க மான அறிவுகொண்டிருந்த ஒரு பலஸ்தீனிய யூதராயிருந்தார். இவர் தாம் எழுதிய பல நிகழ்ச்சிகளைக் கண்ணால் கண்ட சாட்சியாக இருந்தார் (1:14; 21:24ஐக் காணவும்). இந்த உண்மைகள் யாவும் அப்போஸ்தலரான யோவானுக்குப் பொருந்துகின்றன.*[5]

*யோவானுடைய வாழ்வின் ஒரு சுருக்கமான குறிப்புரை முறையான தாக உள்ளது: இவரது பெயர், "யெகோவா இரக்கமுள்ளவராயிருந் துள்ளார்" என்று அர்த்தப்படுகிற ஒரு எபிரெய வார்த்தையின் சுருக்கமான வடிவமாக உள்ளது. செபதேயுவும் சலோமியும் இவரது பெற்றோர்களா யிருந்தார்கள் (மாற். 1:19, 20; 16:1 [மாற். 16:1ஐ மத். 27:56உடன் ஒப்பிடவும்]).*[6] *இவரும் இவரது சகோதரரான யாக்கோபும் மீனவர்களாக இருந்தார்கள் (மாற். 1:19, 20) - இவர்கள் பேதுருவுக்குத் தொழிற் கூட்டாளி களாக இருந்தார்கள் (லூக். 5:10). யோவானின் குடும்பம் நல்ல வசதி மிக்கதாக இருந்தது. இவர்கள் கூலியாட்களை வைத்து இருந்தார்கள் (மாற். 1:20), மற்றும் இவர்கள் அரசியல் தொடர்பு உடையவர்களாக இருந்தார் கள். (யோவான் பிரதான ஆசாரியரால் அறியப்பட்டிருந்தார் மற்றும் பிரதான ஆசாரியரின் அரண்மனை முற்றத்திற்குள் வருவதற்குப் பேதுருவுக்கு அனுமதி பெற்றுத்தந்தார் [யோவா. 18:15, 16].)*

*ஒருவேளை, யோவான் 1:35-40ல் பெயர் குறிப்பிடப்படாத சீஷரான யோவான், யோவான் ஸ்நானனை பின்பற்றியவராக இருந்திருக்கலாம். எந்த வகையில் பார்த்தாலும், இவரை இயேசு தமது சீஷர்களில் ஒருவராக இருக்கும்படி அழைத்தார் (மத். 4:18-22). பின்னாட்களில் இவர் பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராகத் தேர்ந்து கொள்ளப்பட்டார் (மத். 10:2). இவர் பொதுவாக அப்போஸ்தலர்கள் எல்லாரிலும் இளையவராகக் கருதப்பட்டார்.*[7]

*யோவான் கர்த்தருடன் ஒரு சிறப்பான உறவுமுறையை மகிழ்வுடன் அனுபவித்தார்: இவர் உள்ளான வட்டத்தில் இருந்த மூவரில் ஒருவராக இருந்தார் (மாற். 5:37-40; 9:2; 14:33) மற்றும் கடைசி இராப்போஜனத் தின்போது கனத்திற்குரிய இடமளிக்கப்பட்டிருந்தார் (யோவா. 13:23). இவர் தம்மை இயேசு மிகவும் அன்புகூர்ந்த சீஷன் என்று குறிப்பிட்டுக் கொண்டார் (13:23; 19:26; 20:2; 21:7, 20).*

*பரிவிரக்கமுள்ள மனிதராயிருந்த யோவான், தம்மை இயேசு அழைத்த போது தீவிரமான உணர்ச்சி வசப்பட்டவராயிருந்தார் (லூக். 9:49-56; மாற். 3:17). அவர் கோப உணர்ச்சி வசப்பட்டவராயிருந்தார் (மாற். 10:35-37). கிறிஸ்து இந்த உணர்வைக் கட்டுப்படுத்தி இதை மேன்மையான பயன்பாடுகளுக்குத் திருப்பக் கூடியவராக இருந்தார். இயேசு மரிப்பதற்குச் சற்று முன்னதாக, தமது தாயை யோவானின் பாதுகாப்பில் ஒப்பவித்தார்*

(யோவா. 19:25-27). கடைசியில் யோவான் அன்பின் அப்போஸ்தலர் என்று அறியப்படலானார். ("அன்பு" என்ற வார்த்தையானது 1 யோவான் நிருபத்தில் ஏறக்குறைய ஐம்பது முறைகள் காணப்படுகிறது.)

சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, யோவான் அப்போஸ்தலர்களின் மத்தியில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைத் தொடர்ந்து பெற்றிருந் தார் (அப். 3:1; 4:19; 8:14; கலா. 2:9, 10). ஏவப்பட்டிராத பாரம்பரியத்தின் படி, எபேசுவில் இவர் கடைசியாக ஊழியம் செய்தார். ரோமர்களின் துன்புறுத்துதல் தொடங்கியபோது, யோவான் எபேசுவில் இருந்து ஏஜியன் கடலின் குறுக்காக இருந்த பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டார் என்று வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இருந்து நாம் அறிகின்றோம் (வெளி. 1:9; 2:1ஐக் காணவும்). தொடக்க காலக் கிறிஸ்தவ எழுத்தாளர் களின் கூற்றுப்படி, டொமீஷியனின் மரணத்தின்போது, யோவான் எபேசு நகருக்குத் திரும்பி வர அனுமதிக்கப்பட்டார், அங்கே அவர் தமது மரணம் வரையிலும் ஊழியம் செய்தார்.[8] இவர் அநேகமாக எபேசு நகரில் வாழ்ந்த போது தமது சுவிசேஷ விவரத்தையும் தமது மூன்று நிருபங்களையும் (1, 2 மற்றும் 3 யோவான்) எழுதியிருப்பார்.

**இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலம்**

மற்ற மூன்று சுவிசேஷ விவரங்கள் எழுதப்பட்டதற்குப் பின்பு யோவான் சுவிசேஷம் எழுதப்பட்டதாக தொடக்க காலக் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் சுட்டிக்காண்பித்தார்கள். முன்பே எடுத்துரைக்கப்பட்ட படி, மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷங்கள் எழுதப்பட்ட பின்பு, யோவான் "ஆசியாவில் இருந்த எபேசு நகரில் வாழ்ந்த வேளையில்" இந்தப் புத்தகத்தை எழுதியதாக இரேனியு அவர்கள் கூறினார்.[9]

யோவான் ஒரு பின்னாளைய சுவிசேஷ விவரத்தை உண்டுபண்ணியது ஏன்?[10] ஒருவேளை, இவர் மற்ற மூன்று சுவிசேஷப் புத்தகங்களுக்கும் துணைப்புத்தகம் ஒன்றை எழுத விரும்பியிருக்கலாம். இவர், ஏற்கனவே மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷப் புத்தகங்களில் ஏற்கனவே கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் நம்பத் தகுந்த கூடுதலான விவரங்களைக் கொடுக்க விரும்பியிருக்கலாம்.

இவர், முதல் விவரங்கள் எழுதப்பட்ட பின்பு வளர்ச்சியடைந்திருந்த தவறான கருத்துக்களுடன் போட்டியிட்டு அவற்றைத் தோல்வியடையச் செய்வதற்காகவும் எழுதினார் என்பது தெளிவு. யோவான் மற்றும் 1 யோவான் புத்தகங்களின் ஒப்பீடு இதைச் சுட்டிக் காண்பிக்கிறது.[11] கள்ளபோதகர்கள் எழும்பி இருந்தார்கள், இவர்கள் இயேசுவே கிறிஸ்து என்பதை மறுதலித்தார்கள் (1 யோவா. 2:22). இவர்கள், கிறிஸ்து மாம்சத்தில் வந்திருந்தது இல்லை (2 யோவா. 7; 1 யோவா. 4:2ஐயும் காணவும்) என்றும் இந்த பூமியின் மீது சஞ்சரித்திருந்த இயேசு, எதிர்பார்க்கப்பட்டிருந்த கிறிஸ்துவாக இருந்தது இல்லை என்றும் போதித்தார்கள்.[12] இவ்விதமாக யோவான், "வார்த்தை [இயேசு[13]] மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (யோவா. 1:14) என்று தைரியமாய் உறுதிப்படுத்துதலைக் கொண்டு தமது சுவிசேஷ விவரத்தைத் தொடங்கினார். "இயேசுவே

*கிறிஸ்து"வாக இருக்கிறார் என்று எல்லாரையும் நம்பச் செய்தல் என்பதே அறிவிக்கப்பட்ட அவரது நோக்கமாக இருந்தது (20:31).*

*மேற்கண்டவைகளை சிந்திக்கும்போது, மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷப் புத்தகங்கள் எழுதப்பட்டுக் காலம் கடந்திருந்தது - அநேகமாகப் பல பத்தாண்டுகள் கடந்திருந்தன - என்பது தெளிவாகிறது. பழைமைவாத எழுத்தாளர்கள் பலர், யோவான் புத்தகம் 90ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.*[14]

**இந்தப் புத்தகத்தின் நோக்கம்**

*நாம் குறிப்பிட்டுள்ளபடி, யோவான் சுவிசேஷப் புத்தகம் தனிச்சிறந்த ஒரு நோக்க வாக்கியத்தைக் கொண்டுள்ளது:*

> *இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (20:30-31).*

*யோவானின் நோக்கமானது நெருங்கிய உறவுபட்டுள்ள மூன்று பகுதி களாகப் பிரிக்கப்படக் கூடும்:*

*(1) யோவான் இயேசுவின் தெய்வீகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக எழுதினார்: "இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாக இருக்கிறார்." இயேசு, தேவனுடைய "ஒரே பேறான குமாரனாயிருக் கின்றார்" (3:16) என்பதை எல்லாரும் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். இயேசுவின் தெய்வீகத்துவம் ஒவ்வொரு பக்கத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (1:1; 8:58; 10:30; 14:9; 20:28 ஆகியவற்றைக் காணவும்). "யோவான் தமது எழுதுகோலை மையில் தோய்த்த ஒவ்வொரு முறையும், பின்வரும் ஜெபத்தை சுவாசித்தார்: 'ஆண்டவரே, நான் எழுதுபவற்றின் மூலமாக மனிதர்களை இயேசுவின் மீது விசுவாசத்திற்குள் கொண்டுவாரும்'*[15] *என்று கூறப்படுகிறது."*

*இயேசுவின் அற்புதங்கள் என்பது யோவானால் அளிக்கப்பட்ட ஒரு நிரூபணமாக உள்ளது. இந்த அற்புதங்களுக்கு "அடையாளங்கள்" (யோவா. 20:30; மற்றும் 2:11; 4:54; 6:2 ஆகியவற்றையும் காணவும்) என்பது யோவானின் வார்த்தையாக உள்ளது:*[16] *இயேசுவின் உரிமைகோருதல்கள் உண்மையாயிருந்தன என்பதை நிரூபிக்க அவைகள் தேவனிடமிருந்து வந்த அடையாளங்களாய் இருந்தன (2:23; 3:2; 4:54; 6:14). இயேசுவால் செய்யப்பட்ட எல்லா அற்புதங்களிலும் யோவான் ஏழு அற்புதங்களை [மட்டும்] தேர்ந்து கொண்டார் (2:1-11; 4:46-54; 5:1-9; 6:14 [வ. 26, 30ஐக் காணவும்], 16-21; 9:1-41; 11:1-45). இவற்றில் இரு அற்புதங்கள் ஒப்பீட்டு சுவிசேஷங்களில் காணப்படுகையில், மற்ற ஐந்தும் யோவானின் சுவிசேஷ விவரங்களுக்கு மட்டுமே உரியவைகளாய் இருக்கின்றன. யோவானின் இந்தத் தேர்ந்துகொள்ளுதல் பற்றி, மெரில் டென்னீ அவர்கள், "இந்த ஏழு அற்புதங்களும் மனிதன் தன் வாழ்வில் செயல்தாக்கத்தை ஏற்படுத்தும்*

வகையில் சட்டங்களையோ அல்லது நிலைமைகளையோ செயல்விளை விக்க அல்லது மாற்ற முடியாதவனாக இருக்கும் பகுதிகளில் நுணுக்கமாக இயக்கப்பட்டன. இந்தப் பகுதிகளில் மனிதன் செயலற்றவனாயிருக்கை யில், இயேசு செயல்படுபவராக இருந்ததை அவர் தாமே நிரூபித்தார் ..." என்று கருத்துத் தெரிவித்தார்.[17]

(2) இயேசுவில் விசுவாசத்தை உண்டாக்குவதற்காக யோவான் எழுதினார்: "நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும்." "விசுவாசித்தல்" என்ற வார்த்தை அதன் பல்வேறு வடிவங்களில், யோவான் சுவிசேஷத்தில் ஏறக்குறைய ஒரு நூறு முறைகள் காணப்படுகிறது. இயேசு தமது உரையைக் கவனித்தவர்களிடம், "நானே அவர் [கிறிஸ்து] என்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்று கூறினார் (யோவா. 8:24ஆ).

"விசுவாசம்" என்ற வார்த்தையினால் யோவான், "மனநிலை இணக்கம்" என்பதை அர்த்தப்படுத்தவில்லை. 1:12ல் இவர், விசுவாசித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் என்ற கருத்துக்களை ஒன்றிற்குப் பதில் இன்னொன்று என்ற வகையில் பயன்படுத்தினார்: "அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." இயேசுவை விசுவாசித்தல் என்றால், கேள்வியெது வும் இன்றி அவரை ஏற்றுக்கொள்ளுதல் என்பதாக உள்ளது. யோவான் 3:36ல், விசுவாசித்தல் மற்றும் கீழ்ப்படிதல் என்ற கருத்துக்களை ஒன்றிற்குப் பதில் இன்னொன்று என்ற வகையில் பயன்படுத்தினார்: "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்கும்." உண்மையான விசுவாசம் என்பது எப்போதுமே கீழ்ப்படிதலில் தன்னை விளக்கப்படுத்துகிறது. 2:24ல் "விசுவாசம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது "நம்பி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[18] ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்றால், தமது சுயத்தின்மீது என்பதற்கு பதிலாக அவர் இயேசுவிலும், அவரது தியாகத்தின் மீதும் நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

(3) மக்கள் ஜீவனை அடையும்படிக்கு யோவான் எழுதினார்: "விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படி யாகவும்." யோவான் "ஜீவன்" என்பதை சுவாசித்தல் மற்றும் வாழ்வின் இயல்பான பிற செயல்முறைகள் ஆகியவற்றின் கருத்தில் பயன்படுத்த வில்லை. மாறாக, இவர் "விசுவாசிக்கு அவரது இரட்சிப்பில் தரப்படுகின்ற எல்லாவற்றின் மொத்தத்தையும்" குறிப்பிட்டார்.[19] யோவான் 17ல், இயேசுவின் ஜெபத்தில், அவர் "ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என்று கூறினார் (17:3).

யோவானின் சுவிசேஷ விவரம் "உலகளாவிய சுவிசேஷம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இவர் யூதப்பழக்க வழக்கங்களைத் தனிச் சிறந்த வகையில் விளக்கப்படுத்தினார் என்ற உண்மையானது (எடுத்துக் காட்டாக,

*2:13; 4:9; 19:31 ஆகியவற்றைக் காணவும்), இவரது இலக்காக இருந்த மக்கள் கூட்டம் இவரது சொந்த இனத்திற்கு அப்பாலும் இருந்தார்கள் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. யோவான் சுவிசேஷத்தின் உலகளாவிய உள்ளத் தூண்டுதலின் காரணமாக, இது அடிக்கடி தனித்த சிறு புத்தகமாக அச்சிடப் பட்டுள்ளது. இந்த வடிவத்தில் இது உலகம் முழுவதிலும் கையளிக்கப் பட்டுள்ளது. இப்போது இருக்கின்ற எல்லா இலக்கியங்களிலும் இதுவே மிகப் பரவலாக விநியோகிக்கப்பட்டதென்று அழைக்கப்படுகிறது.*

***இந்தப் புத்தகத்தின் பண்புகள்***

*யோவான் சுவிசேஷத்தின் தனிச்சிறந்த பல பண்புகள் ஏற்கனவே தரப்பட்டுள்ளன. பெரும்பாலான பிற பண்புகள் யாவும் இதன் நோக்கத் துடன் தொடர்புடையவைகளாக உள்ளன.*

*யோவான் சுவிசேஷத்தில் உள்ள ஏழு "அற்புதங்களுடன்" கூடுதலாக, இயேசுவின் ஏழு "நானே அவர்" என்பவைகள் உள்ளன: இவை தெய்வீகத் துவத்திற்கான ஏழு உரிமைகோருதல்களாகும் (6:35; 8:12, 58; 10:11; 11:25; 14:6; 15:1).[20]*

*ஒப்பீட்டு சுவிசேஷங்களில் செய்யப்படுவதுபோல், இயேசுவின் நடைமுறைச் செய்திகளை வலியுறுத்துவதற்குப் பதிலாக, யோவான் அவரது [இயேசுவின்] இயல்பு மற்றும் ஊழியம் ஆகியவற்றின் மீது மிக ஆழமாக உரைகளைச் சித்தரித்தார்.*

*யோவான் சுவிசேஷத்தில், இயேசுவின் வெளியரங்கமான அறிவித்தல் களின் மீதின்றி, தனிநபர்களுடன் அவரது தனிப்பட்ட, உள்ளரங்கமான கலந்துரையாடல்களின் - நிக்கொதேமுவுடன் (அதி. 3) மற்றும் சமாரியப் பெண்ணுடன் (அதி. 4) போன்றவைகள் - மீதே வலியுறுத்தம் உள்ளது. இருபத்தி ஏழு நேர்முகப் பேட்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அவற்றில் சில விரிவானவைகளாகவும், சில சுருக்கமானவைகளாகவும் உள்ளன.*

*யோவான் சுவிசேஷப் புத்தகம் பல்வகைப்பட்ட தனிநபர்களின் பண்புகளைப் பற்றிய படிப்பை அடக்கியுள்ளது - அவற்றில் பல நிக்கொதேமு (3:1-15; 7:50-52; 19:39), பிலிப்பு (1:43-46; 6:5-7; 14:8-11), தோமா (11:16; 14:5, 6; 20:24-29), மரியாளும் மார்த்தாளும் (11:1-40; 12:2-8) போன்ற மறைவான பாத்திரங்களாகவே உள்ளன. பெரும்பாலான நிகழ்ச்சிகளில், இந்த மக்களைப் பற்றிய குறிப்புகள் விசுவாசத்தின் வளர்ச்சியைக் காண்பிக்கின்றன.*

*சுவிசேஷ விவரங்கள் எல்லாமுமே கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி மாபெரும் வலியுறுத்தம் இடுகின்றன; ஆனால் யோவான் சுவிசேஷம் எஞ்சியுள்ள மற்றவற்றை விட அதிகமாகவும் கூட இவ்வாறு செய்கிறது. இந்த சுவிசேஷ விவரத்தின் முழு அரைப் பகுதியானது சிலுவையில் அறைதல் பற்றிக் கூறுகிறது. இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும் "வேளை" என்று அழைக்கப்படுகிற முடிவு நிறைந்த காலத்தை நோக்கி (2:4; 4:21, 23; 5:25, 28; 7:30; 8:20; 12:23, 27; 13:1) நகருகிறது.*

*யோவான் சுவிசேஷத்தின் தனிச்சிறந்த பிற அம்சங்கள் குறிப்பிடப்*

படக் கூடும்: இந்த ஒரு சுவிசேஷ விவரம் மட்டுமே மனம் மாறுதலை புதுப்பிறப்பு என்று குறிப்பிடுகிறது (3:3, 5), இந்தப் பாடக் கருத்தை யோவான் தமது முதல் நிருபத்தில் தொடர்ந்தார் (1 யோவா. 2:29; 3:9; 4:7; 5:1, 4, 18). இவர் அப்போஸ்தலர்களை வழிநடத்துவதற்கு ஆவியானவரின் வருகை பற்றி வலியுறுத்தினார் (14:16, 17, 26; 15:26; 16:13, 14).

**இந்தப் புத்தகத்தின் பிரிவுகள்**

இயேசுவின் தொடக்க கால ஊழியத்தின் மீதான வலியுறுத்தம் என்பது யோவான் சுவிசேஷத்தின் இன்னுமொரு தனிச்சிறந்த அம்சமாக உள்ளது. ஒப்பீட்டு சுவிசேஷங்களைப் பொறுத்தமட்டில் "மாபெரும் கலிலேய ஊழியம்" என்று அழைக்கப்படுபவற்றிக்கு விரைவாக நகருகின்றன, ஆனால் யோவான் சுவிசேஷமானது எருசலேமிலும் யூதேயாவிலும் இயேசுவின் தொடக்க கால ஊழியம் பற்றிக் கூறுகிறது. இயேசுவின் கலிலேய ஊழியத்தின்போதும்கூட அவர் எருசலேமுக்கு வந்த பயணங்கள் பற்றியும் யோவான் சுவிசேஷம் பதிவு செய்துள்ளது. இந்த வலியுறுத்தங்களின் விளைவாக, யோவான் சுவிசேஷமானது மூன்று (ஒருவேளை நான்கு) பஸ்கா பண்டிகைகள் பற்றிக் குறிப்பிடுகிறது (2:13; 6:4; 11:55-57; 5:1?).[21] யோவான் சுவிசேஷத்தின் எந்த வரைக்குறிப்பும், எருசலேமில் இயேசுவின் ஊழியம்பற்றிய இவரது [யோவானின்] மன ஈடுபாட்டை பிரதிபலிக்க வேண்டும்.

அதிகாரம் 13 முதல் 17 வரையிலும் இயேசுவின் அப்போஸ்தலர் களுக்குத் திருப்பப்பட்ட போதனையின் பெரிய அளவுப் பகுதியின் காரணத்தினால், யோவானின் சுவிசேஷ விவரத்தைப் பல புறக்குறிப்புகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கின்றன: (1) இயேசுவின் பொதுவான ஊழியம் (1:19-12:50); (2) இயேசுவின் தனிப்பட்ட ஊழியம் (13:1-17:26); (3) இயேசுவின் உலகளாவிய ஊழியம் (அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல்) (18:1-21:25). டென்னீ அவர்கள் தமது பிரதான கருத்துக்களுக்கு "C" என்பவற்றைப் பயன்படுத்தி, இயேசுவின் பொதுவான ஊழியத்தைப் பிரித்தமைத்தார்.[22] டென்னீயின் இந்தத் திறவுகோல் வார்த்தைகளை ஷேக்கல்ஃபோர்டு அவர்கள் தழுவியமைத்து பின்வரும் வரைக்குறிப்பை ஏற்படுத்தினார்: முன்னுரை (1:1-18); இயேசுவின் உரிமை கோருதல்கள் பற்றிய ஆழ்ந்த சிந்தனை [Consideration] (1:19-4:54); யூதர்களுடன் விவாதம் [Controversy] (5:1-6:71); யூதர்களுடன் கருத்து மோதல் [Conflict] (7:1-11:53); இயேசுவின் உரிமைகோருதல் மீதான இடர்ப்பாடு [Crisis] (11:54-12:36); சீஷர்களுடன் மாநாடு [Conference] (12:37-17:26); இயேசுவின் ஊழியத்தினுடைய முழுமைப்பாடு [Consummation] (18:1-20:31); பின்னுரை (21:1-25).[23]

யோவான் சுவிசேஷத்தின் பாதிக்கும் மேற்பட்ட பகுதியானது இயேசுவின் மரணத்தை மையம் கொண்டுள்ளது என்பதை வலியுறுத்து வதற்கு, எனது வரைக்குறிப்பில் நான் இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளேன்: (1) இயேசுவின் பொதுவான ஊழியம் மற்றும் (2) அவரது ஊழியத்தின் கடைசி வாரம், இது அவரது மரணத்தைச் சுற்றிச் சுழன்றது.

*முதல் பிரதானப் பிரிவு, எருசலேம் மற்றும் யூதேயாவுக்கு அவரது பயணத்தைச் சித்தரிக்கிறது. இரண்டாவது பிரதானப் பிரிவு, இரு முக்கியப் பகுதிகளைக் கொண்டுள்ளது: (1) அதிகாரம் 13 முதல் 17 வரையிலுள்ள இயேசுவின் சீஷர்களுக்கு அவரது கடைசி வார்த்தைகள் மற்றும், (2) சிலுவையை நோக்கி வழிநடத்திய மற்ற நிகழ்ச்சிகள்.*

---

## யோவான் சுவிசேஷப் புத்தகத்தின் வரைக்குறிப்பு

*அறிமுகம் (முன்னுரை) (1:1-18).*

A. *இயேசுவின் தனிச்சிறந்த தன்மை (வ. 1-5, 14, 16-18ஐக் காணவும்).*

B. *யோவான் ஸ்நானனின் சாட்சி (வ. 6-8, 15ஐக் காணவும்).*

I. *தேவகுமாரனின் ஊழியம்: தயாரிப்பின் மூன்று ஆண்டுகள் (1:19-11:57).*

- A. *அவரது ஊழியத்தின் தொடக்கம் (1:19-2:12)*
  1. *அவரது முதல் சீஷர்கள் (1:19-51)*
     - a. *சாட்சியம்: "இதோ, ... தேவ ஆட்டுக்குட்டி!" - மற்றும் இயேசுவின் ஞானஸ்நானத்திற்கு ஒரு குறிப்பு.*
     - b. *சீஷர்கள்: அந்திரேயா, பேதுரு, பிலிப்பு, நாத்தான்வேல் (மற்றும் யோவான்?).*
  2. *அவரது முதல் அற்புதம் (2:1-11).*
  3. *கப்பர்நகூமுக்கு அவரது முதல் பயணம் (2:12).*
- B. *அவரது தொடக்க கால யூதேயா ஊழியம் (2:13-3:36).*
  1. *எருசலேமுக்கு: பஸ்கா (அவரது ஊழியத்தின்போது முதல் பஸ்கா) (2:13).*
  2. *எருசலேமில் (2:14-3:21):*
     - a. *காசுக்கடைக்காரர்களைத் துரத்துதல் (2:14-17).*
     - b. *உயிர்த்தெழுதல் பற்றிப் போதித்தல் (2:18-22).*
     - c. *அற்புதங்கள் நிகழ்த்துதல் (2:23-25).*
     - d. *நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (3:1-21) - புதிய பிறப்பு பற்றிய அறைகூவல்.*
  3. *யூதேயாவில் (3:22-36).*
     - a. *இயேசு மற்றும் அவரது சீஷர்களின் வெற்றி (3:22; மற்றும் 4:1ஐயும் காணவும்).*
     - b. *யோவானுடைய சீஷர்களின் பொறாமை (3:23-36).*
- C. *கலிலேயா, யூதேயா மற்றும் வேறு இடத்தில் அவரது ஊழியம் (4:1-11:54).*

1. *கலிலேயா செல்லும் வழியில் (4:1-45).*
    a. *பயணம் தொடங்குதல் (4:1-3).*
    b. *பயணம் தடைப்படுதல்: கிணற்றண்டையில் சமாரியப் பெண் (4:4-42).*
    c. *பயணம் நிறைவடைதல் (4:43-45).*
2. *கலிலேயாவில்: ஒரு அதிகாரியின் மகனைக் குணமாக்குதல் (4:46-54).*
3. *பண்டிகைக்காக (இரண்டாவது பஸ்கா?) எருசலேமுக்குத் திரும்புதல் (5:1-47).*
    a. *ஊனமுற்ற ஒரு மனிதர் இயேசுவால் குணமாக்கப்படுதல் - மற்றும் பகை உணர்வு (5:1-17).*
    b. *தேவனுடன் சமமாயிருப்பதாக இயேசுவால் உரிமைகள் கோரப்படுதல் - மற்றும் சாட்சிகள் (5:18-47).*
        (1) *யோவானின் சாட்சி.*
        (2) *இயேசுவின் அற்புதங்களின் சாட்சி.*
        (3) *தேவனின் சாட்சி.*
        (4) *வேத வசனங்களின் சாட்சி.*
4. *கலிலேயாவுக்குத் திரும்புதல் (6:1-71):*
    a. *ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் - இயேசுவை ராஜாவாக்க மக்கள் விரும்புதல் (6:1-15). (6:4ல் ஒரு பஸ்கா குறிப்பிடப்படுகிறது - மூன்றாவது?)*
    b. *தண்ணீரின் மேல் நடத்தல்; மக்கள் திகைத்தல் (6:16-25).*
    c. *ஜீவ அப்பம் பற்றிய போதனை; மக்கள் இயேசுவை விட்டுச் செல்லுதல் (6:26-71).*
        (1) *பலர் விட்டுச் செல்லுதல் (வ. 66).*
        (2) *ஒரு சிலர் நிலைத்திருத்தல் (வ. 67, 68).*
        (3) *ஒருவர் காட்டிக் கொடுத்தல் (வ. 64, 70, 71).*
5. *கூடாரப் பண்டிகைக்காக எருசலேமுக்கு (7:1-10:21).*
    a. *பண்டிகைக்குச் செல்லுதல்; அவரது சகோதரர்களின் அவிசுவாசம் (7:1-13).*
    b. *பண்டிகையில் போதித்தல், ஜீவ தண்ணீர் உள்ளிட்ட போதனை; அவரைக் கவனித்துக் கேட்டவர்களின் நிச்சயமற்றதன்மை (7:14-53).*
    c. *பண்டிகையில் அறைகூவல் விடப்படுதல் - மற்றும் விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணுடன் அவரது செயல்பாட்டில் காணப்படுகிறபடி அவரது இருதயத்தின் மென்மைத் தன்மை (8:1-11).*
    d. *பண்டிகையில் அதிகமான போதனை - மற்றும்*

*அவரது விரோதிகளின் பகை உணர்வு (8:12-59).*

e. *பண்டிகையில் குணமாக்குதல் - பிறவியில் இருந்தே பார்வையற்று இருந்த ஒருவரைக் குணமாக்கியது உள்ளிட்ட நிகழ்ச்சிகள் - மற்றும் அவரது விரோதிகளின் இடர்பாடுகள் (9:1-41).*

f. *நல்ல மேய்ப்பன் பற்றிய போதனை மற்றும் அவரது உரையைக் கேட்டவர்களின் குழப்பம் (10:1-21).*

*6. பிரதிஷ்டைப் பண்டிகைக்காக யூதேயாவில் (10:22-42).*

a. *எருசலேமில் போதித்தல் - மற்றும் அவிசுவாசம் (10:22-39).*

b. *யோர்தானுக்கு அப்பால் (பெரேயாவுக்குள்) பின்வாங்குதல் - மற்றும் விசுவாசம் (10:40-42).*

*7. நெருங்கிய நண்பர்களுக்கு உதவுவதற்காக (எருசலேமுக்கு அருகில் இருந்த) பெத்தானிக்கு (11:1-46):*

a. *வற்புறுத்தும் ஒரு வேண்டுகோள் (11:1-17).*

b. *தூண்டி இயக்குவிக்கும் ஒரு உயிர்த்தெழுதல் (11:18-45).*

c. *எதிர்பார்க்கக் கூடிய ஒரு பதில்செயல் (11:46-53).*

*8. யூதேயாவின் வடக்குப் பகுதிக்கு(எப்பிராயீமுக்கு)ப் பின்னிட்டுச் செல்லுதல் (11:54).*

D. *அவரது ஊழியத்தின் முடிவை நெருங்குதல்: கடைசிப் பஸ்கா (நான்காவது?) (11:55-57).*

II. *தேவகுமாரனின் ஊழியம்: பாடுகளின் ஒரு வாரம் (12:1-20:29).*

A. *இயேசு எருசலேமுக்குச் செல்லுதல் (12:1-50).*

*1. பெத்தானியில் அபிஷேகம் செய்விக்கப்படுதல் (12:1-11).*

*2. எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசம் (12:12-19).*

*3. எருசலேமில் போதித்தல் (12:20-50).*

B. *இயேசு தமது சீஷர்களுடன் (13:1-17:26).*

*1. கடைசி இராப்போஜனம் (13:1-38).*

a. *பாதங்கள் கழுவுதல்.*

b. *காட்டிக் கொடுக்கப்படுதலை முன்னுரைத்தல்.*

*2. மாபெரும் பிரியாவிடை உரை (14:1-16:33): இயேசு பின்வருபவற்றைப் போதித்தார்:*

a. *அவரது மரணம்.*

b. *திராட்சச் செடியும் கிளைகளும்.*

c. *பரிசுத்த ஆவியானவரின் வருகை.*

*3. ஒருமைப்பாட்டிற்காக ஜெபம் (17:1-26).*

C. *சிலுவையில் இயேசு (18:1-19:42).*

1. *அவர் மீதான விசாரணைகள் (18:1-19:15).*
    a. *யூதாஸினால் காட்டிக்கொடுக்கப்படுதல் (18:1-11).*
    b. *அன்னா மற்றும் காய்பா ஆகியோரால் விசாரிக்கப்படுதல் (18:12-24).*
    c. *பேதுருவினால் மறுதலிக்கப்படுதல் (18:25-27).*
    d. *பிலாத்துவினால் விசாரிக்கப்படுதல் (18:28-40).*
    e. *போர்வீரர்களினால் அடிக்கப்படுதல் (19:1-15).*
2. *அவர் சிலுவையில் அறையப்படுதல் (19:16-30).*
3. *அவரது அடக்கம் (19:31-42).*

D. *இயேசு உயிர்த்தெழுந்தார்! (20:1-29).*
1. *உயிர்த்தெழுந்த பின்பு மகதலேனா மரியாளுக்குத் தரிசனம் (20:1-18).*
2. *உயிர்த்தெழுந்த பின்பு தமது சீஷர்களுக்குத் தரிசனங்கள் (20:19-29).*

*முடிவுரை (20:30-21:25).*

A. *நோக்கத்தின் எடுத்துரைப்பு (20:30, 31).*
B. *பேதுருவுக்கு ஒரு விசேஷித்த பாடம் (உயிர்த்தெழுந்த பின்பு கலிலேயாக் கடலோரத்தில் தரிசனம்) (21:1-17).*
C. *எழுத்தாளர் பற்றிய ஒரு எடுத்துரைப்பு (21:18-24).*
D. *கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய ஒரு கடைசி எடுத்துரைப்பு (21:25).*

---

*குறிப்புகள்*

[1]*வசனங்கள் 20 முதல் 23 வரை உள்ள பகுதியானது, "இயேசு மிகவும் அன்பு செய்த சீஷர்" நீண்ட நாட்கள் உயிர் வாழ்வார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. இது, அப்போஸ்தலரான யோவான் இந்தப் புத்தகத்தை எழுதினார் என்பதற்கு மறைமுகமான ஆதாரமாக உள்ளது, ஏனென்றால் ஏவுதல் பெற்றிராத பாரம் பரியத்தின்படி, யோவான் ஒருவர் மட்டுமே இயற்கையான முறையில் மரணம் அடைந்த ஒரே அப்போஸ்தலராக இருந்தார்.* [2]*யோவான் இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்று வழக்கமாகக் குறிப்பிடப் படுவதை மறுத்து அவர் இதை எழுதவில்லை என்று நிரூபிக்க முயற்சி செய்வதற்குச் சிலர் பாப்பியாஸின் எழுத்துக்களில் உள்ள ஒரு மறைவான குறிப்பைப் பயன் படுத்தியிருக்கின்றார்கள். ஆயினும், பாப்பியாஸ் மாறுபட்ட இரண்டு யோவான் களைக் குறிப்பிட்டார் என்பதற்கு வற்புறுத்தும் ஆதாரம் எதுவும் இருப்பதில்லை - அல்லது அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தால், நான்காவது சுவிசேஷத்தை யோவான் எழுதவில்லை என்று அவர் நம்பினார் என்பதற்கு ஆதாரம் இல்லை.* [3]Irenaeus *Against Heresies* 3.1.1. [4]*இதைப் பற்றிய விரிவான கலந்துரையாடல் ஒன்று (இணையாக நிற்கும் வேத வசனங்களுடன்)* Don Shackelford, "John," *New Testament Survey*, ed. Don Shackelford (Searcy, Ark.: Harding University, 1987), 151-53 *என்ற புத்தகத்தில் உள்ளது.* [5]*எழுத்தாளர் பற்றிய இந்த மற்றும் பிற விவரங்கள், சாத்தியக்கூறுள்ள மற்ற*

*எழுத்தாளர்களுக்குப் பொருந்துவது இல்லை என்றும் மெரில் டென்னீ அவர்கள் குறிப்பிட்டார்* (Merrill C. Tenney, *New Testament Survey* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961], 187). [6]*சலோமியும் இயேசுவின் தாயாரும் உறவினர்களாய் இருந்ததாகச் சிலர் நினைக்கின்றார்கள் (மாற். 15:40ஐயும் யோவா. 19:25ஐயும் ஒப்பிட்டுக் காணவும்); அப்படியிருந்தால், இயேசுவும் யோவானும் ஒன்றுவிட்ட சகோதரர்களாய் இருந்தார்கள் என்றாகிறது. இது, இயேசு ஏன் தமது தாயாரை யோவானின் கண்காணிப்பில் விட்டார் என்பதை விளக்கப்படுத்த உதவும். [7]இவர் பேதுருவைக் காட்டிலும் வேகமாய் ஓட முடிந்தது என்பது இந்த முடிவுக்கு ஒரு காரணமாக உள்ளது (யோவா. 20:4). கிடைக்கின்ற மிகச் சிறந்த ஆதாரத்தின்படி, இவர் மற்ற எந்தச் சீஷரைக் காட்டிலும் அதிக நாட்கள் உயிர் வாழ்ந்தார் என்பது இன்னொரு காரணமாக உள்ளது. இவர் இயேசுவைப் பின்பற்றும்படி அழைக்கப்பட்டபோது இருபத்து ஐந்து வயதுடையவராயிருந்தார் என்று சிலர் மதிப்பிட்டுள்ளார்கள். [8]ஒரு (ஏவுதல் பெற்றிராத) தொடக்க கால எழுத்தாளரின் கூற்றுப்படி, யோவான் வேத சாட்சியாக மரித்தார்; ஆனால் தொடக்க காலத்தில் இருந்த பெரும்பாலான எழுத்தாளர்கள், இவர் எபேசுவில் வயது முதிர்ந்தவராக மரித்தார் என்று கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.* [9]Irenaeus *Against Heresies* 3.1.1. [10]*யோவான் தமது சுவிசேஷ விவரத்தை ஏற்படுத்தியது தேவனுடைய சித்தமா யிருந்தது என்பதாலும், இவர் இவ்வாறு செய்யும்படி பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டார் என்பதாலும் இதை எழுதினார் என்றே நிறைவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.*

[11]*யோவான் சுவிசேஷத்திற்கும் 1 யோவான் நிருபத்திற்கும் இடையில் ஒரு நெருங்கிய உறவு உள்ளது. எடுத்துக்காட்டாக, இவற்றின் தொடக்க வார்த்தைகளை ஒப்பிட்டுக் காணவும் (யோவா. 1:1, 2, 14; 1 யோவா. 1:1-3).* [12]*இன்றைய நாட்களில் பல மதப்பிரிவினர் கிறிஸ்துவைப் பற்றிப் பல தவறான கருத்துக்களை உரிமைகோருகின்றார்கள், எனவே யோவானின் வலியுறுத்தல் இன்னமும் அவசியமாகிறது.* [13]*சந்தர்ப்பப் பொருளானது, யோவான் இயேசுவைப் பற்றிப் பேசினார் என்று காண்பிக்கிறது.* [14]*விடுதலையியல் கல்வியாளர்கள் சிலர் இந்தப் புத்தகமானது, இரண்டாம் நூற்றாண்டில், அறியப்படாத ஒரு எழுத்தாளரால் (ஒருவேளை, யோவான் என்று பெயர் கொண்டவரால்) எழுதப்பட்டதாகக் கூற முயற்சி செய்கின்றார்கள். ஆயினும், காலத்தில் மிகவும் முற்பட்ட புதிய ஏற்பாட்டின் சிறுபகுதியொன்றில், ஒரு சிறிய பாப்பிரஸ் துண்டு ஒன்றில் யோவான் 18:31-33, 37, 38 வசனங்கள் அடங்கியுள்ளது. இது இரண்டாம் நூற்றாண்டின் முதல் பாதிப்பகுதியில் எகிப்து நாட்டில் சுற்றோட்டத்திற்கு விடப்பட்டிருந்த கையெழுத்துப் பிரதியின் பாகமாக உள்ளது. இது கி.பி. சுமார் 125ம் ஆண்டைச் சேர்ந்ததாகத் தேதியிடப்பட்டுள்ளது. இது, [யோவான் சுவிசேஷத்தின்] மூலப்பிரதியானது முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று குறிப்பிடுவதாயிருக்கும்.* [15]*இதை எழுதியது யார் என்று அறியப்படவில்லை.* Quoted in Eric W. Hayden, *Preaching Through the Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1964), 193. [16]*வேதாகமத்தில் அற்புதங்கள், "அற்புதங்கள்," "பலத்த செய்கைகள்," மற்றும் "அடையாளங்கள்" என்று அழைக்கப்படுகின்றன (மத். 11:20; மாற். 16:20; யோவா. 4:48). "அற்புதம்" என்ற வார்த்தையானது நடந்த நிகழ்ச்சியின் இயற்கைக்கு மாறான இயல்பை வெளிப்படுத்துகிறது; "பலத்த செய்கை" என்ற வார்த்தையானது அந்த அற்புதங்களின் பின்னணியில் இருந்த செயல்விளைவை வலியுறுத்துகிறது, "அடையாளம்" என்ற வார்த்தையானது அந்த அற்புதங்களின் நோக்கத்தைக் குறிப்பிடுகிறது. யூதர்கள் "அடையாளத்தை" விரும்பினார்கள் என்பதைக் கவனிக்க வும் (மத். 12:38; 16:1 ஆகியவற்றைக் காணவும்; மற்றும் 1 கொரி.*

*1:22ஐயும் காணவும்).* [17]Tenney, 190. [18]NASB *மற்றும்* NIV *ஆகியவற்றில்* "entrust" *என்ற வார்த்தையின் வடிவங்கள் உள்ளன.* Amplified Bible *என்ற புத்தகத்தில்* "did not trust Himself to them" *என்றுள்ளது.* [19]Tenney, 190-91. [20]*"நானே" என்ற இந்தக் கூற்றுகள் ஒவ்வொன்றின் தனிச் சிறப்பும் இந்தப் பாடத்தொடரின் பின் வரும் புத்தகங்களில் கலந்துரையாடப்படும்.*

[21]*இயேசுவின் ஊழியத்தின் கால அளவு பற்றிய கற்றறிந்த யூகங்கள் இந்த நான்கு குறிப்புகளின் அடிப்படையில் அமைந்துள்ளன. (இந்தப் புத்தகத்தில் "கிறிஸ்துவின் சொந்த ஊழியம் எவ்வளவு நாட்கள் நடைபெற்றது?" என்ற துணைப்பாடத்தில் காணவும்.) இந்தக் குறிப்புகளின் முக்கியத்துவத்தின் காரணமாக, இந்தப் பாடத்தின் பின்பகுதியில் இவை பற்றிய மறைமுகமான கருத்துக்கள் சாய்வெழுத்துக்களில் தரப்பட்டுள்ளன.* [22]Tenney, 192. [23]Shackelford, 153-55.